52-2

LIFE OF

# SRI THYAGARAJA

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR KARAIKUDI)
(PHONE 436846)
1151

M. S. KRISHNA AIYER

A.NO: 1151
Q1: 332 U

Sri Krishna Publishing House, Mylapore.

52-2
919
1151

Sri Krishna Series No. 2

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்

# ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் :: :: :: திவ்விய சரிதம்

மாந்தை - சா. கிருஷ்ணயயர்

எழுதியது

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

இரண்டாம் பதிப்பு

ஸ்ரீ கிருஷ்ண பப்ளிஷிங் ஹௌஸ்

மயிலாப்பூர்.

விலை அணு] 1932 [எட்டு

FIRST EDITION 1931

SECOND EDITION 1932

APPROVID BY THE TEXT-BOOK COMMITTEE FOR SCHOOL USE


Vide Fort St. George Gezettee Page 674, Part I-B, Dated 10-11-31.

**All rights reserved by the Publishers.**

ஸ்ரீ

ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திர மௌளீச்வராய நம:

கும்பகோணத்தில் விளங்கா நிற்கும் ஸ்ரீ காஞ்சி காமகோடி
பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்
ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய ஸ்ரீ சந்திர
சேகரேந்திர ஸரஸ்வதி அவர்களின் பாதார
விந்தங்களில் பக்தி பூர்வமாக தாஸன்
அநந்த கோடி நமஸ்காரம்:



புவனமிதிற் கலைமகளே ஆணுருவங்
 கொளநினைந்து போந்தா ளென்னைக்
கவனமொடு புலவோர்கள் தொழுதேத்தும்
 சங்கரனே! கருணைக் கோவே!
அவனிமிசை யொருபொருளு மல்லாத
 நாயடியேன் ஆசை யுந்ததந்த
நவமுமிலா நூலிதனை நாதனே!
 எற்றெந்தன் நவை தீர்ப்பாயே!

தாஸன்,

**மாந்தை - சா. கிருஷ்ணன்.**

|| श्रीः ||

श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्य
श्रीमच्छंकर भगवत्पाद प्रतिष्ठित
श्रीकाञ्ची कामकोटि पीठाधिप जगद्गुरु
श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादैः

அஸ்மதத்யந்த ப்ரிய சிஷ்யரான மாந்தை - சா. கிருஷ்ணய்யருக்கு ஸர்வாபீஷ்டங்களும் ஸித்திக்குமாறு நாராயண ஸ்மரணை.

பரம பாகவதோத்தமராக இருந்து பிரம்மீபாவ (ब्रह्मीभाव)த்தை அடைந்த மஹா புருஷராகிய ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் அவர்களின் பக்திரஸம் மிகுந்த உத்தம சரித்திரத்தை ஸகல ஜனங்களும் எளிதில் அறிந்து கடைத்தேறும்படி "ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் திவ்விய சரிதம்" என்னும் பெயருள்ள தேச பாஷா புஸ்தகம் ஒன்றைத் தாங்கள் வெளியிட்டிருப்பதை அறிந்து மிகவும் ஸந்தோஷிக்கிறோம். ஒவ்வொரு ஆஸ்திகனும் அவசியம் அறிந்துகொள்ளவேண்டியதான இந்த கிரந்தத்தின் பிரசாரத்தால் லோகோபகாரம் செய்திருக்கிற தாங்கள் ஸ்ரீ சந்திர மௌளீசுவர கிருபையால் சிரேயஸ்களை அடைய வேண்டியது.

முகாம் - குணம்பட்டு,
ஆங்கீரஸஹு மாசிமீ ௰௩ உ.

நாராயண ஸ்மரணை.



மாந்தை-சா. கிருஷ்ணய்யர்.

# AN APPRECIATION.

## Sangeetha Vidwan Tiger K. Varadachariar.

I have great plesure in expressing the higher thoughts, elucidation and the most compact form of the *'Life of Sri Tyagaraja Swamigal'* in Tamil written by Mr. M. S. Krishna Iyer who needs no special introduction to the Tamil world. I am also proud enough to say that I know him in person. His talents in grouping up of matters connected with the present work are highly commendable (both) by the professionals as well as the public. I believe this volume will give all the necessary and important information about the life of the saint and singer and will attract every class of music-loving public.

With my hearty prayers to Sri Ramachandra to endow the author with his ever-pouring blessings of long life and prosperity, I wish the public will not only give sufficient encouragement to the present one, but also expect some more publications from the same pen.

Mylapore }
27-8-'31. }

(Sd) K. VARADACHARI.

உ

திருவருள் துணை.

# முன்னுரை

சீர் சிறக்கும் உலகில் மாந்தர் என்னோட்டவர் எம் மதத்தினராயினும், செவிக்கினிய கீதத்திற்கு மயங்கி வசப்படாதார் இல்லை. 'கீதத்திற்கு உருகி வயப்படா நெஞ்சம்—கொலைத் தொழிலுக் கஞ்சா'தென்பது மேனாட்டாரது கொள்கையுமாகும். இயற்கை, செயற்கை எனக் கீதம் இருவகைப்படும். குயில், வானம்பாடி, வண்டு முதலிய பறவைகளினுடையவும்—விலங்கு முதலிய மற்றுஞ்சில பிராணிகளுடையவும் தத்தம் ஜாதி இயல்புடை நாதமும், காற்றடிப்பதால் விசும்பிலெழும் பல்வகை ஓசையும் இயற்கைக் கீதமாகும். அதைக் கூர்ந்து கவனிக்கும் எவரும் 'ப்ரஹ்மானந்தத்தை' அனுபவிப்பதற் கையமில்லை. செயற்கைக் கீதமோ, உத்தமம், மத்திமம், அதமம், அதமாதமம் என நால்வகைத்து. அவற்றுள் உத்தம கீதமே 'ஸங்கீத' மெனத்தகும். ஸங்கீதமானது—வீணை, வேணு, முந்தை நல்வினைப்பயனால் கிடைக்கும் இனிய சாரீரம் இவைகளிலிருந்து கடவுளளித்த அறிவைக் கொண்டு நாதத்தை அமைத்து வெளியிடுவதாகும். பின்னும், பரமனது திருநாமங்களையும்—அருட் குணங்களையும்—மனத்திற்கும்—மக்களுக்கும் அறிவூட்டும் சாந்தம், இறைவன்மாட்டன்பு, உயர்குண நற்போதனை முதலிய சிறந்த பொருள்களையும் தன்னகத்துக் கொண்டும் பாடுவோர்க்கும் கேட்போர்க்கும் இருமையிலும் திகட்டாத அழிவற்ற இன்பத்தைத்தரும்'ஸாஹித்ய'த்துடன் சிறந்து விளங்கும். பொருளற்ற 'ஸ்வர ஜாதிகள்' 'ரவைஜாதிகள்' மட்டுமே நிறைந்து செவிக்கு மட்டும் கேட்குமளவு ஒருவகைப் போலி இன்பத்தைத் தருவது மத்திம கீத

மாகும். தாம் பாடும் கீதத்திலுள்ள பதத்தையோ—பொருளையோ, பொதுவாகப் பாஷையையோ உணராமல், 'தலைப் பாகைக்குத்—தலையைச் சரிப்படுத்திக் கொள்வதுபோல' ஸாஹித்ய லளித பதங்களைச் சிதைத்தும், அதன் பொருளை மென்று தின்றும், இவ்வுலகில் பெறும் அற்பமாகிய புகழ், பொருள், முதலியவற்றிற்காக 'வியாபாரப் பண்டம்'போல விற்பனை மட்டுஞ் செய்து, 'ஸ்வானுபூதி' சிறிது மிலாது பாடுவோரது கீதம் அதம கீதமாகும். கடவுளின் புகழோ, திருப்பெயரோ சிறிதும் ஸம்பந்தப் படாமலும், பாடுவோர் கேட்போர் இருவரது மனத்தையும், காமக்குரோதாதி தமோகுணப் படுகுழியில் வீழ்த்தும் சிங்கார—விடர்களின் பாழும் 'அழுகைப்' பாட்டுக்களும், அழிபொருள் அவாக்கொடு—வீணே பாழாகும் நரஸ்துதிப் பாட்டுக்களும் அதமாதமம் ஆகும். அதனைக் 'கீத'மென்றுரைத்தலும் தகாது.

நிற்க அத்தகைய உத்தம ஸங்கீதத்தை, வாணிதேவியும், நாரதரும், இராவணனும், கண்ணனும், இக்கலியில் மானிடருள் நாயன்மார், ஆழ்வார்கள், ராமதாஸர், கபீர்தாஸர் முதலிய கடவுளடியவர்களும் பாடிப் பரவச் செய்தன ரெனினும், ஒவ்வொருவர் ஒவ்வொன்றைப் பற்றிச் சென்றன ரென்றே சொல்லலாம். சிலர் நாத ஸுகத்திலேயே நின்றனர்; சிலர் பக்தி யொன்றுடன் நின்றனர்; சிலர் ஸாஹித்யத்தை மட்டும் குவித்தனர். எல்லாம் பொருந்தப் பாடினருள், ஸ்ரீராம பக்தர் தியாகய்யர் அவர்களே முதன்மையாய் கணிக்கத்தக்கவர் என்பதில் இரண்டு கக்ஷி இருக்க முடியா தன்றோ?

அத்தகைய நமது ஐயர் அவர்களின் சரிதத்தை 'அங்குக் கொஞ்சம் இங்குக்கொஞ்ச'மாய்த் தவிர இதுகாறும் ஒருவரும் விரிவாய் பிரமாணங்களுடன், நற்தமிழில் எழுதி வெளியிட வில்

லேயே எனப் பல ஸங்கீத வித்துவான்களோடு கலந்து நானும் குறைப்பட்ட துண்டு. இந்த அழகிய நூலைக் கண்டவுடன் அக்குறை நீங்கும் நற்காலம் வந்ததென்று என் மனம் புளகித்தது. இந்நூலைப் படிக்கும் ஒவ்வொருவரும், என்னைப் போலவே—இதில் வர்ணிக்கப்படும் ஒவ்வொரு சரித்திர ஸம்பவமும்--வெறும் மொழிகள் சேர்ந்த 'தியாகய்யர் அவர்களின் சரித' மென்றெண்ணாமல், உண்மையிற் கண்ணெதிரே நடப்பதாகவே தோன்றுவதை ஆய்ந்தறிந்து அகமிக மகிழ்வெய்துவரென்பது திண்ணம்.

இவ்வமிழ்தினு மினிய வசன நூலை எழுதிய மாந்தை ஸ்ரீயுத. ஸ்வா—கிருஷ்ணய்யர் அவர்கள்—தமிழ் மொழியுணர்ந்த நம் நாட்டு ஸஹோதர ஸஹோதரிகளுக்குப் புதியவரன்று. யாவரும் சிறியேனாகிய என்னைக் காட்டிலும் இவரை நன் கறிவரென்பது எனது துணிபு. புராண சரிதங்களும், நற்குண போதனைகளும் விரவிய திரு கிருஷ்ணய்யரது வியாஸங்களால் அலங்கரிக்கப்படாத தமிழ் மொழிப் பத்திரிகைகளே—தினசரி—வார—மாதாந்தப் பத்திரிகைகளே இல்லையென்பது 'அதிசயோக்தி'யாகாது. அல்லும் பகலும் அனவரதம் தண்டமிழ் வளர்ச்சியில் அடங்கா ஆர்வங்கொண்டு உழைக்கும் ஸ்ரீமான் ஐயரது இப்பணிக்குத் தமிழுலகம் என்றும் நன்றியுடையதா யிருக்குமாக. 'ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீ'ரன்ன இவரது மனத்தடத்தில் ஊற்றெடுக்குஞ் சிறந்த நற்குண ஒழுக்கங்களைத், தீஞ்சுவைச் செந்தமிழ் மொழி வாயிலாக இது போன்ற பல நூல்களாக்கி நந்தமிழ் நாட்டிற்குதவ எல்லாம் வல்ல இறைவன் அருள் சுரப்பாராக.

இங்ஙனம்,
P. R. சிவன்,
மயிலாப்பூர்.

# சிறப்புரை

அன்பார்ந்த சோதரர் ஸ்ரீமான் கிருஷ்ணய்யரால் வரையப்பட்டு, எங்கும் நிறைந்துள்ள பரம் பொருளினது அருளால் கூடிய விரைவில் நீண்டு அகண்ட உலகின்கண் வெளிவரவிருக்கும் மகான் தியாகப் பிரமத்தினது சரித்திரத்தின் கையெழுத்துப் பிரதி ஒன்றைப் பார்க்கும் பாக்கியம் தாஸனுக்குச் சமீபத்தில் கிடைத்தது. அச்சரித்திரத்தை உட்புகுந்து கவனிக்குங்கால் எங்கும் வியாபித்துள்ள நாதப் பிரம்மமே, இக்கொடிய கலியில் ஸகல ஜீவன்களும் 'சௌக்கியம், சாந்தம், பேரின்பம்' இவைகளை முறையே அடைந்து தன்னுள் இரண்டறக் கலக்கும் பொருட்டு, மானிட வுருவங்கொண்ட தியாகப் பிரம்மத்தை ஓர் கருவியாகக் கொண்டு தனது சக்தியைப் பல வாயிரக் கீர்த்தனங்களின் வாயிலாக வெளியிட்டிருப்பதாகப் புலப்படுகிறது. இக்கிரந்த கர்த்தா ஸ்ரீமான் கிருஷ்ணய்யர், அம்மகானின் சரித்திரத்தைப் பற்பல கீர்த்தனங்களின் ஆதாரங்களைக் கொண்டும், மற்றுமுள்ள பல அநுபவிகளின் வாக்கியங்களினாலும், பாமரர்களும் எளிதில் அறிந்து கொள்ளுமாறு நன்கு விளக்கி யிருப்பது சாலவும் மெச்சத்தக்கது. தவிர, பிரணவ ஸ்வரூபத்தை மிகுதியாகக் கொண்ட சங்கீதத்தின், 'மோக்ஷத்தன்மை, பெருமை, நாம ஸங்கீர்த்தனம், பஜனை முதலியவைகள் பற்றி இந்நூலில், எனது நண்பர் கூறியிருப்பது எல்லா ஸ்திரீ—புருஷர்களையும் கான வாயிலாக அங்கிங்கெனாதபடி யெங்கும் பிரகாசமான வோர் சாசு-

வதமான நாத நகரை நாடச் செய்யுமென்பது பணிவுள்ள தாஸனது துணிபு. முடிவில், பக்தி நிறைந்துள்ள இவ்வுன்னத நூலை மாட்சிமை மிகுந்த துரைத்தனத்தார் அங்கீகரிக்கவும், தமிழுலகினர் பாராட்டவும் அந்நாதப் பிரம்மத்தையே மனமுடன் பிரார்த்திக்கின்றனன்.

சேங்காலிபுரம்.
22-7-31.

குக தாஸ். (S. V. NATARAJAN)
Musician and Member, the "Phil-harmonic Society" of Western India.

# ஆசிரியர் குறிப்பு

சங்கீதம்! உன்னிடம் மயக்குறுத மக்கள் யாவர்? மனிதனின் உள்ளக்கிளர்ச்சியை எழுப்பி இன்ப வெள்ளத்துள் திளைக்க வைக்கும் ஆற்றல் உன்னிலும் வேறு எதற்குளது? நாடும், மொழியும், நாகரிகமும், நடையுடைப் போக்குகளும் வழிபடு கடவுளும், வாழ்வுறு சமயமும் வெவ்வேறாயினும் யாவரும் உன்னடிமைகளே யாவர்! எல்லா மக்களுக்கும் நீ யொரு பொதுப் பொருள். இறைவனது திருவடி நிழலை அடைய வேண்டுவதே ஒவ்வொரு சமயத்தினுடைய நோக்கமாவது போல, ஒவ்வொருவரது மனக்கிலேசத்தையும் போக்கி இன்பமருளுவதற்கு இன்றியமையாத துணைக்கருவியாய் நீ நிலவுகின்றாய்! இசையில்லா பக்தி—கவி, உப்பில்லாச் சோறுபோல. ஏழை செல்வந்தன் என்ற வேறுபாடு மட்டுமின்றி, உயர்திணை அஃறிணை எனும் வேற்றுமையும் இல்லாமல், எவரும் நின்பால் வயப்பட்டு அடிமையாகிய உன் வழிச்சென்று, ஒரு நிலைப்பட்டு நிற்கின்றனர். வாழ்க்கைத் துன்பங்களிலாழ்ந்து அழுங்கியுள்ள மனத்தை, நீ உனது ஆற்றலால் ஊக்கி உவப்பிக்கின்றாய்! மனப்பிணியையே யன்றி உடற்பிணியையும் போக்கவல்ல ஆற்றல் உனக்குளதென்று அமெரிக்க நாட்டறிஞர் ஒருவர் கண்டுரைக்கின்றனர்! உன் சுவையாலன்றோ தேவாரங்களும் திருவாசகமும் திருவாய்மொழியும் பிற வாய் மொழிகளும் உலகில் மேலோங்கி மிளிர்கின்றன!

உலகில் இன்றளவும் தோன்றியுள்ள சமயங்கள் எத்தனையோ பல. அவற்றின் அருமறை நூல்களும் அளவற்றன. அவற்றுள் கூறப்பெற்றுள்ள உண்மைகள் இசையும் பொருளு

மாகிய இரண்டும் இயைந்தவை. அன்பெனும்பாகால் திரட்டப் பெற்று, இசையும் இன்பமும் அன்பும் ததும்பிய இறைவன் துதியான பாடல்களே சங்கீர்த்தனத்திற் குரியன. அச்சங் கீர்த்தனத்தை உலகிற் பரவச்செய்த மகான்கள் பலருள், திருவையாற்றின்கண் திகழ்ந்த ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளைப் பற்றி யறியாதார் இலர். அவரது சரிதத்தைக் கோவை யாகவும், காலவரையறையோடும் விளக்கமாகவும் எழுதிய நூல் இதுவரை தமிழகத்தில் ஏதுமில்லை. சுவாமிகளின் சிஷ்யபரம் பரையில் வந்த சிலரால், தெரிய வந்தனவான சரித்திரத்தின், சிற்சில பகுதிகளே யன்றி, வேறு எவ்வித சான்றும் கிடைத்தற் கிலவாதலின், கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு இச்சிறுநூல் எழுதப்பெற் றிருக்கின்றது. கீர்த்தனங்கள் பாடப்பெற்ற சந் தர்ப்பங்களும், சில உருக்கமான கீர்த்தனங்களின் பொருளும் ஏற்றவாறு விளக்கப் பெற்றுள்ளன.

இசைப்புலமையும் எழுதும் வன்மையும் இல்லாத யான், இப்பெரியார் சரிதையை ஆசைபற்றி எழுதத் துணிந் தனனே யன்றி வேறல்ல. சில அன்பர்களின் தூண்டுதலும், இதனை யான் எழுதக் காரணமாய் நின்றது. இதிற் காணப் படும் குற்றங் குறைகளை அறிஞர் பொறுத்தருள வேண்டுகின் றேன். இப்புத்தகம் அச்சேறி வெளிவர உதவிய அன்பர்கட்கு எனது மனமார்ந்த வந்தனம் உரியதாகும்.

மயிலை,
27-7-31.

இங்ஙனம்,
மாங்கை. சா. கிருஷ்ணய்யர்.



ஸ்ரீ தியாகப்ரம்மம்

"மத்பக்தா யத்ர காயந்தி
தத்ர திஷ்ட்டாமி நாரத"

By the kind Courtesy of Mr. V. S. Sharma, Artist, Mylapore, Madras.

உ

ஸ்ரீராமஜயம்.

# ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் திவ்விய சரிதம்.

## முன்னுரை

சீர்மிகு திருவை யாற்றில் சிந்தையாற் றூய னாகி
ஏர்மிகு விராம நாம மெங்குமே முழங்கப் போக்கி
வாரிசை வளங்க ளோங்க வள்ளலின் காதை கோத்த
பார்புகழ் தியாக ராஜன் பதங்களை வணங்கல் செய்வாம்.

சைதந்யம் ஸர்வ பூதாநாம்
நிர்வ்ருதிர் ஜக தாத்மநாம் |
நாத ப்ரம்ம ததா நந்தம்
அத்விதீயம் உபாஸ்மஹே ||

எது அனைத்துச் சீவரிடத்தும் ஆன்மாவாய் விளங்குகின்றதோ, எது எவ்வுலகத்தும் வாழும் உயிரினங்கட்கு இணையற்ற இன்ப வெள்ளத்தை அள்ளிச் சொரிவதா யுள்ளதோ, எது நாத (ஒலி) வடிவாயும், ஆனந்த மயமான அரும்பொருளாயும், உளதோ, அந்த இரண்டற்ற—தனித்தியங்கும் முழுமுதற் பொருளை (உள்ளன்புடன்) வழிபடுவாம்.

அகரம் முதல எழுத்(து) எல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு.

என்றபடி, அனைத்து அண்டங்களுக்கும் ஆதார வஸ்துவாய், அவ்வண்டத்து வாழும் சீவராசிகள் யாவற்றுள்ளும் ஆன்மா

வாய், அவ்வான்மாக்களது உள்ளத்தில் இன்ப வெள்ளத்தைப் பாய்ச்சும் இன்சுவைப் பொருளாய், ஆநந்த மயமாய், அரும் பொருளாய், பரம் பொருளாய், இரண்டென் றில்லாமல் தனித்தியங்கா நிற்கும் நாத (ஒலி) வடிவாயுள்ள முழு முதற் பொருளை, மானிடராய்ப் பிறந்துள்ள ஒவ்வொருவரும், தத் தம் கட்டை கடைத்தேற வேண்டி வழிபடல் வேண்டுமாம்.

சிசுர் வேத்தி பசுர் வேத்தி
வேத்தி கான ரஸம் பணீ ||

என்றபடி, சின்னஞ்சிறு குழந்தைகள் என்ன, பசுக்கள் (முத லாய விலங்கினங்கள்) என்ன, ப்டு விடத்தைத் தன்னிடத்தே கொண்டுள்ள கொடிய பாம்புகள் என்ன, இவை முதலாய (பகுத்து) அறியும் திறன் அற்ற சீவராசிகள் யாவும், நாத (ஒலி) மயமாயுள்ள கான ரஸத்தைப் பருகி, ஆநந்த மெனும் பெரு வெள்ளத் தமிழ்ந்து, மெய்ம்மறந்து கிடக்கும் எனில், (பகுத்து) அறியும் திறனைப் பெற்றுள்ள மாந்தர்க்கு கான ரஸம் இத்தகைய பயனை அளிக்கும் எனக் கூறவும் வேண் டுமோ?

பிரம்மா முதலாய தேவரும், அகஸ்தியர் நாரதர் முத லாய தேவரிஷிகளும், மார்க்கண்டேயர் முதலாய முனி புங் கவர்களும், தும்புரு கின்னரர்களும், சாரங்கதேவர் முதலாய ஸங்கீத சாஸ்திர வித்துவான்களும், பாலுடன் சர்க்கரை யைச் சேர்ப்பதே போல, உலகை மயக்குவிக்கும் உயர் திறம் படைத்துள்ள (ஒலி வடிவ மாய) ஸங்கீதத்தில் ஸ்ரீபகவானது பரம கலியாண குணங்களைச் சேர்த்துப் பாடிப் பேரானந்தப் பெருங்கடலில் மூழ்கிக் கிடந்தனராம். அத்தகைய உயர் திறம் படைத்துள்ள நாத (ஒலி) வடிவாயுள்ள சங்கீதத்தை ஒவ்வொருவரும் வழிபட்டுய்வது கடனாகும்.

இக் கலியில், இகத்தில் மட்டற்ற நற்சுகத்தையும், பரத்தில் பேரின்பப் பெரும் பதத்தையும் அளிக்க வல்லதும், எல்லோராலும் எக்காலத்தும் எவ்விதமாய தடையுமின்றி எளிதிற் செய்யக் கூடியதும், மிக மிகச் சுலபமானதும் ஆய உயர் வழி யாதெனில், பகவானிடத்து பக்தி புரிதலேயாம் எனப் பேரறிவை யறிந்துள்ள பெரியோர்கள் கூறிப் போந்துள்ளனர். அவ்விதம் பகவத் பக்தி செய்வதில் அவரது நாம பக்தி செய்தல் மிக்க மேன்மையுடைய தாகுமெனவும் கூறுவர்.

அரி(து) அரிது மானிடர் ஆதல் அரிது
எண்ணரிய பிறவி தனில்
மானிடப் பிறவிதான்
யாதினும் அரி(து) அரிது காண்......

என்பது முதலாய பெரியார் தம் பொன் மொழிகளின்படி, பெறுதற்கரிதான இம்மானிடப் பிறவியினைப் பெற்றுள்ள இவ்வமயத்தை வீணே கழித்திடாமல், 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்றபடி, ஒவ்வொருவரும் ஸ்ரீபகவன் நாம பக்தி புரிந்து பிறவியைப் பயனுடையதாய்ச் செய்து கொள்ளுதல் வேண்டும். "இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ?" என்றபடி கிடைத்தற்கரிய இவ்வமயத்தைக் கை விடில், பின்னர் பேரறிவாம் பகுத்தறிவினைப் பெற்றுள்ள இம்மானிடப் பிறவி கிடைக்குமென்பதுதான் என்ன நிச்சயம்? வேறு எவ்விதமாய பிறவி கிடைக்குமோ யாரறிவார்? ஆதலால், மீண்டும் கிடைக்க விருக்கும் பிறவி மிக்க இழிவுள்ளதாய் இல்லாமல் இருக்க வேண்டியும், இகம் பரம் எனும் இரண்டிடங்களிலும் இணையற்ற நற்சுகத்தை யடைய வேண்டியும், பிறவியாகின்ற பெரும் பிணியை ஒழித்திட வேண்டியும், ஸ்ரீ பகவன் நாம ஸங்கீர்த்தனங்களை உருக்கத்துடன் பாடி 'நாம பக்தி' புரிந்து வருதல் வேண்டும்.

த்யாயந் க்ருதே யஜந் யஜ்ஞை:
த்ரேதாயாம் த்வாபரேர்ச்சயந் |
யதாப்நோதி ததாப்நோதி
கலௌ ஸங்கீர்த்ய கேசவம் ||

அதாவது:—முதல் யுகமாகிய 'கிருத' யுகத்தில், புலன்களைப் புறம்பே செல்ல விடாதடக்கிப் பல்கோடி வருட காலம் பரமனை நினைந்து யோகத்தமர்ந்திருந்தோரும், இரண்டாம் யுகமாகிய 'திரேதா யுகத்தில்' ஏராளமான பொருட் செலவுடன் கூடிய பல்வகை வேள்விகளைப் பெருமைபடச் செய்தோரும், மூன்றும் யுகமாகிய 'துவாபர' யுகத்தில், பல் வருட காலம் பய-பக்தி-விசுவாசத்துடன் நின்று, பரமனது திரு உருவினைப் பச்சிலை மலர் கொண்டு பூசித்தோரும், ஆகிய இவர்கள் எவ்விதப் பயனைப் பெறுவரோ அவ்விதப் பயனைக் கடை யுகமாகிய (இக்) 'கலி' யுகத்தில் 'நாம ஸங்கீர்த்தனம்' செய்து வருவதன் பயனால் அடையப் பெறுவராம்.

'பரமனது படைப்பில் உள்ள பல்வகைச் சீவரும் பாடலைக் கேட்டுப் பேரானந்த வாரிதியில் மூழ்கி நிற்கின்றனர்' என்பது யாவரும் அறிந்துள்ளதோர் உண்மையே யாகும். நாம ஸங்கீர்த்தனம் செய்து நம்பெருமான் திருவருளுக்குத் தகுதியான பெரியோர் பல்லோராவர். அவர்கள் தம் அரிய சரிதைகளும் பலவாகும்.

காலக்ஷேபோ நகர்த்தவ்ய:
க்ஷீணமாயு: க்ஷணே க்ஷணே |
யமஸ்ய கருணா நாஸ்தி
கர்த்தவ்யம் ஹரி கீர்த்தனம் ||

என்றார் ஓர் உத்தமர். நம் ஆயுளானது நிமிடத்திற்கு நிமிடம் தேய்ந்து கொண்டே வருகின்றது. கூற்றுவனோ கன்னெஞ்சம்

படைத்துள்ளவனுவன். அன்னவனிடம் கருணையென்பது கொஞ்சமும் கிடையாது.

‘ இப்பவோ, பின்னையோ, மத்திய காலத்திலோ,
இரவி படு(ம்) நேரம் அதிலோ,
இரவிலோ, பகலிலோ, உதய காலத்திலோ,
எந்தெந்த நேரம் அதிலோ,
அப்பிலோ, தீயிலோ, நாயிலோ, பேயிலோ,
அரவிலோ, இடி யதனிலோ,
ஆருத புண்ணிலோ, அடர் நோவு தன்னிலோ,
ஆயுத வகைகள் எதிலோ,
செப்பரிய வீட்டிலோ, மேட்டிலோ, காட்டிலோ,
தெருவிலோ, திண்ணை தனிலோ,
செகம்தன்னில் எந்தெந்த விடம் அதனிலோ,
சீவன் விடுகின்ற நேரம்...........’ (9)

என்பதுவும் தெரியவில்லை. தவிரவும்,

‘ வேத நூல் பிராயம் நூறு
மனிசர் தாம் புகுவரேனும்
பாதியும் உறங்கிப் போகும்
நின்றதில் பதினை யாண்டு
பேதை பாலகன தாகும்,
பிணி பசி மூப்புத் துன்பம்
ஆதலால்,........................’

இக்காயம் நிலைத்திருக்கும் காலமும் சொற்ப காலமே யெனத் தெரியக் கிடக்கின்றது. அரிதிற் கிடைத்துள்ள இவ்வற்ப காலத்தையும் அவமே கழித்திடாமல், கட்டை கடைத்தேற வேண்டி ஸ்ரீ பகவன் நாம ஸங்கீர்த்தனம் செய்தல் வேண்டும். அவ்விதம் செய்யுங்கால்,—

விஸ்ருஜ்ய லஜ்ஜாம் யோதீதே
மந் நாமாணி நிரந்தரம் |
குல கோடி ஸமா யுக்தோ
லபதே மாமகம் பதம்||

என்றபடிக் கொஞ்சமும் 'சங்கோசம்' கொள்வது கூடாது. வெட்கத்தை விடுத்து வெகு கம்பீரமாய் நாம ஸங்கீர்த்தனம் செய்யும் ஒருவர் தமது குலத்து வந்தோரும், வரப் போகின்றோருமாய யாவரும் ஐயனது அழியாப் பதத்தை யடையும் ஒரு பெரும் பாக்கியத்தைப் பெறுபவராவர். அவ்விதம் செய்யப்படும் ஸ்ரீ பகவன் நாம ஸங்கீர்த்தனத்திற்குள்ள வலிமைதான் எத்தன்மையது எனில்லோ?

நாம்நோஸ்தி யாவதீ சக்தி:
பாப நிர்ஹரணே ஹரே: |
தாவத் கர்த்தும் ந சக்நோதி
பாதகம் பாதகீ ஜந:||

என்றபடி, ஸ்ரீ பகவானது திருநாமங்களை ஒரு தரம் கூறுவதால் எவ்வளவு பாபங்கள் தீருமோ, அவ்வளவு பாபங்களைப் பிறந்தது முதற்கொண்டு பாபங்களையே செய்து வருபவனை ஒரு மஹா பாபியினால் செய்வதென்பது முடியாதாம். அவ்விதமாயின், நாளும் அவனது பல் கோடிக்கணக்கான திருநாமங்களை, அவனுக்கோர் உருவமாகக் கூறப்பட்டுள்ள நாதம் எனும் நாரில் தொடுக்கப்பட்டுள்ள கீர்த்தனமாலைகளை—நாம ஸங்கீர்த்தனங்களை 'பஜநம்' செய்வோனிடை, பாபம் என்பதும் அணுகுமோ?

புலன்களை வென்று பற்றுக்களை அறுத்தெறிந்த பரம யோகிகளுக்கும்

ஏதந் நிர்வித்ய மாநாநாம்
இச்சதாம் அகுதோபயம் |
யோகி நாம் ந்ருப! நிர்ணீதம்
ஹரேர் நாமா நு கீர்த்தநம்||

என்றபடி, ஸ்ரீ பகவன் நாம ஸங்கீர்த்தனமே (மோட்சத்தை யடையச்) சிறந்த சாதனமாம். அவ்விதமாயின், புலன்களைப் புறம்பே செல்ல விடுத்துத் தம் செயல் அற்றவராய், 'ஸம்ஸாரம்' எனப்படும் பெரும் கடலில் வீழ்ந்து வெளியேறுதற்கு வகையினை யறியாது தயங்கிக் கிடந்துழலும் நம் போன்றார்க்கு நாம ஸங்கீர்த்தனமானது கரை சேர்ப்பிக்கும் ஒரு கட்டு மரமே போன்றதாகும் எனக்கூறவும் வேண்டுமோ ?

பிறவிக்கு வித்தாகிய பழவினைகளை வறுக்கக் கூடிய பெரு நெருப்பு

பர்ஜநம் பவபீஜாநாம்
ஆர்ஜநம் ஸர்வ ஸம்பதாம் |
தர்ஜநம் யமதூதாநாம்
ராம ராமேதி கர்ஜநம் ||

என்றபடி, ஸ்ரீ ராம நாம ஸங்கீர்த்தனமே யாகும். மேலும், அவ் விராம நாம ஸங்கீர்த்தனமானது, அனைத்து ஐசுவரியங்களையும் அபரிமிதமாய் அளிப்பதாயும், ஆயுள் முடியுங்கால் வந்து இன்னல் பலவிழைக்கும் காலனது தூதுவரைத் துரத்தி யடிப்பதாயு மிருக்கின்றது. ஆதலால், அனைத்து நலன்களையும் அளிக்க வல்லதாகிய அவ்வரிய விராம நாம பஜநம் செய்து வருவதை யாவரும் ஒரு கடமையாகக் கொள்ளுதல் வேண்டும்.

ஸ்ரீராம நாம மகிமை பற்றி மிக விளக்கமாகப் பல 'கிரந்தங்க' ளிலும் கூறப்பட்டுள்ளது.

ரா சப்தோச்சார மாத்ரேண
ழகாந் நிர்யாந்தி பாதகா: |
புந: ப்ரவேச பீத்யா ச
மகாரஸ் தத் கவாட வத் ||

என்றபடி, 'ரா' வெனும் எழுத்தைக் கூறின மாத்திரத்தில் மக்களிடை வந்தடைந்து நிலைத்து நிற்கும் பல்வகைப் பாவங்களும் வெளியேறி விடுகின்றனவாம். 'ம' வெனும் எழுத்தைக் கூறுவதனுல், அவ்வெழுத்தானது மீண்டும் பாவங்கள் வந்தடையாவண்ணம் வழியை அடைத்து விடுகின்றதாம். இவ்விதம் மிக்க மகிமை வாய்ந்துள்ள 'ராம நாம ஸங்கீர்த்தனங்'களைச் செய்வதால் ஏற்படும் ஆநந்தாமிருத வர்ஷத்தைப் பானம் செய்பவர் எவரோ அவரே மகாத்மா வாவர்.

"நன்மையுஞ் செல்வமு நாளு நல்குமே
தின்மையும் பாவமுஞ் சிதைந்து தேயுமே
ஜென்மமு மரணமு மின்றித் தீருமே
இம்மையே விராமவென் றிரண் டெழுத்தினல்"

என்றனர் கவிக்கரசரும்.

பாஷா கா்நம் ந காதவ்யம்

என்றபடி, பொருளற்ற ஸங்கீத கானம் செய்வதில் பயனில்லையாம். ஸ்ரீபகவத் பக்தியுடன் கூடிய,—அவனது குண விசேஷங்கள் நிறைந்துள்ள கீர்த்தனங்களை உருக்கத்துடன் பாடுவதே உத்தமமாம்.

காவ்யா லாபாம்ஂச யே கேசித்
கீதாநி ஸகலாநி ச |
சப்தமூர்த்தி தரஸ்யைதே
விஷ்ணோ ரம்சா மஹாத்மந: ||

என்றபடி, ஒலிவடிவாயுள்ள காவியங்களும், சங்கிதமும், மற்றும் முதலானவைகளும், ஸ்ரீ பகவானது உருவத்தின் ஒரு கூறுய் உள்ளனவாம். கடவுளுருவத்தின் ஒரு கூறுகிய ஸங்கீதத்துடன், அவனிடம் அன்புப் பெருக்கைக் கொடுக்கக் கூடிய அவனது குண விசேஷங்களையும் சேர்த்து மன உருக்கத்துடன் பாடுவோர் மேன்மையாக வாழ்வார்களாம். மேலும், பகவத் பக்தி ரசம் ததும்பும் பாடல்களைப் பாடுவதனுல்,

த்ரி வர்க்க பலதாஸ் ஸர்வே
தாந, யஜ்ஞ, ஜபாதய: |
ஏகம் ஸங்கித விஜ்ஞானம்
சதுர் வர்க்க பலப்ரதம் ||

என்றபடி, அறம், பொருள், இன்பம், வீடு எனப்படும் நால் வகைப் புருடார்த்தங்களை அடையப் பெறலாமாம். ஈதல், வேள்வி செய்தல், ஜபம் பண்ணுதல், முதலியவை மூன்றும் முறையே அறம், பொருள், இன்பம் எனப்படும் மூவிதப் புருடார்த்தங்களையே அளிக்க வல்லனவாம் ஆதலால், நல் வீட்டையும் அருள வல்லதும், வருத்தம் என்பது சிறிதும் இல்லாததும், எவ் வேலையைச் செய்யும் போழ்தும்—என் நிலையிலிருக்குங் காலும் எதற்கும் இடையூறின்றிச் செய்யக் கூடியதும், இன்பக் களஞ்சியமே போன்றுள்ளதுமாய நாம ஸங்கீர்த்தனம் செய்தலே நனிமிகச் சிறந்ததாம். அவ்விதம் பாடுதற்கு அதிகம் சிறந்தனவாக வுள்ளவை, ஸ்ரீ ராமனது அருளைப் பூரணமாகப் பெற்றவரான ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளால் செய்யப்பட்ட கீர்த்தனங்களேயாகும். அப் பெரியார்தம் பாடல்களில்,

பாட்யே கேயே ச மதுரம்
ப்ரமாணை ஸ்திரிபி ரந்விதம் |
ஜாதிபிஸ் ஸப்தபிர் பத்தம்
தந்த்ரீ லய ஸமந்விதம் |

ரஸை:, ச்ருங்கார, காருண்ய,
ஹாஸ்ய, வீர, பயாநகை: |
ரௌத்ராதிபிஃச ஸம்யுக்தம்
காவ்ய மேத தகாயதாம் ||

என்றபடி, 'சிங்காரம்' 'கருணை' 'நகை' 'வீரம்' 'பயம்' 'பெருங் கோபம்' 'குற்சை' 'அற்புதம்' 'சாந்தம்' எனக் கூறப்படும் 'நவரச'ங்களும் ததும்பி நிற்கின்றன. அவற்றுடன் அன்னாரது பாடல்களில், பேரானந்தப் பெருங்கடலன்ன பரமனது அரிய சரிதைகளும் சேர்ந்திருக்கின்றன. ஆதலால், அவரது பாடல்களானவை தம்மைப் பாடுவோர்க்கு 'பிரேமை' 'பக்தி' 'ஸுஜநவாத்ஸல்யம்' 'லக்ஷ்மீ கடாக்ஷம்' 'நேமம்' 'நிஷ்டை' 'யசஸ்' 'தன தாந்யம்' முதலாய வனைத்தையும் அளித்து, அப்பால் ஐயனது திருவடி நீழலையும் அளியா நிற்கின்றது. ஆதலால், அவ்வழியினைக் கடைப்பிடித் தொழுகலே அதிகம் சிறந்ததாம்.

பரமனின் பேரருளைப் பெற வேண்டிப் பாடக்கூடிய பாடல்கள் இவ்வகையில் இருத்தல் வேண்டும் என்பதாக ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் ஒரு கீர்த்தனத்தில் கூறுவதாவது.—

இராகம்—ஸ்ரீரஞ்சினி. தாளம்—ரூபகம்

பல்லவி.

ஸொகுஸுகா ம்ருதங்க தாளமு ஜத கூர்ச்சி நிநு
ஸொக்க ஜேயு தீரு டெவ்வடோ (ஸொ)

அநுபல்லவி.

நிகம சிரோர்த்தமு கல்கிந
நிஜ வாக்குலதோ
ஸ்வர சுத்தமுதோ (ஸொ)

சரணம்.

யதி, விச்ரம, ஸத்பக்தி, நி
ரதி, த்ராக்ஷாரஸ, நவரஸ
யுத க்ருதிசே பஜியிம்சு
யுக்தி த்யாக ராஜு தரமா ஸ்ரீராம (ஸொ).

இப்பாடலின் பொருளாவது:—தண்ணுமையின் ஒலியானது நன்கு 'சுருதி'யுடன் சேரும் வண்ணம் செய்து கொண்டு, வேதங்களுக்குச் சிரஸாகவுள்ள 'உபநிஷத்'துக்களின் அர்த்தமானது நிறைந்தும், உண்மை செறிந்த வாக்குடனும், சுத்தமான 'ஸ்வர'த்துடனும், யதி, விச்ராமம், ஸத்பக்தி, நிரதி, (மிகுந்த ஆசை) திராக்ஷாரஸம் (போன்ற தீஞ்சுவை), மற்றும், 'நவரஸ' ங்களுடன் கூடியதாயும் உள்ள கீர்த்தனங்களை 'பஜநம்' செய்வதே பகவானது அருளைப்பெற நல்லதோர் உபாயமாகும் என்பதாம். இவ்விதமாய குண விசேஷங்கள் யாவும் ஒருங்கு சேர அமைந்துள்ளவை ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளது கீர்த்தனங்கள் எனக் கூறுவது மிகையாகாது. ஆதலால், அப் பெரியார்தம்மால் பாடப்பட்டுள்ள கீர்த்தனங்களைப் பாடுதல், பரமனது திருவருளைப் பெறுதற்கு ஒரு நல்வழியாகும் என்பது கூறாமலே விளங்கும்.

ஏகமேவாத்விதீயம்

என்றபடி, எங்கும் நிறைந்து—எவ்வுருவாயும் நிற்கும் பரமன் ஒருவனே யென்பது

பச்ய மே பார்த்த ரூபாநி
சதசோத ஸஹஸ்ரச: |
நாநா விதாநி திவ்யாநி
நாநா வர்ண க்ருதீநி ச ||

என்ற கீதா வாக்கியத்தால் அறியக் கிடக்கின்றது. அதாவது: 'அர்ஜுனு! அநேக விதங்களாய்,—தெய்வத்தன்மை பொருந்தியவைகளாய்,—பல்வித வர்ணங்களும், உருவங்களும் உள்ளவைகளாய்—(பல்) நூற்றுக்கணக்காயும், (பல்) ஆயிரக் கணக்காயும் விளங்கும் எனது பல்வித உருவங்களையும் (என்னிடம்) பார்' என்பதாம். மேலும், பகவான் 'யானே யாவுமாய் விளங்குகின்றேன்' என்பதாகக் கீதையில் விஸ்தாரமாய்க் கூறியுள்ளனன். ஆதலால், இவ்வுலகில் மக்களாய்ப் பிறந்துள்ள யாவரும் தத்தமது மனத்தின் திறத்திற்கேற்பக் கைக்கொண்டு வழிபடும் கடவுளர் யாவரும் பரம் பொருளினது ஒரு சிறு உருவமே யெனக் கொண்டு, எத்தெய்வத்தினிடமும் வேற்றுமை கொள்ளாது நிற்றல் வேண்டும். அவ்விதமின்றித் தாம் வழிபடும் கடவுளே உண்மைக் கடவுளாவரென்றும், ஏனையோர் வழிபடும் கடவுளர் யாவரும் உண்மையான கடவுளர் அல்லர் என்றுங் கூறி, வேற்றுமை கொண்ட மனத்தராய் நின்று, எவ்வித 'பக்தி' யைப் புரியினும் பயனேற்படாவாம். அதன் பயனும் மிகுதியான பாவங்களே விளையுமாம். இவ்விடத்து:

மத்ப்ரிய: சங்கரத்வேஷீ
மத்த்வேஷீ சங்கரப்ரிய: |
தாவுபௌ நரகம் யாத:
யாவச் சந்த்ர திவாகரௌ ||

சிவபெருமானை வெறுப்பவன் என்னிடம் அன்பு பூண்டொழுகுவோனு யிருந்தாலும்; என்னை வெறுப்பவன் சிவநேயச் செல்வனுயிருந்தாலும், அவ்விருவரும் அடையப்பெறுவது ஒன்றேயாகும். அது யாதெனில், இரவி—மதியுள்ளளவும் எரி நரகிற் கிடந்துழல்வதே யாகும்.

நாமாநி தவ கோவிந்த !
யாநி லோகே மஹாந்தி ச |
தாந்யேவ மம நாமாநி
நாத்ர கார்யா விசாரணு ||

ஏ! கோவிந்த! எவை உனக்குச் சிறப்பாகக் கூறப்படும் பெயர்களோ அவைகளே எனது பெயர்களாம். அவைகளை ஆராய்ச்சி செய்ய வேண்டியதேயில்லை.

த்வ துபாஸா ஜகந் நாத!
சைவாஸ்து மம கோபதே |
யஂச த்வாம் த்வேஷ்டி தேவேச
ஸமாம்த்வேஷ்டி ந ஸம்சய :||

ஏ! தேவேசனுகிய கோபாலா! உனக்குச் செய்யப்படும் ஆராதனையே எனக்கும் செய்ததாக ஆகும். எவன் உன்னை (இராவணன், பாணன் ஆயினேரைப்போன்ற) பகைக்கின்றனே அவன் என்னையும் பகைத்தவனே யாவன். நம்மிருவருள் வேற்றுமையென்பது சிறிதும் இல்லை (அன்றோ?)

சிவஸ்ய ஹ்ருதயம் விஷ்ணு:
விஷ்ணோஂச ஹ்ருதயம் சிவ: ||
ருத்ரஸ்ய பரமோவிஷ்ணு :
விஷ்ணோஂச பரமம் சிவ : ||
ஏக ஏவ த்விதா பூதோ
லோகே சரதி நித்யச : ||

மஹேசனுனவன் மகாவிஷ்ணுவின் ஆராதனையையே மானத பூஜையாகவும், மாயவனுனவன் அச் சிவபெருமானது அர்ச்சனையையே மானதபூஜையாகவும் கொண்டனர்.

சிவனிலும் விஷ்ணு பெரியன், மாயவனிலும் மகேசன் பெரியன். ஒரே பரம்பொருள், பெயரும் உருவும் வெவ்வேருய்க் கொண்டு வழங்கப்படுகின்றது.

(பொய்கை யாழ்வார்)

அரன்நா ரணன்நாமம் ஆன்விடை புள் ளூர்தி
உரைநூல் மறையுறையும் கோயில்—வரைநீர்
கருமம் அழிப்பளிப்புக் கையது வேல் நேமி
உருவ மெரி கார்மேனி யொன்று

ஏற்றான்புள் ளூர்ந்தா னெயிலெரித்தான் மார்விடந்தான்
நீற்றான் நிழல் மணி வண்ணத்தான்—கூற்றொருபால்
மங்கையான் பூமகளான் வார்சடையான் நீண்முடியான்
கங்கையான் நீள்கழலான் காப்பு.

(பேயாழ்வார்)

தாழ்சடையும் நீண்முடியு மொண்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால்,—சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமே லெந்தைக்கு
இரண்டுருவு மொன்றா யிசைந்து. இவைகளும்,

'அரியும் சிவனும் ஒண்ணு (இதை) அறியாதவர் வாயில் மண்ணு' என வழங்கும் பழமொழியும் ஈண்டு அறியத் தக்கனவாகும்.

இவ்விடயங்களை நன்கு அறிதற்கான நல்லறிவும், பன்னூற்களும் இருந்தும், அறியப்பெறாத ஒரு சிலர், வீணை 'விதண்டா' வாதங்களைப் புரிபவர்களாய் நின்று, காலனுக்குக் காலத்தைக் கணக்கிட் டொப்பித்து வருகின்றனர். 'பிற நிந்தை பெரும் பாவம்' ஆகுமாயின், பிற மத—தெய்வ தூஷணம் பெரும் பாவமாகாதோ? ஆதலின், பிறவிப் பெரும் பிணியை யொழித்துப் பெறற்கரிய பேரின்பப் பெரும்பதத்தை யடைய விரும்புவோர், பிற மத—தெய்வ நிந்தை புரிதலை அறவே விடுத்துச் 'சமரஸ' பாவங்கொண்டு, 'சாந்த' நிலையில் நின்று

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது,
வேத (ம்) நான்கினு (ம்) மெய்ப் பொருளாவது,
நாத நாம நமச்சி வாயவே.

என்றபடி, பரமனது திருநாமங்களும், திவ்ய குணங்களும், செறிந்துள்ள பாடல்களை அன்புடன் மனமுருக—ஆனந்தக் கண்ணீர் அருவியாய் வழிந்தோடப் பாடுதல் வேண்டுமாம். அரனெம்பெருமானது திரு நாமங்களாலாய அரிய பாடல்களைப் பாடுவதால் ஒருவர்

கோடயோ ப்ரம்ம ஹத்யாநாம்
அகம்யாகம கோடய: |
ஸத்ய: ப்ரளய மாயாந்தி
மஹாதேவேதி கீர்த்தநாத் ||

என்றபடி, தம்மை வந்தடைந்துள்ள கோடிக் கணக்கான 'பிரம்மஹத்தி' தோஷங்களினின்றும் விடுபட்டுச், சேரத் தகாதவர்களுடன் சேர்ந்ததால் வந்தடைந்துள்ள மாபெரும் பாவங்களினின்றும் நீங்கி, நிமலனது அருளால் நல்வீட்டையும் அடையப் பெறுவராம்.

ஸ்ரீ பகவான் எங்கிருக்கின்றனன் ? வைகுண்டத்திலா ? கைலாசத்திலா ? மற்றும் பல்விதம் கூறப்படும் இடங்களிலா ? என வினவின்

நாஹம் வஸாமி வைகுண்டே
ந யோகி ஹ்ருதயே ரவெள |
மத் பக்தா யத்ர காயந்தி
தத்ர திஷ்ட்டாமி நாரத ||

என்றபடிக்கும் :

போதுவார் நீறணிந்து பொய்யாத ஐந்தெழுத்தை
ஓதுவார் உள்ளம் என உரைப்பாம்—நீதி ஆர்
பெம்மான், அமரர் பெருமான், ஒருமான் கை
அம்மான், நின்றாடும் அரங்கு.

என்றபடிக்கும், ஸ்ரீ பகவான் 'பரம பத' த்திலும்,பரமயோகிகளது 'ஹ்ருதய கமலங்'களிலும் (மாத்திரம்) வசிப்பதில்லையாம். பாகவதர்கள் பக்திப் பெருக்கத்துடன் பகவானது திருநாம ஸங்கீர்த்தனங்களை எங்கெங்குப் பாடுகின்றனரோ அங்கங்கும் வசிக்கின்றனராம். ஆதலால், ஸ்ரீ பகவன் நாம ஸங்கீர்த்தனம் செய்வதானது

"குலம் தரும், செல்வம் தந்திடும்,
அடியார் படு(ம்) துயர் ஆயின வெல்லாம்
நிலந்தரம் செய்யும், நீள் விசும்பருளும்,
அருளொடு பெரு நிலம் அளிக்கும்,
வலம் தரும், மற்றும் தந்திடும்,
பெற்ற தாயினும் ஆயின செய்யும்,
நலம் தரும்,......................."

...ஆயின், மக்களாய்ப் பிறந்துள்ள ஒருவர்க்கு மற்றென்ன தான் வேண்டும்? ஸ்ரீ பகவன் நாம 'மஹிமை'யினைப் பல்லோரும் அறியும்படி செய்து, நாம ஸாம்ராஜ்ய ஸ்வரூப' மாய் இந்நிலவுலகு நிலைத்திருக்கு மளவும் நிலைபெற்ற பெரும்புகழுடன் விளங்கும் பெரியார் பல்லோராவர். அன்னவர்தம் அருமை பெருமையினை அளவிட்டுக் கூறுதற்கு யாவரே வல்லுநராவர் ?

நாம ஸாம்ராஜ்ய ரூபாணும்
போதேந்த்ர ஸ்ரீதராத்மநாம் |

ப்ரணமம் யே ப்ரகுர்வந்தி
தேஷாமபி நமோ நம: ||

என்பதாகக் கூறிப்போந்துள்ளனர் ஓர் உத்தமர். அதாவது, 'ஸ்ரீ பகவன் நாம ஸாம்ராஜ்ய' உருவமாயுள்ளவரும், 'போதேந்த்ரர்' 'ஸ்ரீதரர்' ஆகிய இவர்களது ஆன்மாவாய் விளங்குபவரும் ஆய சற்குருவை எவர் ஒருவர் வணங்குகின்றனரோ அன்னவரை யான் வணங்குகின்றேன் என்பதாம்.

ஸ்ரீகண்டம் இவ பாஸ்வந்தம்
சிவ நாம பராயணம் |
ஸ்ரீதரம் வேங்கடேசார்யம்
ச்ரேயஸே குரு மாச்ரயே ||

அதாவது: இடை விடாமல் இறைவனது திருநாமங்களைப் பாடியதனுல், அவ்விறைவனே போன்ற அருட்டிறம் வாய்ந்தவரும், உலகினரால், 'ஸ்ரீதரர்' 'வேங்கடேசர்' எனப் புகழ்ந்து கூறப்பெறுபவருமான 'ஜகத்குரு'வை, ஒருவன் தனது நலனைக் கருதி (யேனும்) வழிபடக் கடவன் என்பதாம்.


இவ்விதம், இறைவனது அரிய திருநாமங்களை உள்ளன்புடன் நின்று மனமுருகப் பாடியதனுல் பெறற்கரியவைகளையும் பெற்ற பெரியார் பல்லோராவர். அப் பெரியார்தம் புண்ணிய சரிதைகளைப் பக்தியுடன் நின்று படிப்பதனுலும், பிறர் படிக்கக் கேட்பதனுலும், பாழும் மனமானது பண்படுதல் கூடும். இம்மை—மறுமை இருமையிலும் நற்சுகத்தையும் அருளும்.

இற்றைக்குச் சுமார் எண்பத்தைந்து ஆண்டுகட்கு முன்னர் இருந்தவரும், இதுகாலை உலகினரால் பெரிதும் புகழ்ந்து போற்றப் பெறுபவரும், இவ்வுலகை நீத்தும், நம் எல்லோரது

மனக்கண் முன்னிலையிலும் ஒலி வடிவமாய்ப் புகழுடனுடன் நிற்பவருமான 'ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமி'கள் ஸ்ரீ பகவானது திருநாமங்களை ஒருமை மனத்துடன் நின்று பாடியே பெறற்கரியவைகளையும் பெற்றனர். அப் பெரியார்தம் அரிய சரிதையினைப் பக்தியுடன் நின்று படிப்பதனுல், இம்மையில் இணையற்ற நற் சுகத்தையும், மறுமையில் மேலான வீட்டையும் அடைதல் கூடும். ஆதலின், அன்னவர்தம் அரிய சரிதையினை இவண் எடுத்துக் கூறுவாம்.

ப்ரஹ்லாத, நாரத, பராசர, புண்டரீக,
வ்யாஸாம்பரீஷ, சுக, சௌநக, பீஷ்ம, தால்ப்யாந் |
ருக்மாங்கதார்ஜுந, வஸிஷ்ட, விபீஷணாதீந்
புண்யாந் இமாந் பரம பாகவதாந் ஸ்மராமி ||

---



திருவாரூர் தியாகராஜ சுவாமி கோயில் மேலக் கோபுரமும், கமலாலயமும்

By the kind Courtesy of Mr. V. Kuppuswami Iyer of the "Vivekabodhini" Off
Mylapore, Madras.

ஸ்ரீராமஜயம்

# ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் திவ்விய சரிதம்

## நாட்டுச் சிறப்பு

"மன்ற வாணன் மலர்திரு வருளால்,
தென்தமிழ் மகிமை சிவணிய செய்த,
அடியவர் கூட்டமும் ஆதிச் சங்கமும்
படியின்மாப் பெருமை பரவுறு சோழனும்
சைவமா தவருந் தழைத்தினி திருக்கும்
மையறு சோழ வளநா டென்ப"

எனும் யாப்பருங்கலக்காரிகைக்கு உரைகண்ட குணசாகரரின் மேற்கோளுக் கிணங்கவும்,

"தண்ணீரும் காவிரியே
தார் வேந்தன் சோழனே
மண்ணாவதுஞ் சோழ
மண்டலமே..............." எனும்

கம்பர் பெருமானது கனிமொழியின் வண்ணமும், குளிர்ந்த நன்னீரைத் தன்னிடத்தே கொண்டுள்ள யாறுகளில் 'காவிரி' யாறே மிகச் சிறந்ததாம். பெருமை மிக்க அப்பொன்னி யாற்றின் பாசனத்தை யடையப் பெற்றதும், தஞ்சமென்று வந்தடைந்தோரது பஞ்சத்தைப் போக்கியருளுவதும், தற்காலத்துத் 'தென்னிந்திய நெற்களஞ்சியம்' எனப் பல்லோராலும் புகழ்ந்து கூறப்படுவதுமாகிய, 'தஞ்சை' மாநகரைப் பல

தருமபுர ஆதீனம்

மனக்கண் முன்னிலையிலும் ஒலி வடிவமாய்ப் புகழுடனுடன் நிற்பவருமான 'ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமி'கள் ஸ்ரீ பகவானது திருநாமங்களை ஒருமை மனத்துடன் நின்று பாடியே பெறற்கரியவைகளையும் பெற்றனர். அப் பெரியார்தம் அரிய சரிதையினைப் பக்தியுடன் நின்று படிப்பதனால், இம்மையில் இணையற்ற நற் சுகத்தையும், மறுமையில் மேலான வீட்டையும் அடைதல் கூடும். ஆதலின், அன்னவர்தம் அரிய சரிதையினை இவண் எடுத்துக் கூறுவாம்.

ப்ரஹ்லாத, நாரத, பராசர, புண்டரீக,
வ்யாஸாம்பரீஷ, சுக, சௌநக, பீஷ்ம, தால்ப்யாந் |
ருக்மாங்கதார்ஜுந, வஸிஷ்ட, விபீஷணதீந்
புண்யாந் இமாந் பரம பாகவதாந் ஸ்மராமி ||

ஸ்ரீராமஜயம்

# ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் திவ்விய சரிதம்

## நாட்டுச் சிறப்பு

"மன்ற வாணன் மலர்திரு வருளால்,
தென்தமிழ் மகிமை சிவணிய செய்த,
அடியவர் கூட்டமும் ஆதிச் சங்கமும்
படியின்மாப் பெருமை பரவுறு சோழனும்
சைவமா தவருந் தழைத்தினி திருக்கும்
மையறு சோழ வளநா டென்ப"

எனும் யாப்பருங்கலக்காரிகைக்கு உரைகண்ட குணசாகரரின் மேற்கோளுக் கிணங்கவும்,

"தண்ணீரும் காவிரியே
தார் வேந்தன் சோழனே
மண்ணாவதுஞ் சோழ
மண்டலமே..............." எனும்

கம்பர் பெருமானது கனிமொழியின் வண்ணமும், குளிர்ந்த நன்னீரைத் தன்னிடத்தே கொண்டுள்ள யாறுகளில் 'காவிரி' யாறே மிகச் சிறந்ததாம். பெருமை மிக்க அப்பொன்னி யாற்றின் பாசனத்தை யடையப் பெற்றதும், தஞ்சமென்று வந்தடைந்தோரது பஞ்சத்தைப் போக்கி யருளுவதும், தற்காலத்துத் 'தென்னிந்திய நெற்களஞ்சியம்' எனப் பல்லோராலும் புகழ்ந்து கூறப்படுவதுமாகிய, 'தஞ்சை' மாநகரைப் பல

வாண்டுகள் தலைநகராகக் கொண்டு அரசாண்டுவந்த 'சோழ' மன்னவனே முடியுடை வேந்தர் மூவருட் சிறந்தவனும். பல் வளங்களையும் பெருமிதமாய்ப் பெற்றுள்ளதும், நல் வேந்தனுல் நீதியுடன் ஆளப்பட்டு வந்ததுமான சோழ வள நாடே மற்றெண்ணாட்டையும் விட மிகச் சிறந்த நாடாம். ஆதல் பற்றியே 'சோழ நாடு சோறுடைத்து' எனும் பழமொழியும் வழங்கா நிற்கின்றது. மேலும்,

"காவேரி நீரில் படிந்து எழுந்து வரும் காற்றானது எவ்வளவு தூரம் வீசுகின்றதோ, அவ்விடத்து வாழும் யாவரும் 'முக்தி'யை யடைவரெனில், அவ் யாற்றின் அருகே யிருந்து கொண்டு அந் நன்னீரில் ஆசாபாசமற மூழ்கிவருவோர் முக்தி யடைவரெனக் கூறவும் வேண்டுமோ?" எனக்காவிரி யாற்றின் சிறப்புக் கூறப்பெற்றுள்ளது.

பகலும் இரவும் சேர்ந்த மூன்று நாட்கள் முடிய, கங்கை யாற்றின் கரையில் இருந்து கொண்டு, அன்புடன் அந்நீரில் மூழ்கிவருவதால், ஒருவர் தம்மால் மரணத்தறுவாய் வரை செய்யப்பட்டதான மாபாவங்களினின்றும் விடுபடுவர். ஐந்து பகலும் இரவும் சேர்ந்த நாட்கள் முடிய 'யமுனை'யாற்றின் கரையிலிருந்து கொண்டு, பேரன்பு பூண்டு அந்நீரில் படிவதால், ஒருவர் தாம் இயம தூதுவர் கையில் சிக்கும் வரை செய்யப்பட்டதான அனைத்துப் பாவங்களினின்றும் நீங்குவர். ஆனல், காவேரி யாற்றின் கரையினை யடைந்து, அந் நன்னீரில் அன்பெழ நின்று மூழ்கி யெழுந்த அக்கணமே ஒருவர் தம்மால் ஆவி நீக்கும் காலம் வரை செய்யப்பட்டதான பெரும் பாவங்களினின்றும் விடுபடுவர் என்பதாம்.

## நகர்ச் சிறப்பு

இவ்விதம் உயர் சிறப்பினைப் பெற்றுள்ளதான பொன்னி யாற்றின் நீர் பரவியோடப் பெற்றதன் பயனாய்ச் சோழ வள

நாடானது மற்றெந் நாட்டினும் சிறந்த பொன்னுடெனப் பன்னுட்டவராலும் புகழ்ந்து கூறப்படுகின்றது. அந் நல்வள நாட்டின்கண் ஆரூர்பதி யெனும் தொல்பதியானது அதிகம் சிறப்பினையுடைய நற்பதியாகும்.

அவ்வுயர்பதியின்கண் ஆன்மகோடிகளை உய்விப்பான் வேண்டி அரனெம்பெருமான் தானே தோன்றிய (ஸ்வயம்பு லிங்க) உருவுடன் எழுந்தருளி யிருக்கின்றனன்.

முன்னம், முசுகுந்த சக்கரவர்த்தி யானவர் மாயவனால் மகேந்திரனுக்கு அளிக்கப்பட்டதான ஸ்ரீ தியாகராஜ மூர்த்தியை இந்திரனிடமிருந்தும் பெற்று, இம்மண்ணுலகிற் கொணர்ந்து, ஆரூர் பதியின்கண், மேதிலத் தச்சனால் மிக மிகச் சிறப்புடன் கட்டப் பெற்றதான அழகிய ஆலயத்தில் எழுந்தருளச் செய்தனர். ஆகலானும், அப்பதி அதிகம் சிறப்பினையுடைய நற்பதியேயாம்.

மனு நீதி கண்ட சோழன், தன் மகன் ஆற்றிய குற்றங் கண்டு மனம் வருந்தி, அன்னவன் தனது அருமை மகனையிற்றே என்றும் நோக்காது, தானே ஒட்டிய தேர்க்காலின் கீழிட்டுப் பழிக்குப் பழி வாங்கிட, அச் சோழ மன்னனது அறவழிகண்ட அரனெம்பெருமான் ஆகாய வீதியில் எழுந்தருளி வந்து, மடிந்துபட்ட சீவர்க்கு மீண்டும் ஆயுளைக் கொடுத்து, அழியாப் பதவியை அருளியதும், அவ்வுயர் பதியிலேயாம். சமயக்குரவராலும், சன்மார்க்கப் பெரியோராலும், புகழ்ந்து பாடப்பெற்ற புண்ணிய பதியுமாகும் அத்திருப்பதி. “கரங்கொடுத்துச் சங்கருக்குக் கணைகடல்வாய்த் துயில்வோற்குச் சிரங்கொடுத்த பெருஞ் செல்வத் திருவாரூ” ரின் அருமை பெருமைபற்றி அளவிட்டுக் கூறுதற்கு யாவரே வல்லுநர் ஆவர்?

## பரம்பரை

"இகத்துக்குப் போக மறுமைக்கினிய பேரின்ப மெவர்க்கு நல்கிச், சகத்துக்குப் போகவினை துறந்த"—ஜீவன் முக்தி க்ஷேத்திரமாகிய அத்திரு ஆரூரின்கண், இற்றைக்குச் சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்பாக 'கிரிஜாகவி' (கிரிராஜகவி என்பாரும் சிலர்) என்ற ஓர் (ஆந்திர) அந்தணர் இருந்து வந்தனர். அப்பெரியார், தமது தாய் மொழியாகிய தெலுங்கிலும், வடமொழியிலும் மிகப் பாண்டித்தியம் உள்ளவராவர்; சங்கீத வித்தையை நன்கு கற்றுத் தேர்ந்தவர்; தெலுங்கு மொழியில், 'பக்தி ரசம்' நிறைந்ததாயும் 'வேதாந்த விஷயம்' செறிந்ததாயும் உள்ள பல அரிய கீர்த்தனங்களைப் பாடிப் புகழ் மிகப் பெற்றவர். அக்காலத்துத் 'தஞ்சை' மாநகரை ஆண்டு வந்த 'மகாராஷ்ட்ர' மன்னராய 'ஷாஜி' மகாராஜனால் பெரிதும் மதிக்கப்பெற்று, அன்னவரிட மிருந்தும் பகுமானங்களைப் பெருமிதமாய்ப் பெற்றவர். அன்னாரது பாடல்கள் அக்காலத்து அறிஞர்களால் அதிகம் கொண்டாடப் பெற்றன வெனக் கூறுதல் மிகையாகாது.

பெருமைமிக்க அப்பெரியார் பெற்ற ஐந்து புதல்வரில், இளையவராகிய இராமப் பிரம்மம் என்பவரே இது போழ்து நமக்கு வேண்டப் பெற்றவராவர். அன்னவர் மறை முதலாய அறநூல்களை நன்குணர்ந்தவராயும், ஸ்ரீ பகவானது பாதாரவிந்த பக்தியில் ஈடுபட்ட மனத்தராயும், நம் தேயத்து முன்னோர்களான 'மகரிஷிகள்' வகுத்திட்ட ஒழுக்க முறையில் மிகுதியும் பற்றுள்ளவராயும்; நற்குணக் குன்றென்ன இருந்துகொண்டு, சற்குணக் களஞ்சியம் போன்ற சாந்தையெனும் மனைவியுடன் இனிமைபெற நல்லறமாம் இல்லறத்தை நடத்திவந்தனர்.

## பிறப்பு வளர்ப்பு

காலத்தே மூன்று புதல்வரை ஈன்றெடுத்தனள் சாந்தை யெனும் சற்குணசீலை. அம் மூவரில் முதல்வர்க்கு ஜப்பேசன் என்றும், இரண்டாமவர்க்கு இராமநாதன் என்றும், மூன்று மவர்க்குத் தியாகராஜன் என்றும் அழகிய பெயரினைச் சூட்டி அன்புடன் வளர்த்து வந்தனர் அன்னை தந்தையர். (இராமப் பிரம்மத்திற்கு ஜப்பேசன் அல்லது பஞ்சாபகேசன், தியாக ராஜன் என்ற இரு புதல்வரே யென்றும் கூறுவர் சிலர்.) குழந் தைகள் மூவரும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ண முமாய் வளர்பிறை மதியென்ன வளர்ந்து வரலாயினர்.

## பதி மாற்றம்

இவ்விதம் இராமப் பிரம்மம் தமது மூன்று குழந்தை களுடனும், அன்புள்ள மனைவியுடனும் வாழ்ந்து வருங் காலத்து அவ்வாரூரில் தமது குடும்பத்தைக் காப்பாற்றுதற் கான சௌகரியங்கள் கிடைக்காமை கண்டனர்; 'இவ்வூரை விட்டும் அகன்று வேற்றூர் செல்வதே தகுதி' யெனக் கொண் டனர். தஞ்சைமா நகர்க்கருகாமை யிலுள்ளதும், பல்லோரா லும் 'புனிதமாய தலம்' எனப் புகழ்ந்து கூறப்படுவதும், தர்ம ஸம்வர்த்தனி யெனப்படும் அறம் வளர்த்த நாயகி அம்மை யுடன் அரனெம் பெருமான் பஞ்ச நதீச மூர்த்தமாய் எழுந் தருளி யுள்ளதும், சமய குரவர் பாடல் பெற்றதும், பொன்னி யாற்றின் கரையில் உள்ளதுமாய 'பஞ்சநத க்ஷேத்திரம்' எனப் படும் திரு ஐயாறு எனும் திருத்தலத்தை நாடி யடைந்த நம் இராமப் பிரம்மம் 'இத்தலமே நாமிருத்தற்குத் தகுதியுள்ள நற்றலமாகும்' எனக்கொண்டு அத்தலத்திலேயே வசித்து வர லாயினர். அவ்வூரில் 'உஞ்ச விருத்தி' செய்து, அதில் கிடைக் கப் பெறும் அமுதைக் கொண்டு ஒருவாறாய்த் தம் குடும்பத் தைப் பாதுகாத்து வரலாயினர்.

பரமனது அரிய குணங்களாகின்ற அமுதத்தை அருந்து வதிலேயே அவாவி நிற்கும் அப்பெரியாரது மனமானது, பொருள், செல்வாக்கு, கீர்த்தி, பெருமை, முதலாய இவ்வுலக வாழ்க்கை நலங்களில் சிறிதளவும் பற்றுக் கொள்ளவில்லை.

பெரியார்தம் பற்றற்ற நிலை

இவ்விதம், இராமப் பிரம்ம மானவர், இவ்வுலக வாழ்க்கை யானது, 'நீரிற்குமிழி' போன்று நிலையற்றதென நினைத்து ஆநந்த வெள்ளம் கரை புரண்டோடும் ஐயனது அழிவற்ற உலகத்தை அடையவேண்டுமெனக் கொண்டவராய், அவனது குணாதிசயங்களை இடைவிடாது கூறிக்கொண்டு இனிதே காலங் கழித்து வந்தனர். அந்நாளில், தஞ்சை மாநகரை ஆண்டு வந்த அரசர் பெருமான், சில வீடுகளைக் கட்டிச் சீரிய வழி நிற்கும் அந்தணர்க்குத் தானம் செய்யலாயினன். அது காலை அனைவராலும் அதிகம் புகழ்ந்து கொண்டாடப் பெறும் இராமப் பிரம்மத்தையும் ஒரு வீட்டைப் பெற்றுக் கொள்ளும் வண்ணம் வேண்டினன்.

ஆசை யெனும் பெருங்காற் றா
டிலவம் பஞ்செனவுமன தலையுங் காலம்
மோசம் வரும்; இதனாலே, கற்றதும்
கேட்டதும் தூர்ந்து, முத்திக்கான
நேசமு(ம்),நல் வாசமும்போய்ப் புலனாயிற்
கொடுமை பற்றி நிற்பர் ; அந்தோ!
தேசுபழுத் தருள் பழுத்த பராபரமே!
நிராசையின்றேல் தெய்வமுண்டோ?

எனும் 'தவராஜ சிங்க' மாகிய தாயுமானார் திருவாக்கின் படி, ஆசையற்ற மனத்தராய், ஐயனொருவனே அரும் பொருளெனக் கொண்டு, அவ்வுயர் பொருளை யடைவதிலேயே நாட்

டம் உடையவராய் நிற்கும் இராமப் பிரம்மம் அரசனது வேண்டுகோளுக் கிணங்கினரில்லை. அப் பெரியார் தம் மனோ நிலை கண்ட அரசன் ஆச்சரிய மடைந்தனன். 'இக் கலியுகத்திலும் இத்தன்மையர் உளரோ' என நினைத்து ஆநந்தமெய்தினன். இத்தகையினர்க்கு அளிக்கும் தானம் அல்லவோ பெரும் பயன் விளைவிக்குமெனக் கருதினன். 'எவ்விதமேனும் இப் பெரியார்க்கு ஒரு வீட்டை அளித்தல் வேண்டும்' என மன வுறுதி கொண்டனன். பின், அப்பெரியார்தம் திருவடி வணங்கித் தன் கோரிக்கையை வற்புறுத்தலாயினன்.

இவ்விதம் வற்புறுத்தி வேண்டும் அரசனது மனத்தைப் புண் படுத்துதற்கு மனமில்லாத இராமப் பிரம்மம் அரசனிட மிருந்தும் ஒரு வீட்டைத் தானமாகப் பெற்றுக் கொண்டனர். அப்பால், தம்மைவிட மிகுதியான வறுமையில் உழன்று நின்ற ஓர் அந்தணர்க்குத் தாம் தானமாகப் பெற்ற வீட்டைக் கொடுத்து விட்டனர்.

### பெற்றோர் கடன்

இவ்விதம் இகலோக நினைவற்ற நம் 'இராமப் பிரம்மம்' கல்வி கற்கும் வயதடைந்த தம் புதல்வர் மூவர்க்கும், தம் தாய்மொழியாகிய தெலுங்கையும், கடவுள் மொழியாகிய கீர்வாணத்தையும் நன்கு புகட்டினர்.

காலத்தே அம்மூவர்க்கும் முறைப்படி உபநயநம் செய் வித்தனர். மறைமுதலாய அறநூல்களையும் பயிலுவித்தனர்.

### மூவரது குணங்கள்

"சத்துவம(து) இன்பந் தனி(ல்) துவக்கும், தான் இரசத்
தொத்தியலும் கன்மம் துவக்குவிக்கும்,—மைத்தும்
மன்னறிவுதன்னை மறைத்திட்(டு) ஓர்ப்(பு) இன்மையினில்
துன்னமிகத் தான்றுவக்கும் சூழ்ந்து

கோவை இராமலிங்கம் ஆதீனம்
1151
01:3321

"முற்குணத்தில் ஆகு(ம்) முழுதுணர்வு, தான் இடையில்
அற்குணத்து லோபமது வுண்டாம்,—பிற்குணத்தில்
ஓராமை மோகம் உணராமை உண்டாகும்
சீர்ஆர் புகழ்விசையா! சேர்ந்து"

எனவரும் கண்ணனது கனி மொழிகளின் வண்ணம் ஸத்வ குணமானது, கலப்பற்ற நற்சுகத்தையடைவதிலும், ரஜோ குணமானது, 'கர்ம'த்தைச் செய்வதிலும், (பயனை எதிர் நோக்கி வினைகளைச் செய்வதிலும்,) தமோ குணமானது அஞ்ஞானச் செயலிலும், 'அஜாக்கிரதை' யிலும்; (விழிப்பின் மையிலும்) பற்றை யுண்டாக்குகின்றன.

ஸத்வ குணத்திலிருந்து, உயரிய ஞானமும்; ரஜோ குணத்திலிருந்து, பொருளை யடைவதில் பேராசையும்; தமோ குணத்திலிருந்து, விழிப்பின்மையும் மயக்கமும், அஞ்ஞானமும் உண்டாகின்றன என்பதாம். அவ்வழி பார்க்கின், நம் தியாகராஜர் ஸத்வ குணமுள்ளவராவர்; இராமநாதர் ரஜோ குணத்தின் வாய்ப்பட்டவராவர்; ஜப்யேசர் தமோ குணத்தின் வயப் பட்டவராவர்; எனக் கூறலாம்.

ஜப்யேசர் மிகுதியும் வக்கிர புத்தியையுடையவர்; ஆதலால், அவர் நன்னூல்களை வருந்திக் கற்பதில் ஆவல் கொள்வதில்லை. இராமநாதரும் முத்தண்ணாவின் வழிபற்றி யொழுகுபவரேயாவர். நம் தியாகராஜர் இளமைப் பருவத்திருந்தே தம் தந்தையைப் போன்ற பக்தி ஞான வைராக்கியங்களையுடையவராயும்; தந்தை செய்து வரும் 'பகவத் பூஜை'க்கு வேண்டற் பாலனவான பத்ரம் புஷ்பம் சந்தநம் தீர்த்தம் முதலாயவைகளைச் சேகரித்து வந்து கொடுப்பவராயும்; "தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை", "தாய் சொல் துறந்தால் வாசகம் இல்லை" எனும் முதுமொழியினைக் கடைப் பிடித்தொழுகு

பவராயும் இருந்து வந்தனர். அத்துடன், ஒழிந்த நேரங்களில், அதுபோழ்து அவ்வூரில் வசித்து வந்தவரும், 'ஸங்கீத சாஸ்திர'த்தில் மிகுந்த தேர்ச்சி யடைந்தவருமான ஸ்ரீவேங்கட ரமண தாஸர் எனும் 'மஹாவித்துவா' னிடத்துச் சேர்ந்து 'காந்தர்வ வேத'த்தையும் நன்கு கற்றுவரலாயினர்.

## இராமப்பிரமம் இவ்வுலகு நீத்தல்

இவ்விதமாய தம் புதல்வர் மூவரது புத்திப் போக்கினையும் அறிந்த நம் இராமப் பிரம்மம், மூத்தவர் இருவரது மனோநிலைகண்டு மிக வருந்தியவராயும், தியாகராஜர் தம் மனப்போக்கு கண்டு மட்டற்ற உவகை கொண்டவராயும், தம் 'குலதந' மாய் விளங்கும் ஸ்ரீராமபிரானை வழிபாடு செய்தவராய்க் காலத்தைக் கடத்திவந்தனர். இவ்விதம் சின்னாட் செல்லவும், தமக்கு ஆயுள் முடியுங்காலம் நெருங்கிவிட்டதை யுணர்ந்து, தாம் இருக்கையிலேயே தம் புதல்வர் மூவர்க்கும் மணம்செய்து வைத்துவிட வேண்டுமெனக் கருதிச் சின்னாளில் அவ்விதமே செய்தும் வைத்தனர். பின்னர் கொஞ்சகாலம்வரை பகவானது பெருங்குணங்களைப் புகழ்ந்தவராய் இருந்து, அவனது இணையிலாத் திருவடி நீழலையடையப் பெற்றனர். பதியின் பிரிவு கருதி மனம் பொறுது வருந்திய அப்பெரியார்தம் பிரிய மனைவியாம் சாந்தை யெனும் சற்குணவதியும், அடுத்த ஆண்டில் இம் மண்ணுலகை நீத்து விண்ணுலகு சென்றடைந்தனள்.

## சுவாமிகளது சங்கீத அப்பியாசம்

தாய்-தந்தையரை ஒருமிக்க இழந்த புதல்வர் மூவரும் அது குறித்து மிக வருந்தினர். ஆற்றுவார் தேற்றுவார் எவருமின்றி அங்கலாய்த்தனர். 'ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் மீண்டுவருவரோ?' வெனத் தமக்குத் தாமே யுணரப் பெற்றவராய்ப் பின்னர் மனம் தேறினர். 'பித்

ரார்ஜித'மாய அச்சிறு வீட்டில் மூவரும் ஒருமித்து வாழ்ந்து வந்தனர்.

நம் தியாகராஜர் நாடோறும் ஆசானிடம் சென்று, அன்பெழ அவர்தம் அடி வணங்கி நின்று, அன்னவரிடமிருந்தும் சின்னாட்களில் 'ஸங்கீத சாஸ்திர' த்தை நன்கு கற்றுத் தேர்ந்தனர். ஒவ்வோரிராகத்தையும் விரிவாக ஆராய்ந்து 'ஆலாபநம்' செய்வதிலும், பல்விதமாய் 'சங்கதி'களைக் கொடுத்துப் புது விதமாய 'பல்லவி'களைப் பாடுவதிலும், புதிது புதிதான 'கற்பனை'களைச் செய்து அலங்காரமாய்ப் பாடுவதிலும், இலக்கணப் பிழை சிறிதுமில்லாது கீர்த்தனங்களை அழகுற அமைப்பதிலும், இம்மகானைப் போன்றதொரு மஹாவித்வான் இப்பூதலத்தில் எவரும் இரரெ௳, நல்லோர் எல்லோராலும் நன்கு கொண்டாடப்பெறும் வகையில் பெரும்புகழ்படைத்து விளங்கினர்.

தந்தை சொற் கடவாது நின்று, தாய்மொழியை மறைமொழியாகக் கொண்டு நடந்து வந்து, அன்னாரிருவரது ஆசியினையும் அபரிமிதமாய்க் கொண்டதன் பயனாலும், 'சக்கரவர்த்தித் திருமகன்தன் தாளிணையினைக் கனவிலும் மறவாது நின்று, அவனது அரிய குணங்களை ஒரு மனத்தமர்ந்து அநுதினமும் பாடிவந்து, அதன் பயனாய் அவனது அருளைப் பெருமிதமாய்ப் பெற்றதன் பயனாலும்; பெரியாரும் கண்டு புகழத்தக்க உயரிய நிலையினையடையப் பெற்ற நம் தியாகராஜர், தாம் அடைந்துள்ள ஆக்கம் கண்டு சிறிதும் அகம் கொண்டனரில்லை. நிறைகுடம் ததும்புமோ?'

[குருவினிடமிருந்தும் 'கான சாஸ்திர'த்தைக் கற்றுத் தேர்ந்த நம் தியாகராஜ சுவாமிகள் தம் குலதெய்வமாக விளங்கிய ஸ்ரீராகவனது 'குண விசேஷ'ங்களை அமைத்து, வால்மீகி

யானவர் இராமாயணத்தை இருபத்து நாலாயிரம் சுலோகங்களால் கூறியதுபோல், இருபத்து நாலாயிரம் கீர்த்தனங்களால் துதித்திட வேண்டுமென மனதில் உறுதிகொண்டனர். அரனெம்பெருமான்,

"முராரி யாதிய தேவர்கள் முதலுறு முழுதுலகினி லுள்ளோர்
விராவி யாதொரு காரிய மாயினும் விளங்குறச் செயவென்றே
பராவி யுன்னருச்சனை செய்வோர் மனத்துறு பான்மை
*தந்தருளுள்ளன்
பிராது செய்பவர் காரியமூறு செய்திடுதி யென்றிவை
சொன்னன்"

ஆதலால், தாம் கொண்டுள்ள எண்ணம் எவ்வித இடையூறுமின்றி நிறைவேறும் வண்ணம், முதல் முதலில் "மலைமகள் மனத்தை மகிழ்விக்கவந்த மைந்தனே! கருணைத் தடங்கடலே! பரமனது அன்பைப் பெருமிதமாய்ப் பெற்ற பெரியோனே! தியாகராஜனுகிய என்னுல் துதிக்கப்பெற்ற தேவ தேவனே! தமியேனைக் காப்பாற்றும்" என்பதாகப் பொருளமைந்த 'கிரிராஜஸுதா! தனய! ஸதய!' எனும் கீர்த்தனத்தைப் 'பங்காளா' இராகத்தில், 'ஆதி' தாளத்துடன் அமைத்துப்பாடி 'மூலாதாரப் பொருளாய விநாயகனைத் துதித்தனர்.

பின்னர், இராமனது விஷயமாய்க் கீர்த்தனங்கள் பாடத் தொடங்கினர். முதலில், 'தியாகராஜனுல் துதிக்கப்படும் ஹே இராமா! உன்னை வழிபடுபவர் பிறரது தயவை நாட வேண்டுவதில்லை' எனும் பொருளுடன் கூடிய 'நின்னே பஜன ஸேயுவாடனு' எனும் கீர்த்தனத்தை, 'நாட்டை' இராகத்தில், 'ஆதி' தாளத்தில் அமைத்துப் பாடித் துதித்தனர். அப்பால், 'ஜகதானந்த காரக' எனும் கீர்த்தனத்தை. 'நாட' இராகம் 'ஆதி'

---

*தந்தருளுகனன் பிராது எனவும் பாடமுண்டு.

தாளத்தில் அமைத்தும், 'துடுகு கல' எனும் கீர்த்தனத்தை 'கௌள' இராகம் 'ஆதி' தாளத்தில் அமைத்தும், 'எந்தரோ மஹானு பாவுலு' எனும் கீர்த்தனத்தை, 'ஸ்ரீ' இராகம், 'ஆதி' தாளத்தில் அமைத்தும்; 'ஸாதிஞ்சேனே' எனும் கீர்த்தனத்தை, 'ஆரபி' இராகம் 'ஆதி' தாளத்தில் அமைத்தும், 'கனகன ருசிரா' எனும் கீர்த்தனத்தை, 'வராளி' இராகம் 'தேசாதி' தாளத்தில் அமைத்தும், ஐந்து கீர்த்தனங்களைப் பாடினர். அவை ஐந்தும் 'பஞ்ச ரத்தினங்கள்' எனப் புகழ்ந்து கூறப் பெறும்.

அப்பால், தமது புதல்வராய ஜப்யேசர், தியாகராஜர் எனும் இருவர்க்கும் கலியாணத்தைச் செய்து வைத்துப் 'பரகதி' யடைந்தனர் இரமப் பிரம்மம். இராமப் பிரம்மத்திற்கு, 'ஜப்யேசன், 'தியாகராஜன்' எனும் இருபுதல்வரே. இக்கொள்கை, ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளது சிஷ்ய பரம்பரையில் வந்த ஸ்ரீ நரசிம்ம பாகவதரது ஆகும்.]

## குடும்ப விபாகம்

இவ்விதம் நம் தியாகராஜர் இருந்துவரும் நாளில், தமது தமையன்மாரிருவரது நடக்கை தம் நடக்கைக்கு நேர் விரோதமாக விருந்ததுடன் தாம் கைக்கொண்டொழுகும் கொள்கையினை அவர்கள் வெறுப்பவராயும் 'லௌகிக விருத்தியிலிருந்துகொண்டு பக்தி மார்க்கத்தைக் கனவிலும் நினையாதவராய்க் 'கண்டதே காட்சி-கொண்டதே கோலம்' என்பதாக நிலையற்ற இவ்வுலக வாழ்க்கையை நிலையுள்ளதாய் நினைந்தும், 'இறைவன் ஒருவன் உளன்' எனும் நினைவினைச் சிறிதும் கொள்ளாது, பொருள் வருவாய் ஒன்றினையே முதன்மையாகக் கொண்டு கிடைத்தற்கரிய காலத்தை வீணே கழிப்பவராயும் இருந்து வருவதை யறிந்து பெரிதும் மனம் வருந்தினர்.

தமது முன்னோர் தேடிய பொருளில் தமக்குள்ளே ஒரு சிறு பாகத்தை அவர்களிட மிருந்தும் பெற்றுத் தனியே இருந்து கொண்டு, எவ்வித இடைஞ்சலு மின்றி பகவானுக்குப் பணி விடை புரிந்துவர வெண்ணினர். தாம் மனதிற் கொண்ட வெண்ணத்தைத் தமையன்மாரிடம் கூறினர். தம் கருத்திற் கிணங்கிய அவர்களிடமிருந்தும், அவ்வீட்டின் ஒரு சிறு பாகத்தையும், தம் குலதநமாய்த் தமது முன்னோரால் உபாசித்து வரப்பெற்றதான பரிவாரங்களுடன் கூடிய ஸ்ரீராகவனது பட்டாபிஷேக மஹோத்ஸவ விக்கிரஹத்தையும் தமது பங்கிற்குப் பெற்றுக்கொண்டனர்; தமது 'தர்மபத்நி'யுடன் தமையன்மாரது தொந்தரையினின்றும் விலகித் தனியே இருந்து கொண்டு தாசரதியைத் துதிபாடி வரலாயினர். அவ்வமயம் நம் சுவாமிகளுக்குப் பதினாறும் ஆண்டு பூர்த்தியாயது.

## சுவாமிகள் சற்குரு உபதேசம் பெறல்

அயனது கட்டளையைச் சிரமேற்கொண்ட அந்தணப் பெரியார் ஒருவர், தாம் வதியும் தலமாகிய காஞ்சி மாநகரை விட்டுப் புறப்பட்டுத் திருவையாறு வந்தடைந்தனர். நம் தியாகராஜருக்குத் தமது திவ்ய தரிசனத்தை யளித்தனர். தம்மைப் பணிந்து நிற்கும் அவரது தன்மைகண்டு தாங்கொணு உவகை கொண்டனர். பரிபக்குவ மனத்தராய தியாகராஜர்க்கு பகவானது 'தாரகமந்திர'த்தை உபதேசித்தருளி "தியாகராஜனே! இம்மந்திரமானது எல்லா மந்திரங்களிலும் மிக மிகச் சிறந்த மந்திரமாகும். இம்மகா மந்திரம், 'சிவ பஞ்சாட்சரம், நாராயண அஷ்டாட்சரம்' ஆகிய இரண்டின் ஜீவாட்சரங்களையும் சேர்த்து அமைக்கப் பெற்றதாகும். ஆதலால், இம்மந்திரம் 'சைவ—வைணவ' பேதம் சிறிதுமற்றதாகும். இம் மகாமந்திரத்தை எவனொருவன் தனது ஆயுட் காலத்திற்குள் தொண்


ணூற்றுறு கோடித் தடவை உருப்போட்டு முடிக்கின்றுனே அவன் ஜீவன்முக்த' னுவன். ஆதலால், நீ உனது ஆயுட்காலத் திற்குள் இம்மந்திரத்தைத் தொண்ணூற்றுறு கோடி உருப் போட்டு முடிப்பாயாகில் ஸ்ரீராகவன் உனக்குக் காட்சி யளித் துத் தனது, 'ஸாயுஜ்ய' பதத்தையும் அருளுவன்" எனத் திரு வாய் மலர்ந்தருளிச் சென்றனர்.

சற்குருவினது கட்டளையைச் சிரமேற்கொண்ட நம் தியா கராஜர், இறைவனது திருமுன் அமர்ந்து, நியமத்துட னிருந்து கொண்டு, நாள் ஒன்றுக்கு ஓரிலட்சத்து இருபத் தைந்தாயிரம் வீதம் உருப்போட்டுவந்து, இருபத்தோராவது வருடமுடிவில் தொண்ணூற்றுறு கோடியும் 'ஜபம்' செய்து முடித்தனர்; கடைசி தினத்தன்று, கார்மேக வண்ணனது திருமுன் அமர்ந்து, அவனது திருநாமங்களை 'பஜநம்' செய்து கொண்டிருக்குங்கால், தெருவாயிற்கதவை எவரோ தட்டுவதாய் அறிந்தனர்; 'யரோ பெரியார் இக்கடும் வெய் யில் வேளையில் ஏழைக்குக் காட்சியளிக்க வந்துள்ளனர் போ லும்' எனக் கருதினர். அவ்வளவில் இருக்கைவிட்டும் எழுந் தனர். 'தடதட' என ஓடிச் சென்றுத் தெருக்கதவைத் திறந்தனர்.

## கண் கோள்ளாக் காட்சி

ஆ! கதவைத்திறந்து பார்த்த நம் சுவாமிகள் கண்ட காட்சியினை யாவரே வருணித்துக் கூறுதற்கு வல்லுநராவர்? அவ்வரிய அற்புத ஆநந்த மயமான காட்சிதான் என்னே?

வென்றி வாள்புடை விசித்து மெய்ம்மைபோல்
என்றும் தேய்வுறுத், தூணி யாத்(து), இரு
குன்றம் போன்றுயர் தோளில் கொற்றவில்
ஒன்று தாங்கினுன்; உலகம் தாங்கினுன்.



ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளுக்கு ஸ்ரீ ராமர் தரிசனம் கொடுத்த காட்சி.

'அன்ன தம்பியும் தானுமாய்'க் கோசிக முனிவனது வேள்வி தனைக் காக்கவேண்டி எழுந்தருளிய அத் திருக்கோலத்துடன் வந்து, நம் தியாகராஜ சுவாமிகளுக்குக் காட்சியளித்து மின்னலே போன்று மறைந்தருளினன் இராகவன்.

காண்டற் கரிதான கண்கொள்ளாக் காட்சியினைக் காணப் பெற்ற நம் சுவாமிகள், உவகையே நிறைந்த உள்ளத்தினராயினர். பூம் பொழில் தருக்கிளையினில் கட்டிய 'கோற்றேன்' கசிந்துருகி வழிந்து மதுக்குளமாய்த் தேங்கியிருப்ப, அதனில், அலர்ந்த மலர்களின் மதுவுண்ட வண்டினங்கள் மெய்ம் மறந்து வீழ்ந்து மயங்கிக் கிடப்பனபோல, இராகவனது பூம் பொழிலாகின்ற திருமுகத்து, அலர்ந்துள்ள மலராகின்ற விழி யிடத்துச் சுரக்கும் அருளாகின்ற மதுவைத் தியாகராஜ னெனும் வண்டு உண்டு மெய்ம்மறந்து, பேரானந்தப் பெருங் கடலில் வீழ்ந்து அமிழ்ந்து மயங்கிக் கிடந்தது.

## பெரும்புகழ் படைத்தல்

இவ்விதம் செயலற்ற சித்திரப்பாவை போலவிருந்த நம் சுவாமிகள், சின்னேரம் சென்றதும் தம்முணர் வடைந்தனர். அவன் அருளால் அவன் குணம் வியந்து பாடும் ஒரு திறத் தினை யடையப்பெற்றவராய்க் 'கடல் மடைதிறந்த'வாறு பாட வாரம்பித்தனர்.

"ஏ! ராமா!! ஏனோ என்மீது உனக்கு தயவில்லை? இவ்விதம் என்னை அசட்டை செய்வதற்கு இதுவோ தருணம்? வாலிபனும், பீதாம்பரதாரியும், நல்லோரைக் காப்பவனும், திருமகளிடம் அளவிலா அன்பு கொண்டவனும், வற்றாத அம்பறாத் தூணியைத் தோளில் தரித்தவனும், நன்மையளிப்ப வனும், கருணைத் தடங்கடலா யுள்ளவனும், நீலமேக நிறத்தை யுடையவனும், கள்ளார் துளவமாலையை யணிந்தவனுமான

மூவர்க்கும், மற்றியாவர்க்கும் முதல்வனான ஏ! இராமா! வாடா! மஹாநுபாவா! வாடா! தாமரைக்கண்ணா! வாடா! இரகுவம்ச திலகா! வாடா! அமுத வெள்ளமன்ன மனதை யுடைய பரிஜநங்களுடன் கூடியவனே! கடலேபோன்ற கம்பீர முடையவனே! அரக்கர் பூண்டொழித்தவனே! மாரனே போன்ற அழகிய திருமேனியுடையவனே! புத்திமான் களால் பெரிதும் விரும்பப் படுபவனே! மறை முதலாய அனைத்து நன்னூற்களினதும் அரும்பொருளா யுள்ளவனே! என்மீது உனக்கு ஏனோ தயவில்லை?

திருமுடி மன்னர் யாவர்க்கும் தலைவனானவனே! மாமுனி வர் பூஜிக்கும் மலரடியுடையவனே! இரவியையும் மதி யையும் இரு விழியாகக் கொண்டவனே! காப்பவனே! ஒளி மிகுந்த திருமேனியனே! சந்திரசேகரனால் கொண்டாடப் பெற்றவனே! கருடனை ஊர்தியாகக்கொண்டவனே! தேவேந் திரன் பணியும் திருவடியானே! அயனது ஐயனாகிய அண் ணலே! கோடி ஸூர்யப் பிரகாச முள்ளவனே! அரக்கரா கின்ற யானைக் கூட்டத்திற்கு அரிமா போன்றவனே! பங்கய முகத்தோனே! கோசிகமுனிவனது வேள்வியைக்காத்தோனே! பரம பாகவதர்களால் பூஜிக்கப் பெறுகின்றவனே! 'யோகி' கள் தம் நன்மனத்தால் நினைக்கப் பெறுகின்றவனே! ஆதி—அந்தம் இல்லாதவனே! பாம்பணைமீது பள்ளிகொண்டோனே! 'ஆதிமூலமே' என்றழைத்த யானையை ஓடிவந்து காத்தவனே! புன்னைமலர் புனைந்தவனே! எப்பொழுதும் பாபத்தைப் போக்கடிப்பவனே! வேதாந்தத்தில் விசாரிக்கப் படுபவனே! சுகதுக்கத்திற்குப் புறம்பானவனே! தியாகராஜனால் துதிக்கப் படும் ஏ! ராமா! ஏனோ என்மீது உனக்குத் தயவில்லை?" என்ற பொருளமைந்த, 'ஏல நீ தயராது' எனும் கீர்த்தனத்தை 'அடாணா' இராகத்தில், ஆதிதாளத்தில் அமைத்துப்

பாடினர். (அப்பாடலே அவரது முதலாவது பாடலாகும் எனவும் கூறுவர்). அளப்பரிய சொற்சுவை தோன்றப்—பொருட்சுவை விளங்கக் கேட்பதற்குக் கர்ணாம்ருதமாயிருந்த அப்பாடலின் அமைப்பினைக் கண்ட அவ்வூர் வாசிகளாய இராமசேஷா சாஸ்திரிகள், பாஷ்யம் கிருஷ்ண சாஸ்திரிகள் முதலிய சங்கித வித்துவான்களும், வடமொழிப் புலவர்களும் நம் சுவாமிகளைப் பெரிதும் வியந்தவராய், "இவன் என்ன கந்தருவனோ? அல்லது நாரதனோ? மற்று யாவனோ?" எனக் கூறி அகமகிழ்ந்திருந்தனர்.

## பூஜா விதி

இவ்விதமாய்ப் பேரறிஞர் பலரது அன்பினையும் பெற்ற நம் தியாகராஜ சுவாமிகள், தம் வீட்டின் நடுக்கூடத்தில் அழகிய 'நவமணி' மண்டபமொன்றை நன்கு அலங்கரித்துப் பட்டாபிஷேகத் திருக்கோலங் கொண்டெழுந்தருளியுள்ள ஸ்ரீராமபிரானது திவ்ய மங்கள விக்ரஹத்தைப் பொற்பீடத்தமரப் பண்ணி, முக்காலத்தும் முறை வழுவாது பூஜை செய்து வரலாயினர். மேலும், இராமசந்திர மூர்த்திக்கு, 'நித்யோத்ஸவம்' 'பக்ஷோத்ஸவம்' 'மாஸோத்ஸவம்' முதலிய உத்ஸவங்களைச் செய்து வரலாயினர். அவ்வக்காலத்தே இராமனை நன்கு அலங்கரித்து, "தியாகராஜனால் துதிக்கப்படும் கோதண்டபாணியான ஸ்ரீராமனை, மனமிக மகிழ அமரமாதர்களும், அணிமா முதலாய அஷ்டாங்க யோகங்களைச் செய்தவர்களான சித்தர்களும் பணிகின்றனர். தங்கத்தையும் அகன்மணியையும் பழிக்கத்தக்க அழகிய திருமேனியரான சீதாதேவியுடன், உரோகிணியுடன் கூடிய இளம் மதியேபோன்று கொலுக்கூடத் தமர்ந்திருக்கும் அப்படிப்பட்ட இராமனை, ஏ! பாகவதர்களே!! பழவினை வந்தணுகா வண்ணம் பணிந்திடுவோம்; வாருங்கள்!" என்ற பொரு

ளமைந்த 'கொலுவையுன்னடே' எனும் கீர்த்தனத்தை, 'நட பைரவி' ராகத்தில், 'ஆதி' தாளத்துடன் அமைத்துப் பாடுவர். அப்பால், கொலுவில் அமர்ந்துள்ள கோதண்டபாணிக்கு முக்காலத்தும் முறைப்படி பூஜைசெய்து, அவ்வக்காலத்தே அவனைத் தமது கண்ணாரக் கண்டு, மெய்யாரப் பணிந்தெழுந்து நின்று, 'ஆ! எனது பாக்கியமே பாக்கியம்! இது போழ்து எளியேன் காணும் இவ்வித ஆநந்தக் காட்சியினை யாவரே காணப்போகின்றனர்? பிரம்மா—ஸரஸ்வதி—ருக்மிணி—சீதை —இலக்ஷ்மணன் முதலிய எவர்க்கும் இவ்வித அற்புதக்காட்சி காணக்கிடைப்பது அரிதேயாகும்'' என்பதாக நினைந்து, மனமுருகி, ஆநந்தக் கண்ணீருகுத்தவராய்க் 'கொலுவமரே கதா— கோதண்டபாணீ' எனும் கீர்த்தனத்தைத் 'தோடி' ராகத்தில் 'ஆதி' தாளத்துடன் அமைத்துப் பாடி ஆநந்தக் கூத்தாடுவர். பின்னும் அவ்வக்காலத்தே பொருத்த முள்ளதாக அரிய பல கீர்த்தனங்களைப் பாடி யருளுவர்.

இவ்விதம் நம் சுவாமிகளால் நடத்தி வரப்படும் உத்ஸவ வைபவங்களைக் காணவேண்டியும், தேனினுமிக்கத் தீஞ்சுவை ததும்பி யிருக்கும் அன்னாரது கீர்த்தனங்களைக் கேட்டாநந்திக்கவேண்டியும், அவ்வூரானைவரும் ஆங்கு வந்து கூடுவர்.

நாளுக்கு நாள் நம் சுவாமிகளது புகழ் எங்கணும் பரவ, பிற ஊர்களினின்றும்—பிறதேசங்களினின்றும் பலர் வந்து கூடி, நம் சுவாமிகளைக் கண்டு, அவரால் பாடப்படும் அமிழ்தினுமினிய பாடல்களைக் கேட்டு உவகை மலிந்த உள்ளத்தினராவர்.

## சுவாமிகளது சுபாவம்

" அம்புவியில் மிக்க மெய்ஞ்ஞானியைக் கண்டாலும்
அதுஒரு வேஷம் என்பார் :
ஆகம புராணம் அதுநூல் விரும்பார்கள் பரி
யாச கதையே மெச்சுவார் ;

கம்பமிசை ஒரு கோடி கரணமிட்டாலும் அது
கண்கட்டு வித்தை என்பார் ;
கற்பனை அலங்கார மாக்கவிகள் பாடினும் ;
கற்றவர்க் கெளிய வென்பார் ;
நம்பிவிசு வாசமொடு துதிசெய்யினும் கள்ள
ஞானம் என்பார்கள் ;.............."

ஆதலால், இக்கலியுக மகிமையினை என்னென்று கணித்துக் கூறுவது ? உண்மை வழி பற்றி நடப்போர்க்கு இக்கலியானது ஒரு சிறிதும் இடம் கொடுப்பதாகவில்லை. 'காலஸ்ய குடிலாகதி :' என்ற வண்ணம், கபடமே நிறைந்துள்ள இக்கலி காலப் போக்கானது, நேரிய வழி விடுத்து வளைவான (கோணலான) வழி பற்றியே செல்லா நிற்கின்றது.

"கலௌ கல்மஷ சித்தாநாம்
பாபத்ரவ்யோப ஜீவிநாம்
விதிக்ரியா விஹீநாநாம்
................................".

என்றபடி, இக்கலியில் வாழும் மாந்தர்கள், குற்றமே நிறைந்த மனத்தராயும்,

" தத்த(ம்) நிலைக்கும், குடிமைக்கும், தப்பாமே
ஒத்த கடப்பாட்டில் தாளூன்றி—எய்த்தும்,
அறம்கடையில் செல்லார், பிறன்பொருளும் வெஃகார்,
புறம்கடைய(து) ஆகும் பொருள்" எனும்

குமர குருபரர்தம் கனி மொழியினை மறந்து, மறவழி நின்று பொருள் தேடுபவராயும்,

" குறைந்திடினும் தன்கருமம் குற்றமா மேலா
நிறைந்தியலு மற்றையதி னேரே—மறைந்திறந்து
தன்கருமத் தைச்செயினும் தாளன்று வேறான
வன்கருமத் தச்சம் வரும்" எனும் கண்ணனது

கனிமொழியினைக் கனவிலும் நினையாது, கொள்வன விடுத்தும், விடுப்பனக் கொண்டும் நடப்பவராயும் இருந்து வருவர். மேலும், நிமலனது நல்லருளை நாடி யடைந்தோர் தம்மைக் காணில், 'இது ஒரு பகல் வேடம்' என இகழ்ந்து கூறி அசியாடி நிற்பர். அவ்விதம் இவர்கள் பரிசு செய்து இகழ்வதால்

"அந்தணரை, நல்லவரைப்
 பரமசிவன் அடியவரை, அகந்தையால் ஓர்
நிந்தனை சொன்னாலும் என்ன? வைதாலும் என்ன?
 அதில் நிஷேதம் உண்டோ?
சுந்தரர்க்குத் தூது சென்ற தண்டலைநீள்
 நெறியாரே! துலங்கும் பூரண
சந்திரனைப் பார்த்து நின்று நாய்
 குரைத்த போதில்என்ன தாழ்ச்சிதானே"

என்றபடி, அறவழி நிற்போர்க்குக் குறைவேற்படப் போமோ? அதேபோல, அறிதற்கரிய அரும் பொருளாம் பரம்பொருளின் பேரருளைப் பெருமிதமாய்ப் பெற்றதன் பயனைப் பூர்வ பட்சத்து இளம் மதி வளர்வதேபோல் நம் தியாகராஜ சுவாமிகளது புகழ், நாளுக்கு நாள் வளர்ந்தோங்குவதை யறிந்த அவ்வூர் வாசிகளில் சிலர், நம் சுவாமிகள்மீது பொறாமை மிகக் கொண்டது ஓர் ஆச்சரியமல்ல.

பொறாமை யெனும் பேய்வாய்ப் புகுந்தார்க்குப் பிற நிந்தை புரிதல் இயல்பேயாகும் அல்லவா? பெரியாரைப் பிழைப்பதால் ஒருவர் தமக்குப் பெருங்கேட்டையே வருந்தியழைப்பவராவர் எனும்மொழி பொன்மொழியே யாமல்லவோ? அழுக்காறு பூண்டார்க்கு அறியும் திறன் மழுங்கிப் போம் என்பதுவும் பொய்யாமோ? ஆதலால்,

'எரியால் சுடப்படினும் உய்வுண்டாம்; உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்'
'குன்(று) அன்னார் குன்ற மதிப்பின் குடியொடு
நின்(று) அன்னார் மாய்வர் நிலத்து'

எனவரும் தண்டமிழ்த் திருமறைப் பொருளினை, அன்னார் எவ்விதம் அறிதற்கு ஆற்றலுள்ளாராவர்?

"அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான்; பிறன்ஆக்கம்
பேணு(து) அழுக்கறுப் பான்"

எனும் நாயனார்தம் நன்மொழியின் வண்ணம், பிறர் அடைந்துள்ள பெருக்கம் கண்டு புகழ்ந்து கூறாது, அன்னவர்மீது பொறாமை மிகக் கொண்டு இகழ்ந்துரையாடுபவர், தமக்கு அறமும் ஆக்கமும் வேண்டாதவரே யாவர்.

இவ்விதம் தம்மீது அழுக்காறு கொண்ட சிலர், தம்மைப் பற்றிப் பிறரிடம் இகழ்ந்துரையாடுவதைச் செவியுற்ற நம் தியாகராஜ சுவாமிகள் 'இதனால் நமக்கேதும் குறைவேற்படப் போகின்றதில்லை; இருப்பினும், அறிவை இழந்த அந்தகராய அவர்கள் அநியாயமாய் அழிந்துபடுவரே' என மனத்திற்கருதி, அன்னவர் மீது அதிக இரக்கம் கொண்டனர். அவரது செய்கைக்கு மிக வருந்தியவராய், இராமபிரானது திருமுன் நின்று, "என் அப்பனே! அன்பு எனும் மணத்தை முகர்ந்தும், அறியாத அறிவிலிகளது கூட்டத்தில் என்னை விடுத்து, யாவரும் பகிடி செய்திடத் தாம் அதை வேடிக்கை பார்த்திருப்பது தகுதியாமோ?" எனும் கருத்தமைந்த சில கீர்த்தனங்களால் தமது குறையை இராகவனிடம் முறையிட்டுக் கொண்டனர். மற்றும் அவ்வூரில் வதிந்துவந்த சில சங்கீத வித்துவான்கள், சுவாமிகளது சங்கீதத் திறமைகண்டு மனம் பொறாது யாவரும் ஒருங்கு குழுமியிருந்து, "இவன் என்ன சங்கீத

சாஸ்திரத்தைப் பிழையறக் கற்றவனோ? இவனுக்குச் சங்கீதத்தில் இலக்ஷிய ஞானமே யல்லாது இலக்ஷண ஞானம் சிறிதேனும் உண்டோ? தவிர, 'ஸ்வர'ஜ்ஞானமென்பது இவனிடம் சுத்த சூன்யம்" எனப் பலவிதம் தம்மைப்பற்றிக் குறைத்துக் கூறிவருவதை யறிந்த நம் சுவாமிகள், 'ஸ்வர ஸாஹித்ய'த்துடன் கூடியதாகச் சில கீர்த்தனங்களைப் பாடி யருளினர்.

அருந்தவ முனிவரது ஆசிபெறல்

இவ்விதமாய் நம் சுவாமிகள் இறைவனை வழிபடுவதிலேயே தமது முழுமனத்தையும் செலுத்தி வருங்காலத்து, ஒரு நாள் சுமார் பத்து நாழிகை இருக்கலாம்; தம் தலையில் எண்ணெயை வைத்துத் தேய்த்துக்கொண்டிருந்தனர். அவ்வமயம் துறவி யொருவர் வந்தனர்; எண்ணெய்த் தலையுடன் உட்கார்ந்திருக்கும் தியாகராஜரைக் கண்டனர். அவ்வளவில் இருக்கை விட்டு எழுந்த நம் சுவாமிகள் அஞ்சலி அஸ்தராய் நின்று வந்தவர்க்கு மரியாதை செய்தனர்.

அது கண்டு மனமிக மகிழ்ந்த துறவி, "ஐயா, இவ்வூரில் தியாகராஜன் என்னும் பெயர்பூண்ட சங்கீத வித்துவான் ஒருவர் இருந்து வருவதாகக் கேள்விப்பட்டேன். அவரது சங்கீதத்தைக் கேட்டு ஆநந்தித்துச் செல்ல வெண்ணி ஆவல் கொண்டு வந்துள்ளேன். அவர் எவ்வில்லத்திலிருந்து வருகின்றனர்?" எனக் கேட்டனர்.

அச் செம்மொழியினைச் செவிமடுத்த தியாகராஜர் ஆநந்த மனத்தராய்ச் "ஐயனே, தாம் பெருமைப் படுத்தவந்த அந்தத் தியாகராஜன் தமியனே யாகும். தாம் திருவாய் மலர்ந்தருளின் தெரிந்த வரையில் பாடுகின்றேன்" என வணக்கத்துடன் கூறி நின்றனர்.

உடனே துறவி அநுமதியளிக்க, நம் சுவாமிகள் தம்புருவை யெடுத்துத் தந்திகளை மீட்டி அழகாய்ச் சுருதி கூட்டி அரிய கிர்த்தனங்கள் சிலவற்றை உருக்கத்துடன் பாடினர்.

அவ்வளவில் மெய்ம்மறந்து ஆநந்தக்கண்ணீர் உகுத்து நின்றனர் துறவி. "அப்பனே! உனது கானமானது கந்தருவ கானத்தையும் தோற்கடித்து விட்டது எனலாம்; அல்லது, சருக்கரைப் பந்தலில் தேன்மாரி சொரிந்ததை யொத்து இருந்ததெனலாம்; இல்லாவிடின், பாலும் தெளிதேனும் கற்கண்டும் கனிரசமும் ஒன்று கலந்து கூட்டிய தீஞ்சுவைக்குழம்பென்ன விருந்ததெனலாம். அமுத தாரையன்ன உனது கானமுதத்தை அள்ளிப்பருகி ஆநந்த மயமாகி விட்டேன். அப்பனே! கான ரஸத்தைப் பிறர்க்கு மளித்துத் தாமும் அநுபவித்துப் பாடக்கூடிய உன்னைப்போன்ற ஒருவரை இவ்வுலகத்தில் எங்கும் கண்டிலேன். அப்பனே! இச்சுவடி உன்னிடமே இருக்கட்டும். நான் சென்று நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு இவ்விடமே பிக்ஷைக்கு வருகின்றேன்" எனக் கூறிச் சென்றனர்.

நம் சுவாமிகள் நீராடிவிட்டு அந்த யதியின் வரவை எதிர்பார்த்திருந்தனர். நெடுநேரம் காத்திருந்தும் நித்திய கருமம் முடித்து வரச்சென்றவர் வராமை கண்டு கவலை மிகக் கொண்டனர்; ஊரெங்கும் சென்று தேடிப்பார்த்தனர்; எதிர்ப்படுவோரைக் கேட்டும் பார்த்தனர். எங்கும் அவரைக் காணப்பெறாது ஏக்கத்துடன் இல்லம் வந்தடைந்தனர். பகல் முழுவதும் பட்டினி யிருந்தனர். அந்திப் பொழுதானதும் ஐயனுக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளையும், பூஜையையும் செய்து முடித்து அவ்விடமே படுத்து உறக்கத் தாழ்ந்தனர்.

ஆழ்ந்த உறக்கத்திலிருந்த நம் சுவாமிகளது கனவில் காலைப் போழ்து வந்த துறவி தோன்றி, "அப்பனே! நான் ஐய

னது அடியவர்க்கடியவனுன நாரதன். உனது உயரிய குணங் கண்டு, உன்னை நேரில் காண ஆவல் கொண்டு, இன்று காலை உன் இல்லம் தேடித் துறவியாய் வந்தவன் நானே. உன்னிடம் நான் அளித்துள்ள சுவடி "ஸ்வரார்ணவம்" எனும் பெயருடைய உயரிய சங்கீத சாஸ்திரமாகும். அக்கிரந்தத்தை இதுவரை இப்பூவுலகில் எவரும் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. அச்சுவடியைப்படித்து விஷயங்களை அறிந்து கொள்ளும் திறமை உள்ளோர் இவ்வவனிமிசை உன்னைவிடப் பிறிதொருவர் இல்லையெனக் கண்டேன். குற்றமே நிறைந்துள்ள இக்கலியில், பகவானது குணவிசேடங்களும், கான வித்தையின் அருமை பெருமையும் உன்னுல் வெளிப்பட வேண்டுமென்ற எண்ணம் கொண்டு, அதை உன்னிடம் சேர்ப்பித்துள்ளேன். அது, முன்னெருகாலத்தில் கைலையங்கிரியில் வீற்றிருக்கும் அரனெம்பெருமான் அம்மை பார்வதிக்குக் கூறிய மிகவும் இரகசியமானவைகளில் ஒன்ருகும். அதை நீ துணையாய்க்கொண்டு சங்கீத சாஸ்திரத்தை நன்னிலைக்குக் கொண்டு வருவாயாக" எனத் திருவாய் மலர்ந்து மறைந்தருளினர்.

அவ்வளவில் துயில் கலைந்தெழுந்த நம் சுவாமிகள் ஓடோடியும் சென்று அச்சுவடியை யெடுத்து அவிழ்த்துப் பிரித்துப் பார்த்தனர்; அது தாம் கனவில் கண்டவண்ணம், 'ஸ்வரார்ணவ' மாயிருத்தல் கண்டு ஆநந்தமெய்தினர். முன்னுள் வந்து தம்மைப் புகழ்ந்து சென்றவர் முனிவர் பெருமாளுகிய நாரத பகவானே யென வோர்ந்தனர். அவ்வளவில் தாம் மோசம் போனதை நினைத்து மனம் நொந்தனர். 'கைக்கெட்டியது வாய்க் கெட்ட வில்லையே' யென வெண்ணி யெண்ணி அங்கலாய்த்து நின்றனர். உடனே நாரதமுனிவரின் அருட்டிறம் வியந்து, 'ஸ்ரீநாரத' எனும் கீர்த்தனத்தைக் 'கானடா' இராகத்

தில் 'ரூபக' தாளத்துடன் அமைத்துப் பாடினர். அப்பால், 'நாரத குருஸ்வாமி' எனும் கீர்த்தனத்தைத் 'தர்பார்' எனும் இராகத்தில் ஆதிதாளத்துடன் அமைத்துப் பாடினர். பிறகு, 'வரநாரத' எனும் கீர்த்தனத்தை, 'விஜயஸ்ரீ' எனும் இராகத்தில், ஆதிதாளத்தில் அமைத்து அவர் புகழ் வியந்து பாடினர்.

அப்பால், நாரத முனிவர் அளித்துச் சென்ற அச்சுவடியை நன்கு படித்து, அதனுட் பொதிந்து கிடக்கும் அரும் பொருள்களை யுணர்ந்து, சங்கீத சாஸ்திரத்தில் மிகத் தேர்ந்தவராயினர் நம் சுவாமிகள். அதன் பின், ஸ்ரீ ராகவனை நேரில் காணவேண்டுமெனும் அவா மிகக்கொண்டனர்.

[நாரத முனிவர் துறவிவேடம் பூண்டு வந்து நம் சுவாமிகளைப் பாடச் சொல்ல, 'வந்தவர் இன்னவராகத்தான் இருத்தல் வேண்டும்' என மனதிற் கருதிய நம் சுவாமிகள், 'ராமா நின்னே' (ஹுஸேனி—ஆதி) 'ஸ்ரீநாரத' 'நாரத குருஸ்வாமி' 'வரநாரத' எனும் கீர்த்தனங்களைப் பாட, அது கேட்ட நாரதர், 'இவன் நம்மை இன்னவனெனக் கண்டு கொண்டு விட்டனன் போலும்!' என நினைந்து, ஸ்ரீராம தாரக மந்திரத்தை அவர்க்குபதேசிக்க, அதனால் மனமிக மகிழ்ந்த நம் சுவாமிகள் 'எந்த பாக்கியமோ' (ஸாரங்கா—தேசாதி), 'இதே பாக்யமு' (கன்னட—த்ரிபுடை), 'த்யானமே' (தன்யாஸி—ஆதி) 'மும்மூர்த்துலு' (அடாண—தேசாதி), 'ஸந்தேஹமுனு தீர்ப்புமு' (ராமப்ரிய—தேசாதி) எனும் கீர்த்தனங்களைப் பாட, அது கேட்டக மிக மகிழ்ந்த துறவி 'ஸ்வரார்ணவம்' எனும் சுவடியை யளித்து மறைந்தனர்' என்பது நரஸிம்ம பாகவதரது மதமாகும்.]

'ஸ்வரார்ணவம்' எனும் கிரந்தத்தின் துணை கொண்டு, சங்கீத சாஸ்திரத்தின் கரையைக் கண்டுபிடித்த நம் சுவாமிகள், ஒருமை மனம் பூண்டு நின்று, சங்கீத சாஸ்திரத்தின் சிறப்பு

பற்றியும், ஸ்ரீராம பக்தியின் பெருமை பற்றியும், 'ஸீதாவர ஸங்கீத ஜ்ஞானமு' (தேவகாந்தாரி—தேசாதி), 'ஸ்வர ராக ஸுதா ரஸயுத பக்தி' (சங்கராபரணம்—ஆதி), 'கீதார்த்தமு ஸங்கீதாநந்தமு' (ஸுரடி—தேசாதி), 'ஸங்கீத ஜ்ஞானமு பக்திவிநா' (தன்யாஸி—தேசாதி), 'ஸங்கீத சாஸ்த்ரஜ்ஞானமு' (முகாரி—தேசாதி), 'நாதோபாஸந' (பியாகடை—தேசாதி), 'மோக்ஷமுகலதா' (ஸாரமதி—தேசாதி), 'ஆநந்த ஸாகர' (கருடத்வனி—தேசாதி) 'சோபில்லு' (ஜகன்மோகினி—ரூபகம்), 'ராகஸுதாரஸ' (ஆந்தோளிகா—தேசாதி), 'என்னடு ஜூதுநோ' (கலாவதி—ஆதி), 'நேநெந்து வெதுகுதுரா' (பியாக்—ஆதி), 'வினயமுநநு' (ஸௌராஷ்ட்ரம்—சாபு) முதலிய கீர்த்தனங்களால் புகழ்ந்து பாடினர்.

'விநவே ஓமனஸா' (விவர்த்தனி—ரூபகம்), 'உண்டேதி ராமுடொக்கடு' (ஹரிகாம்போஜி—ரூபகம்), 'மனஸா ஸ்ரீராம சந்த்ருனி' (ஈசமனோஹரி—ஆதி), 'மரவகார' (தேவகாந்தாரி—தேசாதி), 'பரலோக ஸாதனமே' (பூரிகல்யாணி—தேசாதி) 'பஜரேபஜ மானஸ' (கன்னட—சாபு), 'தெலிஸிராம' (பூரண சந்திரிகா—ஆதி,) 'கடத்தேர ராதா' (தோடி—தேசாதி), 'பஜனஸேயராதா' (அடாணா—ரூபகம்) 'பஜனஸேயவே' (கலியாணி—ரூபகம்), 'சக்கனிராஜ' (கரகரப்பிரிய—ஆதி) முதலிய கீர்த்தனங்களால் நம் சுவாமிகள் தமது மனதிற்கு நல்லுபதேசம் செய்தனர்.

[அப்பால், வாகீசரது பக்திக்குகந்து காட்சியளித்த அரனெம்பெருமான் வீற்றிருக்கும் 'தக்ஷிண கைலாஸம்' எனும் ஆலயத்திற்குத் தமது இல்லக்கிழத்தியுடன் சென்று, நாள் ஒன்றுக்கு ஓரிலட்சத்து எண்ணாயிரம் இராம நாமங்களை ஜபம் செய்து பகவதர்ப்பணம் செய்து வந்தனர். இவ்விதம் இராம நாம பஜனம் செய்வதால் உண்டாகும் இன்பத்தை வியந்து,

'அப்பராம பக்தி' (பந்துவராளி—ரூபகம்), 'பதவிநீஸத்பக்தி' (ஸாளகபைரவி—ஆதி), 'நாம குஸுமமுலசே' (ஸ்ரீ—தேசாதி), 'எடுலேன பக்தி' (ஸாம—சாபு), 'பக்தி பிக்ஷமீயவே' (சங்கராபரணம்—ரூபகம்), 'ராமபக்தி ஸாம்ராஜ்யமு' (சுத்த பங்காளா-ஆதி), 'ஸ்மரணேஸுகமு' (ஜனரஞ்ஜனி—தேசாதி) எனும் கீர்த்தனங்களைப் பாடி, 'தெலியலேரு ராம' (தேனுகா—தேசாதி), 'நடசி நடசி' (கரகரப்பிரிய—ஆதி), 'ஏமிஜேஸிதேமி' (தோடி—சாபு), 'ராமா நீயெட' (திலீபகம்—தேசாதி), 'நிஜமுக நீமஹிம' (சகாணு—தேசாதி), 'நீபஜனகான' (நாயகி—ஆதி), 'கலிகருலகு' (குந்தலவராளி—தேசாதி) முதலிய கீர்த்தனங்களால் பக்தியின் பெருமையினை யறியப் பெறாத மக்களை நிந்தித்தனர். இவ்விதம் தொண்ணூற்றாறு கோடி இராம நாமங்கள் ஜபம் செய்து முடிந்த அன்று, ஸ்ரீராமன் தனது பரிவாரங்களுடன் தோன்றிக் காட்சி யளிக்க, அது கண்டு ஆநந்தமனத்தராய சுவாமிகள், 'கிரிபை நெல கொன்ன' (சஹாணு—ஆதி), 'தொரகுநா இடுவண்டிஸேவ' (பிலஹரி—ஆதி), 'கநுகொநுஸௌக்கியமு' (நாயகி-ரூபகம்), 'ஸொகஸு ஜூட தரமா' (கன்னட கௌள—ரூபகம்), 'எந்த முத்தோ' (பிந்து மாலினி—ஆதி,) 'நிநுவிநாஸுகமுகாந' (தோடி—ரூபகம்), ச்யாம ஸுந்தராங்க' (தந்யாசி—ரூபகம்), 'லாவண்ய ராம' (பூர்ணஷட்ஜம்—ருத்ரப்ரிய என்பர் சிலர்—ரூபகம்), 'மரகத மணிவர்ண' (வராளி—தேசாதி) எனும் கீர்த்தனங்களைப் பாடிப் பேராநந்த மயமாயினரென்பது நரஸிம்ம பாகவதரது மதம்.]

## நித்தியவிதி

இவ்விதமாய் நம் சுவாமிகளது 'பக்தி—சிரத்தை—வைராக்கியம்—ஸங்கீத ஸாஹித்யத்திலுள்ள திறமை' முதலிய உயரிய தன்மையினை யறிந்த பலர் பலவிடங்களினின்றும்

வந்து கூடி, சுவாமிகளைக் கண்டு, அவர்தம் அமிழ்தினுமினிய அரிய பாடல்களைக் கேட்டு ஆநந்தித்துச் செல்வதாக விருந்தனர்.

ஒவ்வொருநாளும் நம் சுவாமிகள், பொழுது புலர்வதற்கு ஒரு யாம மிருக்கையில் படுக்கை விட்டு எழுவர்; காலைக் கடன்களை முடித்து வருவர்; தம்புருவை எடுத்துச் சுருதி சேர்த்துக் கொள்வர்; பரமனது குணவிசேடங்களாகின்ற மணம் செறிந்த மலர்களை, இராகமாகின்ற நாரில் தொடுத்துப் பகவானுக்குச் சாத்துவர்; பின்னர், தாம் வளர்த்து வந்த பசுவின் பாலைக் கொணர்ந்து ஸ்ரீராகவனுக்கு நிவேதனம் செய்வர்; அப்பால், அவனைத் துதித்துப் பாடியிருப்பர்; பதினைந்து நாழிகையானதும் பகவானுக்குத் திருமஞ்சனம் செய்து, அறுசுவை யுண்டியைக் கண்டருளச் செய்வர்; அதன் பின்னர், தம்மைக் குருவென வந்தடைந்துள்ள சீடர்களுடன் இருந்து அவர்கட்கு உபதேசம் செய்தருளுவர். இரவு நேரம் வந்ததும் பகவானது திருமுன்னர் தம் சீடர்களுடன் கூடி 'பகவத் பஜனை' செய்வர்; பால்—பழம்—தாம்பூலம் இவைகளைப் பகவானது சந்நிதியில் வைத்து, "ஏ! இராமா! ஜனக மஹாராஜனுடைய புதல்வியான ஸீதாதேவியின் திருக்கையினால் பரிசுத்தம் செய்யப்பட்ட இந்தப்பாலையும், வெண்ணெயையும் ஏற்றுக்கொண்டு,............தமது மனைவி தம்பி முதலியவர்களுடன் உண்பாய்" என்ற கருத்தமைந்த 'ஆரகிம்பவே' (தோடி—ரூபகம்) எனும் கீர்த்தனத்தையும்; "ஏ! இராகவா! ஜாதிக்காய், ஏலக்காய், ஜாதிபத்திரி, பாக்கு, வெற்றிலை இவைகள் சேர்ந்த, உள்ளன்புடன் என்னால் கொடுக்கப்படும் இத்தாம்பூலத்தை, உன்மீது அளவிலாவன்பை வைத்துள்ள எனது தாய் சீதாதேவி சுருட்டி மடித்துக் கொடுக்கும் தாம்பூலமாக நினைத்துப் போட்டுக்கொள்" எனும் கருத்தமைந்த 'விடெமுஸேயவே' (கரகரப்ரிய—ஆதி) என்ற கீர்த்

தனத்தையும் பாடிப் பின், உபசார கீர்த்தனங்கள் சில பாடித் திரை விட்டுப் படுக்கைக்குச் செல்வர்; பொழுது புலர்ந்ததும் எழுந்து சென்று கடன்களை முடித்துவந்து திரையெடுத்துப் பார்ப்பர் ; முன்னிரவு வைத்துச் சென்ற பால்—பழம் இவற்றில் ஒரு பகுதியும், தாம்பூலம் மென்று படிகத்தில் உருண்டையாய் உமிழப்பட்டும் இருக்கக் காண்பர் ; 'இவை எனது அன்பனுகிய இராமபிரானுல் எனக்களிக்கட்ட பிரசாதமாகும்' எனவெண்ணி, அவற்றை எடுத்து உண்பர். பின்னர் 'நிறு பாவஸி' (பலஹம்ஸ—ஆதி), 'ராம நீ ஸமாநமெவரு' (கரகரப்ரிய—ரூபகம்), 'மேரு ஸமான திர' (மாயாமாளவ கௌளம்—தேசாதி), 'கருணு ஸமுத்ர ராம' (தேவகாந்தாரி—ஆதி), 'பவநுத' (மோஹனம்—ஆதி), 'மோஹனராம' (மோஹனம்—தேசாதி), 'காருவேல்புலு' (கலியாணி—ஆதி), 'எந்துகௌ கலிந்துரா' (சுத்ததேசி—ஆதி), 'சேதுலார' (கரகரப்ரிய—ஆதி), 'எட்லா தொரிகிதிவோ' (வஸந்த—ஆதி), 'துளஸீ தளமுலசே' (மாயாமாளவ கௌளம்—ரூபகம்), 'துளஸீபில்வ' (கேதார கௌளம்—ஆதி) எனும் கீர்த்தனங்களைப் பாடுவர்.


ஒவ்வொரு ஏகாதசியன்றும் பட்டினி கிடப்பர். பகல் முழுவதும் சுவாமிகளது சீடர்கள் அவரது பாடல்களை ஐயன் திரு முன்னிருந்து 'ஆநந்தாமிர்த வர்ஷ' மாகப் பாடுவர். இரவில் நம் சுவாமிகள் இராமனுக்கு உத்ஸவம் செய்விப்பர். அவ்வமயம் நம் சுவாமிகள் பகவத் பக்தியில் பெரிதும் ஈடுபட்ட மனத்தராய் மெய்ம்மறந்து நின்று, 'ஸ்ரீபதே' (நாகஸ்வராவளி—ஆதி), 'ரமிஞ்சுவாரெவருரா' (ஸுபோஷிணி—ரூபகம்), 'நெநருஞ்சிநாநு' (மாளவி—ஆதி), 'நிநுவிநா நாமதெந்து' (நவரஸகன்னட—ரூபகம்), 'நநுமோமு' (ஆபேரி—ஆதி), 'தாசரதே தயாசரதே' (கோகிலப்ரிய—தேசாதி), 'ஏராமுனி

நம்மிதிஞே' (வருளாபரணம்—த்ரிபுடை), 'தல்விதண்ட்ருலு கல' (பலஹம்ஸ—ஆதி), 'மனவினி வினுமா' (ஜய நாராயணி—தேசாதி),'மரசேவாடஞ' (கேதாரம்—ஆதி) 'ராமா நீபை தனக்கு' (கேதாரம்—ஆதி), 'வினநாசகோனி' (பிரதாபவராளி—ஆதி), 'லோகா வனசதுர' (பியாகடை—ஆதி) முதலிய கீர்த்தனங்களை மனமுருகப்பாடும் ஒரு சுகத்தைச் சொல்லத் தரமன்று.

பிருந்தாவனத் துவாதசியன்று துளஸியம்மனைப் பூஜை செய்வர். அவ்வம்மனை ஆதி பராசக்தியாயும், மகாதேவியாயும் கருதி,'தேவி ஸ்ரீ துளசம்ம'(மாயாமாளவ கௌளம்—ஆதி), 'அம்மாராவம்ம' (கலியாணி—ஜம்பை), 'ஸ்ரீ துளஸம்ம' (தேவகாந்தாரி—ஆதி), 'துளஸீ ஜகஜ்ஜனனீ' (ஸாவேரி—ரூபகம்) முதலிய பல கீர்த்தனங்களைப் பாடுவர்.

ஸ்ரீ பஞ்சாபகேசர் ஸப்தஸ்தான உற்ஸவத்தின் போழ்து நம் சுவாமிகள், தம்மிடம் சங்கீதம் பயின்ற உள்ளன்பினராய நற்சீடர்களுடன் சேர்ந்து, ஸ்வாமியுடன் சென்று பாடும் ஒரு வைபவத்தைப் பிரம்மாநந்த வைபவமென்ற விளம்புதல் வேண்டும். அவ்வமயம் கூடும் பக்த கோடிகள் தேனினும் மிக்கத் தீஞ்சுவை செறிந்தன்ன நம் சுவாமிகளது பாடல்களாகின்ற மதுவை மிகுதியாகவுண்டு மெய்ம்மறந்து, உணர்வொழிந்து, ஒன்றே கருத்தாய் நிற்பர்.

இவ்விதம் நம் சுவாமிகள் ஒரு கடிகைப் பொழுதினையும் வீண் போக விடாது பகவானை நினைந்து போற்றியிருப்பர். 'நாத தநுமநி சம்' (சித்தரஞ்ஜனி—ஆதி), 'ஏஹித்ரிஜகதீச'(ஸாரங்க—சாபு), 'தேவாதி தேவ ஸதாசிவ'(ஹிந்து ராமக்ரியா—தேசாதி) எனும் கீர்த்தனங்களின் இனிமையை எவரே எடுத்துக் கூற வல்லுநராவர்?



திருவையாறு பஞ்சநதீசர் ஸப்தஸ்தானப் பல்லக்குக் காட்சி.

By the kind Courtesy of Mr. V. Kuppuswami Iyer of the "Vivekabodhini" Office, Mylapore, Madras.

## பல்லோரானும் புகழப் பெறுதல்

### I

இவ்விதமாய் நம் தியாகராஜ சுவாமிகள் தமது வாழ்க்கையை இனிமைபெற நடாத்தி வந்தனர். அக்காலத்துத் தெலுங்க நாட்டில் 'பொப்பிலி' எனும் நகரில், இருந்த 'கேசவய்யா' வெனப் பெயர்பூண்ட சங்கீத வித்துவான், உலகின் நானுபக்கங்களினும் சென்று, ஆங்காங்கும் இருந்துவந்த சங்கீத வித்துவான்களை வென்று வெற்றிக்கொடி, வீரசங்கிலி, தோடா, முதலியவைகளுடன் உலகினர் போற்றத், தமக்கு நிகர் ஒருவருமில்லையென அகமிகக்கொண்டு சுற்றிவருங்கால் திருவையாறு வந்தடைந்தனர்; அவ்வூரில் தியாகராஜர் அதிகம் புகழப் பெறுவதைக் கேட்டனர்; அவ்வளவில் அகம் பொங்கி யெழுந்தனர்; 'இவனையும் வென்று வெற்றிமாலை புனைய வேண்டும்' என வெண்ணினர்; தியாகராஜாது இல்லம் நாடி யடைந்தனர்; சுவாமிகளைக் கண்டனர்.

பெரியாரொருவர் தமது இல்லம் நாடி வருவதை யறிந்த சுவாமிகள், வந்தவரை 'வருக' வெனக்கூறி, இருக்க ஆசனமளித்து, "ஐயன்மீர்! தம் வரவால் தமியேனது சிற்றில் புனிதத்தன்மை யடையப் பெற்றது. தாம் வதியும் தேயம் யாதோ? தமது திருநாமம் என்னவோ?" என வணக்கத்துடன் பேசி உபசரித்தனர்.

அது கேட்ட அவ்வகங்காரி, "ஐயா! அதெல்லா மிருக்கட்டும். நானொரு சங்கீத வித்துவான். தாம் சங்கீத வித்தையைக் கரைத்துக் குடித்தவரென ஈண்டுளோர் சொல்லக் கேள்விப்பட்டேன். இவ்வுலகில் என்னை வெல்பவர் எவருமில்லையென வெற்றிமாலை சூடிவந்த நான், உம்மை மட்டும் விட்டுச் செல்ல மனமில்லாதவனாய் இவண் வந்துள்ளேன். தாம் என்

னுடன் பாட வேண்டும். நான் தோல்வி யடைவேனேயானல் தம்மால் வழிபடப்பெறும் ஸ்ரீராமனுக்கும் தமக்கும் அடிமைப் பட்டவனுவேன். அப்பால், யான் பெற்றுள்ள விருது முதலிய யாவும் தம்முடையதே யாகும். தாம் தோல்வி யடையின், எனக்கு அடிமையாக வேண்டும். என்ன சொல்லுகின்றீர்?" என வீறுப்புப் பேசி நின்றனர்.

அச்சுடுமொழியினைச் செவிமடுத்த நம் சுவாமிகள் ஏதும் பதில் கூறுமல் "சங்கீதத்தில் வல்லுநரான பெரியார்கட்கும், அரனெம்பெருமானுல் ஆக்கப்பட்டதான 'ஸாம வேத'த்தை யறிந்தவர்கட்கும், ஒலிவடிவமாயுள்ள 'ஸரிகமபதநி' எனும் ஏழு ஸ்வரங்களை யுணர்ந்தவர்கட்கும், திருமகள்—வரைமகள்—கலைமகள்—மலரோன்—மாயவன்—முக்கண்ணன் — நாரதன்—புரந்தரன்—பரதன்—காசிபன்—சண்டீசன் — ஆஞ்சநேயன்—குமரன்—கரிமுகன் — மார்க்கண்டேயன் — குறுமுனிவன்—தும்புரு—சோமநாதர்—சாரங்கதேவன் — நந்தி முதலாய பெரியோர்கட்கும், தியாகராஜனுகிய என்னல் வணங்கத் தகுதியுள்ளவர்களான 'பிரம்மாநந்தம்' எனும் பாற்கடலென்ன (ஆழ்ந்த) இரகசியங்களை யுணர்ந்த பெரியார்கட்கும் வந்தனம் செய்கின்றேன்" எனப் பொருளமைந்த 'விதுலகு ம்ரொக்கேத' (மாயாமாளவ கௌளம்—ஆதி) எனும் கீர்த்தனத்தையும்; "மதியைப் பழிக்கும் மிக்க எழில் வழிந்தொழுகும் முக மண்டலத்தை யுடைய ஸ்ரீராமனைத் தமது இதயத்தாமரை யிடத்துக் கண்டு பேராநந்தப் பெருவெள்ளத்தை யள்ளிப் பருகும் பெரியார் எத்தனை பேர் உளரோ அத்தனை பேர்கட்கும்; காமனை நிகர்த்த பேரழகு வாய்ந்தவன் இராமன்; அவனுக்கு 'ஸாம கான'த்தில் மிகவும் ஆசையுண்டு; ஆதலால், அந்த 'ஸாம கான'த்தி

னின்றும் பிழிந்தெடுத்த 'ரஸ'மாகிய ஸங்கீதத்தில் அவனது குண விசேடங்களைச் சேர்த்துப் பாடும் பாகவதர்கள் மிக்க விரைவில் பகவானைத் தம் வயமாக்கிக் கொள்ளும் திறமுடையராவர்; அத்தன்மையர் கிடைத்தற்கரிதான பேற்றினைப் பெற்றவராவர்; ஆதலால், அத்தகையினர் எத்தனை பேர் உளரோ அத்தனை பேர்கட்கும்; மனத்தின் வனத்திடை ஆஞ்சனேயன் சஞ்சரிப்பதுபோல் சஞ்சாரம் பண்ணி, பகவானுடைய 'ஸ்வரூப' த்தைக் கண்டறிந்து, அதை மனத்தகத்தே நிலைநிறுத்தி, எப்பொழுதும் கண்டு ஆநந்தத்தில் திளைப்பதான 'தியானயோக' த்தில் வல்லுநராய 'பரம யோகிகள்' எத்தனை பேருளரோ அத்தனை பேர்கட்கும்; திடமெனத் தமது மனமாகின்ற தாமரை மலரைப் பகவானது திருவடிகளில் சமர்ப்பிக்கும் உயர் பெரியார் எத்தனை பேர் உளரோ அத்தனை பேர்கட்கும்; நன்னடக்கையுடன் நின்று, அல்லோரை நல்லோராக்கும் ஐயனை நினைந்து, 'ஸ்வர-லயம்' முதலிய இராகத்துடன் பாடத் தெரிந்த பெரியார் எத்தனைபேர் உளரோ அத்தனை பேர்கட்கும்; பகவானது குண விசேடங்களாகின்ற மணிமாலையானது கண்டத்தில் விளங்க நின்று, 'ஸம்ஸாரம்' எனும் மாபெரும் கடலைத் தாண்டுதற்கு வகையறியாது தவித்து நிற்கும் உலகினர்க்குப் 'பக்தி' யெனும் புணைதனைக் காட்டி, அக்கடலைத் தாண்டச் செய்யும் பக்த கோடிகள் அனைவர்க்கும், அதிசயிக்கத்தக்க நன்னடவடிக்கை யுள்ளவனை ஸ்ரீராமனை, எப்பொழுதும் தமது கண்ணாரக்கண்டு, களிவெறி கொண்டு, பேராநந்தப் பெருங்கடலில் மூழ்கிக் கிடக்கும் பெருமைமிக்க பெரியார் எத்தனைபேர் உளரோ அத்தனை பேர்கட்கும்; பரம பாகவதர்கள், மௌன யோகிகள், சந்திரன், சூரியன், ஸனக ஸனந்தன் முதலியவர்கள், திக்குப் பாலர்கள்,

PHOTOCOPY · KAVIKOTTU MADALAYAM

அமரர், கிம்புருடர், பிரஹலாதன், நாரதன், தும்புரு, ஆஞ்சநேயன், அரனெம்பெருமான், சுகப்பிரம்மம், பிதாமகன், பூசுரர், குற்றமற்ருேர், பெருமை மிக்குள்ளோர், அழிவற்ருேர், பேரின்பப் பெரும் பேற்றைத் துய்ப்போர், மற்றுமுள்ள பாகவதர்கள் எத்தனைபேர் உளரோ அத்தனை பேர்கட்கும்; ஏ! ரகுபதே! உனது, திருமேனி—திருநாமம்—பெருவலி—அருமை பெருமை—தைரியம்—சாந்தமான மனம்—ஈகை—வாய்மை—துன்மத கண்டனம்—முதலாய குண விசேஷங்களை ஆநந்தமாய்ப் பாடுபவர்கள் எத்தனைபேர் உளரோ அத்தனை பேர்கட்கும்; பாகவதம்—இராமாயணம்—பகவத்கீதை—வேதங்கள்—சாஸ்திரங்கள்—புராணங்கள்— முதலியவைகளின் உட்பொருள்களையும், முப்பத்து முக்கோடி தேவர்களின் அந்தரங்க பாவங்களையும் அறிந்து, பாவ—ராக—தாளங்கள் சேர்ந்த சங்கீதத்திஞல் கிடைக்கும் சுகத்திஞல் நீண்ட ஆயுளைப் பெற்று, 'நிரதிசயாநந்த' சுகத்தில் ஈடுபட்டவர்களாய, தியாக ராஜனுகிய எனக்குப் பெரிதும் அன்பர்களா யுள்ளோர் எத்தனைபேர் உளரோ அத்தனை பேர்கட்கும்; சந்தோஷம்—அதிசயம் முதலியன ஏற்பட்ட காலங்களில் இராமனது திருநாமத்தைக் கூறுபவர்களும், இராம பக்தியிற் சிறந்த இராமப்பிரம்மத்தின் புதல்வனுய தியாகராஜனுல் கொண்டாடப் பெறும் இராமனது மெய்யன்பர்களுமாகிய பக்த சீலர் எத்தனைபேர் உளரோ அத்தனை பேர்கட்கும் அநேக வந்தனங்கள்" என்பதாகப் பொருளமைந்த "எந்தரோ மஹாநுபாவுலு" (ஸ்ரீ—ஆதி) எனும் கீர்த்தனத்தையும்; "ஏ! ராமா! மிருதங்கம், தாளம் முதலாய பாட்டிற்கு வேண்டிய கருவிகளுடனும், சுருதி லயத்தோடு ஸுஸ்வரத்துடனும், 'உபநிஷத்' துக்களின் பொருள்கள் பொதிந்தும், 'நவரஸ' ங்கள்

ததும்பியுமுள்ள கீர்த்தனங்களைப் பாடி உன்னைச் சந்தோஷிக்கச் செய்யும் திறமையினைப் பெற்றுள்ளவர்கள் அல்லவோ பெரும்பாக்கியத்தைப் பெற்றவராவர்?" எனும் கருத்தமைந்த "ஸொகுஸுகா ம்ருதங்க தாளமு" (ஸ்ரீரஞ்ஜனி—ரூபகம்) என்ற கீர்த்தனத்தையும் பாடினர்.

அமுத விந்து வன்ன சுவாமிகளது பாடல்களைக் கேட்டு, அவற்றுள் பொதிந்து கிடக்கும் அரும் பொருள்களையுணர்ந்த கேசவய்யா தாம் கொண்ட அகம் ஒழியப் பெற்றவராய் ஏதும் தோன்றாது திகைத்துப் போயினர். 'இப்பெருமை மிக்க பெரியார்க்குப் பெரிதும் அபராதியாகி விட்டோமே' யென நினைந்து நடுநடுங்கி நின்றனர். தாம் பெற்ற விருதுகளைச் சுவாமிகளது திருவடியில் வைத்தனர்; அவரை மும்முறை வலம் வந்து பணிந்தெழுந்தனர். அப்பால், ஐயனது திரு முன்னர் பணிந்தெழுந்தனர். "ஐயனே! அகந்தை மிகக் கொண்டதனால் அகக்கண் மறைவுபட்டுப் பெரியாரைப் பிழைத்து இதுவரை எனது வாணாள் வீணாளாய் விட்டது. இன்றே தம்மால் அகக்கண் திறக்கப் பெற்றேன். எளியேனை ஆட்கொண்டு, தமியேனது குற்றம் பொறுத்து, அடியேனுக்கு நல்லுபதேசம் செய்தருள வேண்டுகின்றேன். சிறு மதியேனையும் தமது சீடரில் ஒருவனாய் ஏற்றுக்கொள்ளும்படி மன்றாடுகின்றேன்" எனக் கூறிச் சுவாமிகளது திருவடிகளைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டனர்.

அவர் கொண்டிருந்த அகம் குலையப் பெற்றமை கண்ட சுவாமிகள், "எல்லாம் எம்பெருமான் செயல்" என நினைந்து "அப்பனே! உன் மனத்திடைக் குடிபுகுந்திருந்த காமக்குரோதாதி உள் பகைவர் ஒழிந்து பட்டமையினால், இனி உனது பாடல்கள் எம்பெருமானுக் குகந்தவை யாகும்; இனி எக்கா

லும் இறைவனது குண விசேடங்களையே பாடுக" என இனிய மொழிகளால் அவரைத் தேற்றினர். அப்பால், அவருக்கு நல்லுபதேசங்களைச் செய்தருளிச் சின்னாட்கள் சென்றதும் தமதிருப்பிடம் செல்ல உத்தரவு கொடுத்தனுப்பினர்.

## II

திருவனந்தபுரத்தின்கண், யாதவகுலத்தில் தோன்றியவரும், பகவத் பக்தியில் சிறந்தவரும், சங்கீத வித்தையில் மிக்க தேர்ச்சி யடைந்தவரும், நற்குண நன்னடக்கை யுள்ளவருமான 'கோவிந்த தாஸர்' எனும் பெயரினைக்கொண்ட மகா வித்வான் ஒருவர் இருந்து வந்தனர். ஒரு நாளிரவு அன்னவரது கனவில் இராமபிரான் தோன்றி, "அப்பனே! எம்மிடத்துப் பேரன்பு பூண்டுள்ள ஒருவன் சோழவள நாட்டிலுள்ள 'திருவையாறு' எனும் தலத்தில் வதிந்து வருகின்றனன். அன்னவனது பெயர் "தியாகராஜன்" என்பதாகும். அவன் சங்கீத வித்தையின் கரைதனைக் கண்டவன். ஆதலால், நீ அங்குச் சென்று அவனைக் கண்டு வருவாயாக" எனக் கட்டளையிட்டு மறைந்தருளினன். அவ்வளவில் துயில் கலைந்தெழுந்த கோவிந்த தாஸர் ஐயனது கட்டளையைச் சிரமேற் கொண்டு, ஆங்கிருந்தும் புறப்பட்டுத் திருவையாறு வந்தடைந்தனர்; சுவாமிகளது இல்லம் புகுந்தனர்; அங்குப் பெரியார் பலர் குழுமி யிருப்ப, அவர்கள் நடுவே, 'உடுக்கள் புடைசூழ்ந்திருப்ப, நிறைமதி வீற்றிருப்பதே போன்று' நம் தியாகராஜ சுவாமிகள் வீற்றிருக்கக் கண்டனர்; களி மிகக் கொண்டனர்; அவ்வவைதனில் அமர்ந்து, சங்கீதத்தில் தாம் அடைந்துள்ள திறமையினைக் காட்டினர்; அப்பால், சுவாமிகளை வேண்டி, அவர்க்குள்ள திறமையினையும் தாம் கண்டனர்; சுவாமிகளைப் பெரிதும் புகழ்ந்து கொண்டாடினர்; தாம் கண்ட

கனவினையும் சுவாமிகளுக்கு எடுத்துக் கூறினர்; அப்பால், யாவரிடமும் விடை பெற்றுக் கொண்டு, "பண்டரிபுரம்" நோக்கிச் சென்றனர்.

## III

'வண்(டு)ஈன்(று) அறையா முகைமுளரி
மடல்வாய் திறப்ப மடைதிறந்து
தண்தேன் குதிக்கும் வளவயல்சூழ்
காசி நகரம் தனில் உதிக்கும்
விண்தோய் மரமும் புல்லும்எல்லா(ம்)
மீட்டும் பிறவா நெறிசேர்தல்
கண்டால், அகல்வான் உறைவோரில்
சிறந்த(து) என்னக் கழறும்........."

ஆதலால், காசித் தலம் நனிசிறந்த புண்ணியத் தலமெனக் கூறவும் வேண்டுமோ? அக்காசித் தலத்தின் அருமை பெருமையினை அளவிட்டுக் கூற ஆதிசேடனும் அஞ்சுவனெனில் நம்மால் ஆகவும் போமோ? அப்புண்ணிய தலத்தின்கண் வாழ்ந்திருந்த "இராமதாஸர்" எனும் தொண்டரது கனவில் விசுவநாதப் பெருமான் தோன்றி, நம் தியாகராஜரது பெருமையினை அவர்க்கு எடுத்துக்கூறி, சுவாமிகளைக் கண்டு வரும் வண்ணம் பணித்தருளி மறைந்தனர்.

வெகுகாலமாய் இராமேசுவர யாத்திரை சென்றுவர வெண்ணி யிருந்த இராமதாஸர், இறைவனது கட்டளையை ஏற்று, அதுவே தருணமெனக் கொண்டு, ஆங்கிருந்தும் புறப்பட்டுத் திருவையாறு வந்தடைந்தனர்; நம் சுவாமிகளைக் கண்டனர்; அவர்தம் திருவடி பணிந்தெழுந்தனர்; சுவாமிகள் காட்டிய ஒரு பீடத்தமர்ந்தனர்; தம் வரலாற்றைச் சுவா

மிகளிடம் விண்டனர்; தாம் சங்கீதத்தில் அடைந்துள்ள திற மையைச் சுவாமிகளுக்குப் பாடிக் காட்டினர்; அப்பால், சுவா மிகளுக்குள்ள திறமையினைத் தாம் கண்டு களிப்பெய்தினர்; தாம் கண்ட கனவினையும் எடுத்துக் கூறினர்; அப்பால், அவ ரது ஆசியைப் பெற்று, ஆங்கிருந்தும் இராமேசுவரம் சென்று 'ஸேதுஸ்நானம்' முடித்துக் கொண்டு, காசிமாநகர் சென் றடைந்தனர்.

இவ்விதம் ஒருவர் பின் ஒருவராய், இறைவனது கட்ட ளையை யேற்ற பக்த கோடிகள் பலர் வந்து, தம்மைக் கண்டு செல்வதை நினைந்து உளம் மகிழ்ந்தனர் நம் சுவாமிகள். ஐய னது அருட்டிறம் வியந்து, அவனது குணம் புகழ்ந்து, "மிக வும் மகிமை வாய்ந்த அழகிய பெயரினையுடைய ஏ! தசரத தனயனான ராமா! உன் ஆசை தீர வெகு தொலையிலுள்ள தலங்களில் வாழும் உனது தொண்டர்களுக்கு என்னை அறி முகப் படுத்திவைத்த ஏ இரவிகுல சிரோமணீ! நீ என்பால் கொண்டுள்ள அன்பிற்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகின்றேன்? பக்தி யில்லாத கவிவாணர்கள் உனது தன் மையை அறிந்து கொள்கின்றதில்லை. இவ்விதமாய நற்குண மில்லாத மக்கள் நிறைந்த இக்கலியில், நீ எனக்குக் காட்சி யளித்து, உனது குண விசேடங்களை நான் அறியும்படி செய்து, என்னை ஒரு மூலமாய் வைத்துக் கொண்டு, சில கீர்த்தனங் களையும் பாடுவித்து, அதன் பயனாக உனது தன்மையை உலகி னர் அறியும் வண்ணம் செய்கின்றாய். இவ்வித மகோபகாரி யான உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகின் றேன்?" என்னும் கருத்தமைந்த, "தாசரதீ நீ ருணமு தீர்ப்ப நா தரமா" (தோடி—ஆதி) எனும் கீர்த்தனத்தைப் பாடி ஆநந்த மடைந்திருந்தனர்.

துறவிக்கு வேந்தன் துரும்பு

"போந்த உதாரனுக்குப் பொன்துரும்பு, சூரனுக்குச்
சேர்ந்த மரணம் சிறுதுரும்பே,—ஆய்ந்த
அறிவோர்க்கு நாரியரும் துரும்பாம், இல்லத்
துறவோர்க்கு வேந்தன் துரும்பு" என்றபடி,

ஆசையற நிற்போர்க்கு அவனி புரந்திடும் அரசனாயினுமென்? அவனை யொரு சிறு துரும்பெனவே எண்ணுவர் அல்லவா?

நீரின் மேல் குமிழி போன்றது இவ்வுலக வாழ்வு. இதை நிலையுள்ளதென நம்பி யிருப்போர் பின்னர் ஏமாற்றமே யடைவர்.

"காடோ? செடியோ? கடல்புறமோ? கனமே மிகுந்த
நாடோ? நகரோ? நகர்நடுவோ? நலமே மிகுந்த
வீடோ? புறந்திண்ணையோ? தமியேன் உடல் வீழு
மிடம்..............................................."

"படுமழை மொக்குளில் பல்காலும் தோன்றிக்
கெடும் இதோர் யாக்கை........." என்ப

தாகக் கூறியுள்ளபடி, நீடித்திருக்காது இவ்யாக்கை. "முடி சார்ந்த மன்னரும் மற்றும் உள்ளோரும் முடிவில் ஒரு பிடி சாம்பலாய் வெந்து மண்ணாவதும் கண்டு,பின்னும் இந்தப் படி சார்ந்த வாழ்வை" நிலையுள்ள தென நினைப்பது பேதமைத்தே யாகும். ஆதலால், "பொன்னின் அம்பலவர் அடிசார்ந்து நாம் உய்ய வேண்டும் என்றேயறி" ந்து நிற்போர்க்கு அரசனாயினு மென்? ஆண்டியாயினுமென்? அனைவரும் ஒன்றேயாமல் லவா?

பூவுலக வாழ்வு பொய் வாழ்வேயெனக் கண்டு, பரமனடி சேர்வதே பெருவாழ்வெனக் கொண்டு, அல்லும் பகலும் அனவரதமும் ஐயன் திருவடியினை மறவாது நின்று, அதன் பய

ளுய் அவனது திருவருளைப் பெருமிதமாய்ப் பெற்றுப் பெரும் புகழ்படைத்து விளங்கிய நம் சுவாமிகளது அருமை பெருமைகளைப் பற்றிப் பலர் புகழ்ந்து கூறக் கேட்ட மைசூர்—தஞ்சை முதலிய சமஸ்தானத் தலைவர்கள், அவரைப் பார்த்தற்குப் பேரவாக் கொண்டனர். தம்மை வந்து காணும்படியாகச் சீட்டெழுதி விடுத்தனர்.

அவ்வழைப்புக்களைக் கண்ட நம் சுவாமிகள், "ஏ! மனமே!! நவ நிதிகளையும் அடைந்து அநுபவிப்பது இன்பமா?—இராமனது திருமுன்னர் நின்று அவனது திவ்ய மங்கள விக்கிரகத்தைக் கண்டாநந்திப்பது இன்பமா? மெய்யாகச் சொல்? புத்தப்புதிய பால்—தயிர்—வெண்ணெய் முதலியவை சுவைக்குமா? 'ஸ்ரீராமத்தியான—பஜனுமிர்தம்' சுவைக்குமா? ஏ! உள்ளமே! உண்மையாகச் சொல்? இருளைப் போக்கி அருளைக் கொடுக்கவல்ல கங்கா நதியில் மூழ்குவது நல்லதா? கும்பியும், கேடடைந்த பொருள்களும் நிறைந்துள்ள கிணற்று நீரில் மூழ்குவது நல்லதா? ஏ! கருத்தே! கள்ளம் கபடம் இல்லாமற் சொல் ? மமதை கொண்டலையும் மானிடரைத் துதிப்பது பயனளிக்குமா? இன்னருள் பயக்கவல்ல இராமனைத் துதிப்பது பயனளிக்குமா ? ஏ ! உள்ளமே ! உறுதியாகச் சொல் ?" எனும் பொருளமைந்த "நிதி சால ஸுகமா" (கலியாணி—திரிபுடை) என்ற கீர்த்தனத்தைப்பாடி, "இராமனது தயவைத் தவிர்த்து இன்னொருவரது தயவும் எனக்கு வேண்டியதில்லை" யென்று வந்த தூதவரிடம் மறுமொழி கூறி யனுப்பினர்.

சுவாமிகளது மறுமொழியினைத் தூதவர் வந்து கூறக் கேட்ட அக்காலத்துத் தஞ்சை நகர் வேந்தனை, சரபோஜி மகாராஜன் 'அவரை எவ்விதமேனும் அழைத்துவரச் செய்தல் வேண்டும்' என மன உறுதி கொண்டனன். தன் கீழ் ஊழி

யஞ்செய்யும் ஒருவர் சுவாமிகளது அன்பிற்குப் பெரிதும் பாத்திரமானவர் என அறிந்தனன். அவ்வளவில் அவரை அழைத்து, "நீர் எவ்விதமேனும் சுவாமிகளை நம்மிடம் அழைத்து வரவேண்டும். அவரது பாடலைக் கேட்கப் பெரிதும் அவாவி நிற்கின்றேன். அவர்க்குப் பெருமிதமாகப் பொருளை யளித்து நம்மைப் புகழ்ந்து சில கீர்த்தனங்களைப் பாடச் செய்தல் வேண்டும். அவரது திருவாக்கால் புகழ் பெறுவது என்றென்றும் அழியாப் புகழே யல்லவோ? ஆதலால், தாம் சென்று சடுதியில் அவரை ஈண்டழைத்து வருதல் வேண்டும். உம்மிடம் பெரிதும் அன்புடையவர் அவர்; ஆதலின், தாம் சென்றழைப்பின் அவர் வாராமலிரார். தாம் செய்யும் இவ்வுதவிக்கு யாது கேட்பினும் கொடுக்கப் பின்வாங்கமாட்டேன்" எனக் கூறினன்; அவர்க்கு அப்பொழுதே சிறிது பொருளும் கொடுத்தனன்; கனிந்த பழமெனத் திரும்பி வருக வெனக்கூறி விடை கொடுத்தனுப்பினன்.

மகிபனிட்ட கட்டளையை மறுத்துக் கூறவும் போமோ? செய்வ தின்னதெனத் தோன்றாது திகைத்தனர் அச்சேவகர். "ஆ! பரம்பொருளைத் தவிர பிறிதொரு பொருளையும் ஒரு பொருட்டாய் மதியாத அவரோ அரசனை ஒரு பொருட்டாய் நினைத்து அரண்மனைக்கு வருவர்? அழியாப் பொருளாகிய ஐயனைப் புகழ்ந்து பாடும் தம் திருவாயினால், அழிவை ஒவ்வொரு கணமும் எதிர்நோக்கி நிற்கும் அரசனைப் புகழ்ந்து பாட ஒருப்படுவரோ? பொருட்செல்விக்கிறைவனும் பெம்மானின் பேரருளைப் பெற்றவர்க்குப் பூவுலகினையே ஈவதாயினும் பெரிதென நினைப்பரோ? அவ்விதமிருக்க, நாம் போய் இவ்விடயத்தை அவரிடம் எவ்விதம் கூறுவது? அவ்விதம்

நாம் கூறின் நம்மை அவர் என்னென் றெண்ணுவர்? அவரது தன்மை இப்படிப்பட்டதெனக் கண்டறிந்த நாம் அவரை அழைப்பதுதான் அழகாமோ? என்ன செய்வது? அரசனது கட்டளையை மீறுதற்கு இல்லை. ஆதலால், நாம் சென்று விடயத்தை அவரிடம் கூறுவோம். அப்பால், நடக்கின்றபடி நடக்கட்டும்'' எனப் பலவிதம் நினைந்து, பின் ஒருவாறு மனந் தேறியவராய்ச் சுவாமிகளது இல்லம் நாடிச் சென்றனர். அவரைக் கண்டதும் விடயத்தைக் கூறுதற்கு மனத் துணி வேற்பட வில்லை. "இன்று வேண்டாம். நாளை யாகட்டும்'' என வெண்ணியவராய் ஆங்கிருந்தும் தம் இல்லம் வந்தடைந் தனர்.

இவ்விதம் சின்னாட்கள் சென்றன. அரசனது கட்டளை யை யெண்ணி மனங் கலங்கினர். பின் ஒருவாறு மனம் தேறினர்; 'நாம் என்ன செய்யலாகும்? ஈசனது திருவுள்ளம் இப்படிப் போலும்? இன்று எப்படியும் சுவாமிகளிடம் இவ்விடயத்தைக் கூறி விடுவோம்'' என வெண்ணியவராய்ச் சுவாமிகளைப் போய்க் கண்டு அரசன் கூறியவற்றை அவரிடம் கூறினர்; தம் குற்றம் பொறுத்திடுமாறு வேண்டி நின்றனர்.

அன்பரது சொற் கேட்டருளிய சுவாமிகள் அவரைப் பார்த்து, "ஆக்கத்தாலும், ஆணையாலும் ஐயனருளைப் பெற நினைப்பது அறியாமையாகும். அன்பு பூண்டொழுகலாலும், அடிமை பூண்டொழுகலாலுமே அவனருளைப் பெறுதல் கூடும். ஆதலால், அன்பில்லாத அவனிடம் நமக்கென்ன பணியுளது? அவனுக்குத்தான் நம்மிடம் வரயாது வேலையுளது? ஆதலின், இதுபற்றி நீர் சிரமப்படுவது வீணேயாகும்'' எனப் புகன்றனர்.

இவ்விதம் சுவாமிகள் தாம் மனத்தில் நினைத்துள்ள விடயங்களுக்கும் சேர்த்துப் பதிற் கூறினமை கண்ட அவ்வன்பர், தம் செயல் குறித்துப் பெரிதும் வெட்கினர். சுவாமிகளது திருவடியில் வணக்கமுடன் வீழ்ந்து எழுந்து புகழ்ந்து, அவரிடம் விடை பெற்றுக் கொண்டு அரசரை வந்தடைந்தனர்; நடந்த விடயங்களை நவின்றனர்.

## அரசனது அறியாமை

அது கேட்ட அரசன் பெரிதும் பொங்கி யெழுந்தனன். "ஆ! என்னே அவரது மனத் துணிவு? இந்நகர்க்கு இறைவனுய யானே வலிய வழைப்பது; அதை அவர் அசட்டை செய்வதா? நன்று! நன்று! எனக்குள்ள ஆட்சியினை அவர் அறியார் போலும்!" எனப் பலவா றெண்ணினன்; பின்னர் பணியாளர் சிலரை விளித்து, "எவ்விதமாயினும் சரியே. நீங்கள் சென்று அவரை ஈண்டழைத்து வருதல் வேண்டும்" எனக் கட்டளையிட்டனுப்பினன். அவ்வளவில் அவ்வரசனுக்கு வயிற்று வலி யேற்பட்டு வேதனை செய்ய வாரம்பித்தது.

அதனுல் அரசன் தன் அறியாமைக்குப் பெரிதும் வருந்தினன்; பெரியாரைப்பிழைத்தல் பெருங் கேட்டையே விளைவிக்குமென உணர்ந்தனன்.

"ஈசன் எதிர் நின்றாலும் ஈசன் அருள் பெற்(று)உயர்ந்த
நேசர் எதிர் நிற்ப(து) அரிதாமே—தேசுவளர்
செங்கதிர் முன் நின்றாலும், செங்கதிரவன் கிரணம்
தங்கு(ம்) மண(ல்) நிற்(க) அரிதே தான்" எனும்

உண்மையை யறிந்தனன்; தன் துயரைப் போக்க வல்லவர் தியாகராஜரே என ஓர்ந்தனன்; அவ்வளவில் புறப்பட்டுத் திருவையாறு வந்தடைந்தனன்; தியாகராஜரைக் கண்டனன்;

தன் குற்றம் பொறுத்தருளுமாறு வேண்டினன்; தன் நோயைத் தீர்த்தருளும்படி இறைஞ்சி நின்றனன்.

அரசனது அகங்குலையப் பெற்றமை கண்ட தியாகராஜர் 'எல்லாம் எம்பெருமான் செயலே' யென வெண்ணிய வராய், அவனருள் வியந்து, அரசனது துன்பம் தணித்தருளுமாறு வேண்டி நின்றனர். அவ்வளவில், அரசனது வயிற்று வலி நீங்க, அது கண்ட அரசன் ஆனந்த மனத்தனாய், நம் சுவாமிகளது திருவடி பணிந்து, அவரது ஆசியினைப் பெற்றுத் தன் பதி சென்றடைந்தனன்.

## தமையன்மாரது தொந்தரை

இவ்விதமாய நம் சுவாமிகளது செயல் கண்ட ஜப்யேசரும், இராமநாதரும், பொருளாசை மிக்குள்ளவ ராதலால், தமது இளவல் மீது மிக்க முனிவு கொள்ள லாயினர். "ஆ! என்னே இவனது அறியாமை!! அரசர் அழைக்கும்படியான ஒரு தகுதியினை இவன் அடைந்திருந்தும், அதனைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையினை அறியாதவனா யிருந்து வருகின்றனனே! என்னே இவனது பேதமைத் தன்மை! தினையளவினதாய பொருளைத் தேடி யடைதற்கான திறனைப் பெற்றில்லாதவனா யிருந்தும், இவன், இரவு பகல் என்பதில்லாமல் எந்நேரமும் இராம விக்கிரகத்தைக் கட்டிக் கொண்டு அழுத வண்ணம் இருந்துவரின், 'வயிற்றுப் பிழைப்புக்கு வகை யென் செய்வ'தென வெண்ணினன் இல்லையே! இவன் மாத்திரம் அரசரது அழைப்பினை உவகையுடன் ஏற்று அவரைப் போய்க்கண்டு, அவர் தம் உளம் மகிழும் வண்ணம் செய்திருப்பின், பெருமிதமான பொருளை அன்னவரிட மிருந்தும் பெற்றிருக்கலாகுமே! என்னே இவனது மடைத்தனம்! ஆ! இது போழ்து நமது குடும்பம் மிக்க வறுமை வாய்ப்பட்டு வருந்தி

நிற்பதை இவன் நன்கு அறிந்திருந்தும், அதுபற்றிச் சிறிதும் கவலைகொள்கின்றனன் இல்லையே! இவனால் நமக்கு எவ்விதத்தும் உதவிதான் இல்லை யெனினும், தொந்தரையேனும் ஏற்படாதிருந்திடில் போதுமே! இவனொருவனால் இவ்வீடு எந்நேரம் பார்த்தாலும் அமளிப்படா நிற்கின்றது. தன்னால் ஒற்றைக் காசும் தேடி யடைதற்கு வகையில்லா திருப்பினும், உரைக்கூட்டி, வீட்டைச் சந்தை மடமாக்கி விடுகின்றனன். இவ்விராம விக்கிரகம் இவ்வீட்டில் இருக்கு மளவும், இவ்வீடு செம்மைப்படப் போகின்றதில்லை. ஆதலின், இவ்விக்கிரகத்தை எவரு மறியாதபடி எங்கேனும் எடுத்துச் சென்று ஒளித்து விடுவதே நல்லதாகும்'' எனப் பலவிதம் எண்ணினர்; அன்றிரவை ஆவலுடன் எதிர் நோக்கி யிருந்தனர்.

## சோதரர் செய்த சூழ்ச்சி

"ஆலம் உலகில் பரந்ததுவோ?
ஆழி கிளர்ந்த தோ? அவர்தம்
நீல நிறத்தை எல்லோரு(ம்) நினைக்க
அதுவாய் நிரம்பியதோ?
கால(ன்) நிறத்தை அஞ்சனத்தில் கலந்து
குழைத்துக் காயத்தின்
மேலு (ம்) நிலத்து(ம்) மெழுகியதோ?
......................................" என்ன,

காரிருள் கருந்தேவி, கதிரவன் சென்றொளித்தமை கண்டு களி வெறி கொண்டவளாய்த் தன் பெருவாயைத் திறந்துகொண்டு, குவலயத்தை விழுங்க வருபவளே போன்று எங்கும் வந்து கவிந்து கொண்டனள். தம் துணைவி வந்தமை கண்ட திருடர் முதலாய தீ நெறி பற்றி யொழுகுவோர் எக்களிப்படைந்தனர். வெம்புலி முதலாய விலங்கினங்களும், விடத்தைத் தம்

மகத்தே கொண்டுள்ள வாளரவுகளும் தத்தம் மறைவிடங் களினின்றும் வெளிக் கிளம்பலாயின. ஆந்தைகளும் கோட் டான்களும் ஆர்ப்பரித்து நின்றன. ஆகாயத்தில் எங்கணும் கார்முகில் கவிந்து குமுறி நின்றது. பெருங்காற் றெழுந்து நெடு மரங்களை யசைத்துப் பேரொலி செய்து நின்றது. வெறி பிடித்த நாய்கள் மூலைக்கு மூலை குரைத்து நின்றன. வாவி களிலும், வயல் வெளிகளிலும் உள்ள தவளைகள் முழை யன்ன தம் பெருவாயைத் திறந்து 'வறுவறு' வெனக் கத்தி நின்றன. ஊரடங்கலும் உறக்கத் தாழ்ந்திருந்தது.

இவ்விதமாய அந்நள்ளிரவில், நிசி வேளையில், காலம் பார்த்திருந்த ஜப்யேசரும், இராமநாதரும் படுக்கை விட்டும் எழுந்தனர்; பேரிருள் பரவிய அவ்விரவின் தன்மையினை யறிந்தனர்; "மை போன்ற இவ்விருளில் மாந்தர் எவரும் வெளிக் கிளம்பார். ஆதலின், நாம் கொண்ட வெண்ணத்தை நிறைவேற்றுதற்கு இதுவே தக்க தருணம்" என நினைத்தவ ராய்ச் சந்தடி செய்யாமல் நடந்து சென்று, இராம விக்கிர கத்தை இருவருமாய்ப் பிடித்துத் தூக்கி எடுத்துக் கொண் டனர்; வீட்டை விட்டு வெளிப் புறப்பட்டனர்; கடுகி நடந்து காவேரி யாற்றின் கரையினை யடைந்தனர்; கரை புரண்டோ டும் பெருவெள்ளத்தில் விக்கிரகத்தை வீசி யெறிந்துவிட்டு வீடு திரும்பினர்.

## சுவாமிகளடைந்த சோகம்

அதிகாலையில் எழுந்த நம் சுவாமிகள் வழக்கம்போல் ஸ்ரீராமனைக் காணச் சென்றனர். ஆங்கு ஐயனது திருவுரு வினைக்காணப் பெறாது ஆற்றொணாத் துயர் கொண்டனர். இவ் விதம் செய்தவர் தம் உடன் பிறந்தோராய்த்தான் இருத்தல் வேண்டும் என வெண்ணியவராய், அது பற்றி நினைந்து பெரி

தும் வருந்தினர். "ஏ! ராஜாதிராஜா!! கணித்தற்கரிய குற்றங் களைப் புரிந்துள்ளவரான பலரை நீ காப்பாற்றி யிருக்கின்றாய். தவிர, அரும்பெரும் ஞானியாகிய 'ஜடபரதர்' எனும் மக ரிஷியானவர், அனைத்துப் பற்றினையும் அறவே துறந்தவரா யிருந்தும், ஆற்றுப் பெருக்கில் அடித்துக் கொண்டு போகப் பட்ட மானிளங் கன்றினைக் கண்டு, கழிவிரக்கங் கொண்டு, அதை உயிர்மீட்டு வரவில்லையா? பொன்னுலகத்தோரும், பிறரும் ஒரு காலத்தில் பாற்கடலைக் கடையும் பொருட்டுப் பெருவரையாகிய மந்தரமலையைக் கொணர்ந்து மத்தாக நட, அது நிலையில் நிற்காமல் அமிழ்ந்துபோக, அதுகண்ட அம ரர் முதலாயினோர் ஆற்றொணுத் துயரடைந்து நிற்க, அது போழ்து நீ ஓர் ஆமையாக வந்து, ஆழ்ந்துபோன அம்மலையை முதுகில் தூக்கி நிலையிலிருத்தி, யாவரது துயரையும் போக்க வில்லையா? துரியோதனனைவன் தமக்குப் பல விதத்தும் பெருங்கேடு பல விளைவிப்பவனு யிருந்தும், அவனை அந்தண னை சித்திரரதன் எனும் கந்தருவன் கட்டி யிழுத்துப் போட, அதுகண்ட தருமபுத்திரர், தமது தம்பியை யேவி அவனை விடு விக்க வில்லையா? உலகியல் அவ்விதமிருக்க, வயது வந்த என்னை எனது உடன் பிறந்தோர் தொந்தரை செய்யத் 'தமை யன் தந்தைக்குச் சமானம்' என்பதனுல், அவர்களது தொந் தரையினின்றும் விலகியிருக்க வகையின்றி வாதனைப்படு கின்ற என்னைக் காப்பாற்றவேண்டிய நீயும், அவ்விதம் செய்யா மல் இவ்விதம் அநியாயம் செய்யலாமா? ஏ! ராமா! என்னை வேருக நினைக்காமல் உனது அடியவரில் ஒருவனுகக் கொண்டு என்னைக் காப்பாற்றுவாய்" எனும் கருத்தமைந்த "அந்யாயமு ஸேயகுரா" (காபி—ஆதி) எனும் கீர்த்தனத் தையும், "நாயெட வஞ்சன ஸேயகுரா" (ஸுபோஷிணி— ஆதி) "மரியாத காதுரா" (சங்கராபரணம்—ஆதி); "மரியாத

காதய்யா" (பைரவம்—தேசாதி) எனும் கீர்த்தனங்களேயும்,

"உற்றுளைப் பெட்டகத்திட்(டு)ஒட்டும்இலங்கேசனேப் பின்
செற்றுள்வந்(து) என்பார் சிவசிவா—உற்ேறாரின்,
ஊழின் பெருவலி யாஉள மற்றென்று
சூழினும் தான்முந் துறும்" என்றபடி,

நலன்களனைத்தையும் பெற்றுள்ளவராய அமரராகட்டும், ஆற்றல் மிகப் பெற்றுள்ளவராய அசுரராகட்டும், அந்தணர்தாமாகட்டும், ஊழ்வினையை வெல்லுதற்கு ஒருகாலும் முடியாது. அழகுறவமைந்த அமரேசனது உடலம், அவன் ஒருகாலத்து விருத்திரனைக் கொல்ல, அதன் பயனைப் பிரம்மஹத்தி வந்து தொடர, அதனால் எழிலொழிந்து போயிற்று. ஆண்மை மிக்குள்ள அசுரர்க்கு அரிதிற் கிடைத்த அமுதம் அருந்துதற்கில்லாமலாயிற்று. மெய்ப்பொருளை நாடி மோனத்திருக்கும் முனிவரர்க்கு அரக்கரது தொந்தரை மிகுதியாய் ஏற்படலாயிற்று. ஆதலால், ஏ! இராமா!! வருந்தி யழைத்தாலும் வாராத வாரா; பொருந்துவன போமெனினும் போகா. உன்னொருவனைத் தவிர வேறு ஒருவராலும் ஊழ்வினையினை வெல்லுதல் என்பது கூடாததே யாகும்" எனும் பொருளமைந்த "ரானிதி ராது" (மணிரங்கு—ஆதி) எனும் கீர்த்தனத்தையும் பாடியருளினர். பின்னர், இராகவனது பிரிவாற்றாமை குறித்துப் பெரிதும் வருந்தியவராய்த் தம் மனத்தை நோக்கி "ஏ! மனமே!! பழயகாலம் முதற்கொண்டு தனது பக்தர்களைக் காப்பாற்றுவதை ஒரு கடமையாகக் கொண்டுள்ளனன் ஐயன்;

"வேறின்றி என்னைஎவர் மெய்ந்நினைந்து சேவிப்பார்
பேறொன்றி என்றும் பிரியாதே—தேறும்அவர்
தம்பேறும் போகம் இதுபிரியாச் சேமநான்
வன்பேறுச் செய்வன் மகிழ்ந்து" எனக் கண்ணன்

கூறியுள்ளனன் அல்லவோ? ஆதலால் நீ ஏன் கலங்கி நிற்கின்றனை? முன்னம், கனகனால் பெரிதும் வெறுக்கப்பெற்ற பிரஹ்லாதன் தனது தந்தையாம் அக்கனகனால் பல்வகை இன்னல்களையும் மிருதியும் அடைந்தனன்; ஆயினும், பரமனைத் தனது இதயத் தாமரையில் நிறுத்தி, இடைவிடாமல் அவனை ஒருமனம் பூண்டு போற்றி நின்றனன். பக்தனுக் கேற்பட்ட பெருந்துன்பம் கண்டு பொறாத அவனது மனத்தகத்தேயிருந்த ஐயன், அவனது கோரிக்கையின்வண்ணம் கற்றூணைப் பிளந்துகொண்டு குதித்தெழுந்து வந்தனன் அல்லவா? ஏ! மனமே! அத்தன்மையுள்ள ஐயன் இன்று எங்குச் சென்றுத் தங்கியுள்ளனன்? முன்னர், அகந்தை கொண்ட வாலியானவன் தனது தம்பியென்றும் பாராது சுக்ரீவனைத் துன்புறுத்த, அதுகண்டு மனம் பொறாத ஐயன் அவனைக் காத்திடவேண்டிப் பனைமரத்தடியில் வந்து நிற்கவில்லையோ? அவ்விதமே அவரவரும் முற்பிறவிகளில் இயற்றிய மாபாவங்கள் வந்தணுகா வண்ணம் செய்தும்,காம முதலாய அறு பகைவரை அழித்தும், அல்லாமலும் உலகிடை வாழும் ஒருமனம் பூண்ட உள்ளன்பினரைக் காத்தும் நிற்கவில்லையா? அத்தன்மையனுய ஐயன் இன்று எங்குச்சென்றுத் தங்கியுள்ளனன்? இவண் வர அவன் எப்பொழுது திருவுளம் பற்றுகின்றனனோ? ஆதலால், ஏ! மனமே!! நான் சொல்வதைக் கேட்டு நட! அதுபற்றி நினைந்து வீண் கலக்கம் கொள்வதேனோ?" எனும் கருத்தமைந்த "எந்து தாகினோ?" (தோடி—சாபு) எனும் கீர்த்தனத்தையும்; 'எந்த ரானி தன கெந்து போனி' (ஹரிகாம்போஜி-தேசாதி); 'சேர ராவ தேமிரா' (ரீதிகௌளம்—தேசாதி); 'சலமேலரா ஸாகேதராமா' (மார்க்கஹிந்தோளம்—தேசாதி); 'மரி மரி நின்னே' (காம்போஜி—ஆதி); 'கொனி யாடே' (கோகிலத்வனி—ஆதி); 'மாருபல்க குன்னு

வேமிரா' (ஸ்ரீரஞ்சனி—ஆதி); 'ஏமி தோவ பல்குமா' (ஸாரங்கா—ஆதி); 'அபிமானமு லேதேமி' (ஆந்தாளி—சாபு); ராம நன்னு ப்ரோவரா' (ஹரிகாம்போஜி—ரூபகம்); 'பட்டி விடுவராது' (மஞ்ஜரி—ஆதி), 'குலபிருதுனு' (தேவமனோஹரி—ரூபகம்); 'ஏமி நேரமோ'(சங்கராபரணம்—ஆதி); 'நன்னுப்ரோவநீகு' (ஆபோகி—தேசாதி); 'எந்துகு நிர்தய' (ஹரிகாம்போஜி—தேசாதி); 'பாஹிராமசந்த்ர' (எதுகுலகாம்போஜி—திரிசிரலகு); 'வேரெவ்வரே கதி' (ஸுருடி—தேசாதி); 'ராமசந்த்ர நீதய' (ஸுருடி—தேசாதி); 'ராம தைவமா' (ஸுருடி—ரூபகம்); 'ஸார்வபௌம ஸாகேதராம'(ராக பஞ்சரம்—தேசாதி); 'செந்தனே ஸதா' (குந்தலவராளி—தேசாதி); 'எந்த வேடுகொந்து ராகவா' (ஸரஸ்வதீ மனோஹரி—தேசாதி); 'தனவாரி தனமு' (பியாகடை—தேசாதி); 'மாடாட வேமி நாதோ' (நீலாம்பரி—ஆதி); 'ஸீதாபதே நாமனஸு' (கமாசு—தேசாதி); 'ஸாக்ஷிலேதனுசு' (பங்காளா—தேசாதி), 'நாமொரால கிம்பவேமி' (தேவகாந்தாரி—ரூபகம்); 'காலஹரணமேலரா' (சுத்த ஸாவேரி—ரூபகம்); 'மதிலோன' (கோலாகலம்—தேசாதி); 'ஆதய ஸ்ரீரகுவர' (ஆஹிரி—ஆதி); 'தரிதாவு லேக வேடிதே' (ஸாவேரி—தேசாதி); 'ப்ரோசேவா ரெவரே' (ஸ்ரீரஞ்ஜனி—ஆதி); 'ராமாபிராமா' (தர்பார்—சாபு); 'தண்டமு பெட்டேனுரா' (பலஹம்ஸ—ஆதி); 'பலுக வேமி நாதைவமா' (பூரண சந்திரிகை—ஆதி); 'நேமொர பெட்டிதோ' (ரூபாவதி—திரிபுடை); 'நாடி மாட மறசிதிவோ' (தேவக்கிரியை—ஆதி); 'வத்தனே வாரு லேரு' (ஷண்முகப்ரியை—ஆதி); 'லேமி தெல்ப' (நவநீதம்—ஆதி); 'பாகா யனய்யா' (சந்திர ஜ்யோதி—தேசாதி); 'தனமீதனே' (பூஷாவளி—தேசாதி); 'ஸ்ரீகாந்த! நீயெட' (பவப்பிரியை—தேசாதி); 'நீ சித்தமு நாபாக்ய மய்யா' (விஜய

வஸந்தம்—தேசாதி) முதலிய பல கீர்த்தனங்களைப் பாடினர். உயர் பொருளாம் பரம்பொருளைக் காணுததொரு குறையினுல், உணவை அறவே யொழித்தனர். உறக்கத்தையும் விடுத்தனர். "அப்பனே! தமியேனை இவ்விதம் தம்மிடம் பக்தி செய்ய வொட்டாமல் பல விதத்தும் தொந்தரை செய்து வரும் எளியேனது சகோதரர் மனதை மாற்றி, அவர்களும் என்னுடன் சேர்ந்து, தம்மிடம் அன்பு கொண்டு, தமது திரு நாமங்களைக் கூறுவதில் ஈடுபட்டு நிற்கும் வண்ணம் தாம் திருவுளம் கொள்ளலாகாதா ?" என ஐயனை வேண்டினர். பின், பரமனது பிரிவாற்றுமை கருதி, மனமுருகி, அல்லும் பகலும் அனவரதமும் அவனை நினைந்துப், புலம்புவதிலேயே காலத்தைக்கழித்து வருவாராயினர்.

ஐயன் தனதிருக்கை யறிவித்தல்

இவ்விதமாய் ஒரு வருடகாலத்தைக் கடத்தினர் நம் சுவாமிகள். பக்தன் தனது பிரிவாற்றுமைக்குப் பெரிதும் வருந்தி நிற்பதை யறிந்த இராகவன், திருவுளமிரங்கி ஒரு நாள் நமது சுவாமிகள் கனவில் தோன்றித் தானிருக்கும் இடத்தை யறிவித்து மறைந்தருளினன். அவ்வளவில் விழித்தெழுந்த நம் சுவாமிகள் ஆநந்தமே நிறைந்த மனத்தராயினர்; இராகவனது அருள் நினைந்து புகழ்ந்து பாடினர்; ஆனந்த மிகுதியினுல் பித்தம் பிடித்தவரே போன்று குதித்துக் கூத்தாடினர்; கடுகி நடந்து காவேரி யாற்றின் கரையினை யடைந்தனர்; ஐயன் குறிப்பிட்ட விடத்துள்ள மணலை இரு கைகளாலும் தோண்டினர்; கொஞ்சநேரத்தில் இராமனது விக்கிரகத்தைக்கண்டனர்; கட்டிப் பிடித்தெடுத்துத் தம் மடிமீது வைத்துக்கொண்டனர்; கண்கொட்டாது பார்த்துச் சின்னஞ் சிறு குழந்தையே போல அவ்விக்கிரகத்துடன் கொஞ்சி விளையாடினர். ஆ! அவ்வமயம் நம் சுவாமிகள் கொண்ட மனமகிழ்ச்சியினை என்னென்று வருணித்துக் கூறுவது?

## இறைவனை இல்லத்திற் கெழுந்தருளச் செய்தல்

இவ்விதம் சிறிது நேரம் இறைவனைக் கண்டெடுத்ததனால் ஏற்பட்ட உள்ளக் களிப்பின் மிகுதியினால் மெய்ம்மறந்திருந்த நம் சுவாமிகள், பின் தெளிந்தவராய் 'ராரா மா இண்டி தாக' (அஸாவேரி—ஆதி) எனும் கீர்த்தனத்தைப்பாடி இராகவனது விக்கிரகத்தைத் தமது இல்லத்திற் கெடுத்து வந்தனர்; மண்டபத்தை மிக்க வழகுற வலங்கரித்தனர்; ஐயனைப் பீடத்தமர்த்தினர்; அபிஷேகம் முதலாய அனைத்து உபசாரங்களையும் முறையுடன் செய்தனர்; "ஏ! இரகுகுலத் தோன்றலாய வீரனே! போர்முனையிற் சலியாமல் நிற்கும் தீரனே! இராஜகுமாரனே! வாடா!! பரசுராமன் கொண்ட அகந்தையைக் குலைத்த தேவதேவனே! 'இராவணன்—கும்பகர்ணன்—இந்திரஜித்து' என்னும் மலைகளுக்கு, இந்திரன் போன்றவனே!

"இங்கே குடாகேசா என்னுடம்பில் ஒரிடத்து
(இ)லங்(கு) ஓர் சராசரங்கள் ஆகத்துத்—தங்கு(ம்)நெறி
தேறியே எல்லாம் தெரியக்காண் என்காண்பான்
வேறுதான் இச்சித்தாய் மிக்கு"

எனும் கண்ணனது கனிமொழியின் வண்ணம், அசையும் பொருள்—அசையாப் பொருள் ஆய உருவினனாய் உள்ளவனே! தியாகராஜனது இதயத்தாமரையில் உறைபவனே! ஏ! இராஜகுமாரா! வாடா!" எனும் பொருள் கொண்ட 'ரகுவீர ரணதீர!" (ஹுஸேனி—ரூபகம்) என்ற கீர்த்தனத்தையும், 'ஏல நீ தயராது' (அடாணா—ஆதி); 'முத்துமோமு' (ஸூரிய காந்தம்—ஆதி); 'அலகலல்ல லாடக கனி' (மத்தியமாவதி—ரூபகம்); 'ஸ்ரீராம ஜயராம ச்ருங்கார ராமயனி' (எதுகுலகாம்போஜி—ஜம்பை); 'கலிகி யுண்டின கதாகல்குனு' (கீரவாணி) ஆதி); 'ஏ பனிகோ ஜன்மிஞ்சிதினனி' (அஸாவேரி—ஆதி-

எனும் கீர்த்தனங்களையும் பாடி ஆநந்தமே உருவெடுத்து வந்தாற் போன்று நின்றனர்; பின்னர், தமது சோதரரும் தம்மைப் போன்ற திடமான பக்தி பூண்டு தம்முடன் சேர்ந்து பகவந் நாம பஜனை செய்து வரும் வண்ணம் திருவருள் சுரக்க வேண்டுமாய் இராமபிரானை இறைஞ்சி நின்றனர். அவ்வளவில், ஐயனது அருளின் பயனாய், அறவழியினைக் கனவிலும் கருதாது 'கண்டதே காட்சி—கொண்டதே கோல' மென இருந்து வந்த ஜப்யேசரும் இராமநாதரும், தம் மனம் மாறியவராய் நம் சுவாமிகளுடன் கூடிக்கொண்டு பகவத் பக்தியில் ஈடு படலாயினர். இறைவன் திருவுளங்கொள்ளின் எது தான் ஆகாது?

## இல்லாளின் ஈடு காணல்

"பெண்ணின் பெருந்தக்க யாஉள? கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்"
"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்! எனப் பெய்யும் மழை"
" வழிபா(டு) உடையளாய், வாழ்க்கை நடாஅய்,
முனியாது சொல்லிற்றுச் செய்(து)ஆங்(கு)—
எதிர்உரையா(து)
ஏத்திப் பணியுமேல், இல்லாளை ஆண்மகன்
போற்றிப் புனையும் புரிந்து "

எனக் கற்புள்ள பெண்டிரது பெருமைபற்றிப் பன்னூல்களும் புகழ்ந்துகூறு நிற்கின்றன. மணி அணிகளை மிகுதியாகப் பூண்பதனால் மட்டும் ஒருத்தியைப் பேரெழில் பெற்றவளெனப் புகல்வதற்கில்லை. கற்பெனும் நல்லணியைப் பூண்டவளையே காரிகையெனக் கூறத்தகும். பெருமை மிக்க அப்

பெண்ணின்நல்லாள்'பெய்' எனக் கூறியவளவில் காலமல்லா விடினும், பேரிடி முழக்கத்துடன் கூடிய பெருமழை பெய்யுமாம். ஆ! கற்புடை மகளிர்தம் கணிசம் தான் என்னே! மூவர் தடுப்பவும் கொண்மூவைப் பணி கொண்டாள் தூய அனசூயை யல்லவோ? 'சத்தியந் தப்பாமல் அரிச்சந்திரற்குச் சந்திரமதி சித்த மொருமித்திருந்ததனால் தன்னை வளைத்து நின்ற வனவேடனை வெறிக்கப் பார்த்து எரித்துவிடவில்லையோ? ஆகலான் கற்புடைப் பெண்டிரைக் குலதெவமெனக் கூறத் தகும்.

ஒரு நாள் நம் சுவாமிகள் ஏதோ ஒரு வேலையாகத் திடீரெனத் தமது இல்லாளிருக்குமிடம் சென்றனர். அவ்வமயம் அவ்வம்மையுடன் அளவளாவியிருந்த அறம் வளர்த்த நாயகியம்மை சடக்கென மறைந்தருளினள். அது கண்ட சுவாமிகள் தம் மனைவியைப் பார்த்து "இது போழ்து நீ எவருடன் பேசியிருந்தனை?" என வினவினர். அதற்கு அவ்வம்மை ஏதும் பதிற்சொல்லாம லிருந்ததைக் கண்டு "இவ்வமயம் ஈண்டிருந்து மறைந்து சென்றவள் இத்தலத்திற் கிறைவியாகிய அம்மை அறம் வளர்த்த நாயகியாகவே இருத்தல் வேண்டும்" என வெண்ணினர். "பராசக்தி மனுபராத நாபை" (ஸாவேரி—ஆதி); "தரினிதெலிஸி கொண்டி" (சுத்தஸாவேரி—ஆதி); "சிவே! பாஹிமாம் அம்பிகே" (கலியாணி—ஆதி); "அம்ப! நின்னு நம்மிதி" (ஆரபி—ஆதி) "கன்னதல்லி நீவு" (ஸாவேரி—ஆதி); "நன்னு கன்னதல்லி" (ஸிந்து கன்னட—தேசாதி) எனும் கீர்த்தனங்களைப்பாடி அவண் வந்திருந்தவள் அறம் வளர்த்த நாயகியே என விளங்க வைத்தனர். [அப்பால், சின்னாட்களுக்கெல்லாம் அவரது மனைவி இவ்வுலக வாழ்வைநீத்தனள் என்பது ஸ்ரீநரஸிம்ம பாகவதரது மதமாகும்.]

## திருப்பதி யாத்திரை

இவ்விதம் நம் சுவாமிகள் தமது சீடர்களுடன் இராம நாம பஜனம் செய்து வருங்காலத்தில், ஒரு நாள் திருப்பதித் தலம் சென்று, திருவேங்கடமுடையானைத் தரிசித்துவர மனதிற் கருதினர்; அவ்வளவில் அவ்விடயத்தைத் தமது சீடர்களிடம் விளம்பினர். உடனே அச்சீடர்களால் சுமக்கப்பெற்ற அழகிய பல்லக்கில் ஏறிக்கொண்டு, திருப்பதி சென்றடைந்தனர்; வேண்டியவர்க்கு வேண்டியவாறே வர மளித்திட அருள் வடிவு கொண்டு வீற்றிருக்கும் அம்மை அலர் மேலுமங்கைத் தாயாரையும், அப்பன் ஸ்ரீநிவாஸப் பெருமானையும் வணங்கிவர ஆலயம் புகுந்தனர்; ஐயனது திருமுன்னடைந்தனர்; அவ்வமயம் திருமணி மார்பனது திருச்சந்நிதி திரையிட்டு மறைத்திருத்தலைக் கண்ணுற்றனர்; அதுகுறித்து மனம் வருந்தியவராய் "ஆ! நாம் முற்பிறவிகளில் செய்யப்பட்டதான மாபாவங்களனைத்தும் திரண்டு வந்து ஐயனைக் காண்டற்கில்லாமல் திரையாய் நின்று மறைக்கின்றன போலும்!" என நினைத்தவராய் "தெரதீயக ராதா" (கௌளீ பந்து—ஆதி) எனும் கீர்த்தனத்தைப் பாடினர்; அவ்வளவில் ஐயனருளால் அத்திரை அறுந்து வீழ, சுவாமிகள் திவ்யமங்கள விக்கிரக உருக்கொண் டெழுந்தருளியுள்ள கொண்டல் வண்ணத் திருமேனியனைய திருமகள் கேள்வனைக் கண்ணாரக்கண்டு, மெய்யார வணங்கி "வேங்கடேச நினு ஸேவிம்பனு பதிவேல கனுலு காவலெனய்யா" (மத்தியமாவதி—ஆதி) எனும் கீர்த்தனத்தால் அவனை நாவாரத் துதித்தனர்; அப்பால் அத்தலம் விடுத்தும் அகன்று திருவையாறு நோக்கிச் செல்லலாயினர்.

## கோவூரடைதல்

திருப்பதித்தலம் விடுத்து மீண்ட சுவாமிகள் தம் ஊர் வழியாய்ச் செல்வதை முன்னதாக அறிந்த, "கோவூர்" எனும் சிவஸ்தலத்தில் வாழ்ந்திருந்த சுந்தர முதலியார் எனும் சிவநேயச் செல்வர், எதிர் கொண்டு சென்று நம் சுவாமிகளைக் கண்டனர். அவரது திருவடி பணிந்து எழுந்து கைகட்டி வாய்புதைத்து நின்று, "ஐயனே' அடியேனது குடிலில் தமியேனது விருந்தினராய்ச் சின்னாட்கள் தங்கியிருந்து செல்ல வேண்டுகின்றேன்" என விநயமுடன் கூறினர்.

அந்நற்றொண்டரது விருப்பத்தை மறுத்தற்கு மனமில்லாதவரான நம் சுவாமிகள் அத்தலத்தில் அவ்வன்பரது விருந்தினராய் ஒருவாரம் தங்கியிருந்தனர். ஆன்மகோடிகளை உய்விப்பான்வேண்டி அத்தலத்தில் வீற்றிருக்கும் 'ஸௌந்தர நாயகி'யுடன் கூடிய'ஸுந்தரேசுவர' சுவாமியின் திருக்கோயில் சென்று அம்மையையும் அப்பனையும் கண்டு வணங்கி, ஆநந்த மனத்தராய் அன்பெழ நின்று "ஈவஸுத நீ வண்டி தைவமு நெந்து கானரா" (ஸஹான—ஆதி); "கோரி ஸேவிம்பராரே" (காகரப்பிரியா—ஆதி); "சம்போ மஹாதேவ சங்கரகிரிஜா ரமண" (பந்துவராளி—ரூபகம்); "நம்மி வச்சின நன்னு" (கலியாணி—ரூபகம்) எனும் கீர்த்தனங்களால் ஐயனைத் துதித்தனர். அப்பால், அச்சிவநேயரிடம் விடை பெற்றுக் கொண்டு அவ்வூரைவிட்டுப் புறப்படலாயினர்.

சுவாமிகளுக்கு ஏதேனும் காணிக்கை செலுத்தவேண்டுமென வெண்ணிய சுந்தர முதலியார், "இவ்வுலக வாழ்க்கையிற் சிறிதும் பற்றில்லாதவராகிய இப்பெரியார் நாம் கொடுக்க நினைக்கும் காணிக்கைப் பொருளை ஏற்கமாட்டார். ஆயினும், எவ்விதமேனும் நாம் அவரிடம் செலுத்தி விட

வேண்டும்" எனக் கருதியவராய், ஆயிரம் பொன் கொண்ட ஒரு பையை அவரறியாவாறு எடுத்துச் சென்று, அன்னார் அமர்ந்து செல்லும் பல்லக்கிலுள்ள பெட்டியில் வைத்து, அவ்விடயத்தைச் சுவாமிகளது சீடர்களிடம் தெரிவித்து, சுவாமிகளை வழியனுப்பி வந்தனர்.

## திருடரது தொந்தரை

இவ்விதம் நம் சுவாமிகள் தம்சீடர்களால் சுமக்கப்பெற்ற பல்லக்கிலமர்ந்து திருவையாறு நோக்கிச்செல்லுங்கால், இரவு ஒரு யாமம் ஆகி யிருக்கலாம். இருபுறமும் நெடிய மரங்கள் அடர்ந்து வளர்ந்துள்ள இருள் சூழ்ந்த கொடிய வனத்தினூடே செல்லும் குறுகிய வழியொன்றை யடைந்தனர். பெரிதும் அச்சங் கொள்ளத் தக்க அவ்விருண்ட வழியில் சிறிது தூரம் சென்றனர். அவ்வமயம், அப்பெருங்காட்டைத் தமக்கு உறைவிடமாய்க் கொண்டிருந்த கள்வர் சிலர் ஒரு கூட்டமாய் வந்தனர்; சுவாமிகள் ஏறிச் செல்லும் பல்லக்கை வளைத்துக் கொண்டனர்; பல்லக்கின் மீது கவண்கல் வீசி எறிந்தனர்.

அதுகண்ட சீடர்கள் மிகப் பயந்தவர்களாய் "ஐயனே! கள்வர் வந்து கவண்கல் வீசுகின்றனர். கல்லடியைத் தாங்கி நிற்க முடியவில்லை. மெத்தவும் பயமாக விருக்கின்றது. இதற்கென் செய்வோம்?" என ஓலமிட்டு நின்றனர்.

அது கேட்ட நம் சுவாமிகள் அலமலந்து நிற்கும் சீடர்களைப் பார்த்து "கள்வரைக் கண்டு நாம் ஏன் கலங்க வேண்டும்? நம்மிடத்து அவர்கட்குக் கிடைக்கக் கூடிய பொருள் என்ன விருக்கின்றது?" என வினவினர்.

அவ்வினாவினைச் செவிமடுத்த சீடர்கள் "சுவாமி! பல்லக்கில் உள்ள பெட்டியில் கோவூர் சுந்தர முதலியார் வைத்துள்ள

ஆயிரம் பொன் நிறைந்த பையொன்றிருக்கின்றது" எனக் கூறினர்.

அவ்வளவில் பல்லக்கை அவ்விடத்தே நிறுத்தச் செய்தனர் நம் சுவாமிகள். ஐயன்பால் தம் மனத்தை இருத்தி "மண்ணவர், விண்ணவர் யாவர்க்கும் மிகுதியும் இன்னல் விளைத்து வந்த முரன் கரன் என்ற கொடிய அரக்கர்களை வீழ்த்தி யாவர்க்கும் இன்பத்தைத் தந்தவனே! ஏ! இரகுவம்சத்தில் பிறந்த இராமா! வாடா!! உன்னைப்போன்ற உயரிய தன்மையுள்ளோரை எங்குத் தேடினும் காண்பதற்கில்லை. வலிமிக்க இரவி குலம் எனப்படும் ஆகாயத்திற்கு நிறைமதியாக விளங்குபவனே! கோதண்டத்தைத் தாங்கிய கையனே! விரைந்து வாடா! எக்காலத்தும் உனது பக்கலிலிருந்து உனக்குப் பணிவிடை புரிந்து நிற்கும் பெருமை மிக்க இளவலுடன் இணைபிரியாதிருந்து வரும் பெருவலி படைத்துள்ளவனே! 'ஆதிமூலமே' யெனவலறிய யானையின் இடர் தீர்த்துக் காப்பாற்றியவனே! அரசர்க் கரசராய தசரதரது அரிய திருக்குமரனே! 'ஓம்' எனப்படும் பிரணவத்தை உறைவிடமாய்க் கொண்டுள்ள உயர்பதியே! உனது அரிய திருநாமங்களை அன்பு கொண்டு பாடி நிற்கும் பாகவதர்க ளிடத்துப் பேரன்பு பூண்ட பெரியோனே! என்னிரு பக்கங்களினும் நின்று என்னைக் காப்பாற்ற வாடா!" எனப் பொருள் கொண்டுள்ள "முந்து வெனுக" (தர்பார்—ஆதி) எனும் கீர்த்தனத்தையும்; "ரகுவீர ரணதீர" (ஹுஸேனி—ரூபகம்); எனும் கீர்த்தனத்தையும் மனமுருகிப் பாடிநின்றனர்.

## காகுத்தன் காவற்காரனாய் வருதல்

"ஏ! நாரதனே!! நானிருக்கு மிடம் வைகுண்டமென்றும், யோகிகளது இதய மென்றும் பின்னும் பல்விதமாயும்

கூறுவர் உலகினர். ஆனால், நான் அவ்விடங்களில்தான் இருப்பேன் என்பதில்லை. மற்று எவ்விடத்தி லிருக்கின்றீரெனக் கேட்பாயோ ? என் மீது பேரன்பு பூண்டுள்ள பக்தர்கள் எனது திருநாமங்களாலாய கீர்த்தனங்களை — பாடல்களை எங்கெங்கு இருந்து பாடுகின்றனரோ அவ்வவ் விடங்களே நான் மனமுவந் திருக்குமிடமென வறிந்துகொள்"..........."என் மீது உள்ளன்பு கொண்டுள்ள பக்தர்கள் என்னை எவ்வெவ்விதமாய்—உருவமாய் நினைத்து வழிபடுகின்றனரோ, அவ்வவ்விதமாய்— உருவமாய்க் காட்சி யளித்து, அவர்கட்குற்ற குறைகளைத் தீர்த்தருள்கின்றேன்"..........."என்னையே புகலிடமாய்க் கொண்டு உறுதியுடன் நிற்கும் எனது அடியவர்க்கு நான் அடியவனாய் நின்று, அவர்கட்குக் குற்றேவலும் செய்வேன்". இவை மாயவனது மெய்ம்மொழியே யாகும். அப்படிக் கொத்த அடியார்க் கடியவனாய ஐயன், நம் சுவாமிகள் தம் மனதிற் கருதிய வண்ணம், இளையபெருமாளுடன், கண்டோரது நெஞ்சம் அஞ்சத் தக்க காவலரே போன்ற திருவுருவினைத் தாங்கி வந்து, பல்லக்கின் இரு பக்கலிலும் நின்று கள்வர் மீது அம்புகளை யெய்தனர்.

அருளே உருவினனாய ஐயனும், அவரது நிழலே போன்ற இளையபெருமாளும் விடுத்த அம்புகளானவை, கல்லினும் கடிய நெஞ்சத்தவராய கள்வர்தம்மீது பாய்ந்து காயப்படுத்தினவே யல்லாமல், அவர்களில் எவரது உயிரையும் குடிக்கவில்லை. அதற்கு மாறாக அவர்களது கல்லினும் கடிய உள்ளத்தை உருக்கி, அதனில் அன்பைப் பெய்து பாகாய் நெகிழச் செய்தன. மகாத்மாவாகிய ஸ்ரீதியாகராஜ சுவாமிகளது கருணைக்கு உரியவர்களாயுள்ள அக்கள்வரைக் கொல்ல இராமனுக்கு இஷ்டமில்லை போலும்!

அன்பெனும் கயிற்றினல் பிணைக்கப்பட்ட திருடர் யாவரும் தம் செயலிழந்தவராயினர்; பல்லக்கின் இரு பக்கலிலும் நின்று தம்மீது அம்புகளைப் பெய்யும் அவ்விரு சேவகர்களது திருமேனியினையும், தோள்வலியின் திறத்தினையும் பார்த்த வண்ணம் பல்லக்கைப் பின்தொடர்ந்து செல்லலாயிர். இவ்விதம் நடந்தவைகளை நம் சுவாமிகளோ—சீடர்களோ எவரும் அறிந்தனரில்லை.

## திருடர் யாவரும் தொண்டர்களாதல்

பொழுதும் புலர்ந்தது. பாழும் இருளும் ஒழிந்தது. தனது குலத்தோன்றலாகிய இராம இலட்சுமணர் இருவரும் பல்லக்கைப் பாதுகாத்துச் செல்வதை யறிந்த இரவியானவன், அவர்கட்கு மேலும் வருத்தங் கொடுக்க மனமில்லாதவனே போன்று, குணதிசைக் கடலினின்றும் விரைந்தெழுந்து வந்தனன். குழந்தைகள் ஏதேனும் ஒரு வேலையைச் செய்ய, அது கண்ட பெரியோர் அக்குழந்தைகட்கு வருத்தங்கொடமனமில்லாதவராய் "குழந்தாய்! இங்கே வா! இவ்வூஞ்சலில் உட்கார்ந்துகொள். அவ்வேலையை நான் செய்து முடிக்கின்றேன்" எனக் கூறுவதும் இயல்பே யல்லவோ?

பல்லக்கைக் காத்துவந்த இராம இலட்சுமணர் இருவரும் பகலவனது தோற்றம் கண்டு, இனி இவர்கட்கு ஏதும் பயமில்லையென வெண்ணி மறைந்தருளினர். அதுகண்ட திருடர் ஆச்சரியமடைந்தனர். பல்லக்கின் அருகே வந்து சுவாமிகளது திருவடியில் வணக்கமுடன் வீழ்ந்தெழுந்து நின்று, "சுவாமி! நாங்கள் யாவரும் கள்வராவோம். தம்மிடம் உள்ள பொருள்களைக் கொள்ளை கொண்டுபோக வெண்ணி வந்தோம். ஆனல், அவ்விதம் எங்களைச் செய்ய வொட்டாமல், பல்லக்கின் இருபக்கங்களிலும் அழகிய சேவகர் இருவர் நின்று எங்கள் மீது அம்புகளை எய்து எங்களைக் காயப்படுத்தினர். அவ்

விருவரும் இப்பொழுது எங்கே மறைந்து போயினர்? அவ்வி தம் அவர்கள் எங்களை வெகுவாகத் துன்புறுத்தியும், அவர் கள் மீது எங்களுக்குச் சிறிதளவு கோபமும் ஏற்படவில்லை. அவர்களது வடிவழகினைக் காணக்காண எங்களுக்கு ஆநந் தமே பொங்கி யெழுந்தது. திறம் பெற்ற அவ்விருவரையும் தாம் எங்குத் தேடி யடைந்தீர்? இது போழ்து அவர்களை எவ் விடத்திற் கனுப்பி விட்டீர்?" என வியந்து வினவினர்.

அம்மொழியினைச் செவிமடுத்த நம் சுவாமிகள் ஆநந்தக் கண்ணீர் சொரிந்தனர். 'அவ்விதமாயின் அவ்விருவரும் இராம இலட்சுமணராகவே யிருத்தல் வேண்டும்' என மனத் தில் நினைந்தவராய் அக் கள்வரைப்பார்த்து "ஏ! அன்பர்களே! இது போழ்து நீங்கள் கண்டதாகக்கூறும் அவ்விரு சேவகரை யும் எனக்குக் காண்பியுங்கள்? இதோ இந்த ஆயிரம்பொற் காசு நிறைந்த பணப்பையை உங்களுக்கே கொடுத்து விடுகின் றேன்" எனக் கூறியவராய்ப் பல்லக்கினின்றும் பணப்பையை எடுத்துப் 'பொத்'தென அவர்களது முன்னிலையில் போட்ட னர்.

அதுகண்ட கள்வர் ஆச்சரிய மடைந்தவராய் "சுவாமி அச்சேவகரை இன்னாரெனத் தாம் அறியீரா? அவர்கள் இவ் விடம் நின்று அம்புகளை எங்கள் மீது விடுத்ததைத் தாங்கள் பார்க்க வில்லையா? ஆயிரம் பொன்னை எடுத்துக் கொள்ளுங் கள். அவர்களை எனக்குக் காட்டுங்களென எங்களைக் கேட் கின்றீரே" எனக்கூறித் திகைப்படைந்து நின்றனர்.

அதற்கு நம் சுவாமிகள் அவர்களைப் பார்த்து "அன்பர் களே! எனது குலதெய்வமாகிய இராமபிரானும், அவனது தம் பியாகிய இலக்குவனுமே இருசேவகராய் வந்து எங்களைப் பாதுகாத்திருத்தல் வேண்டும். காண்டற்கரிய அவ்விருவரை யும் கண்ணாரக் கண்டு களிப்பெய்திய உங்களது பாக்கியமே

பாக்கியம்! முற்பிறவிகளில் நீங்களனைவரும் எத்தன்மையதாய புண்ணியத்தைச் செய்திருந்தீர்களோ? உங்களுக்கு இப்பிற வியில் எம்பெருமானது தரிசனம் கிடைக்கப் பெற்றது.மிகுதி யாகப் பாவத்தைச் செய்தவனாகிய எனக்கு அவனது திவ்விய தரிசனம் எவ்வாறு கிடைக்கும்?'' எனக்கூறிக் கண்ணீருகுத் தவராய் நின்று, "ஏ! ஏழை மனமே! ஸ்ரீராமன் கை அம்பு களின் காக்கும் திறம் எத்தன்மையதென எடுத்துக் கூறுகின் றேன் கேட்பாயாக. ஸீதாதேவிக்கு ஆசைப்பட்ட இராவண னது மூலபலங்களையும் நிர்மூலமாக்கிய அந்த இராமன் கை அம்புகளின் பெருமையை என்னென்று எடுத்தியம்புவது? ஓர மயம், இளைய பெருமாள் போர் முகத்தில் முனைந்து நின்று போராடுங்கால் சிறிது இளைப்படைய,அதுகண்ட இராவணன் உவகை கொண்டவனாய்ச் சருக்கரை வரவழைத்து வழங்க வெண்ணித் தனது தனயனை 'இந்திரஜித்'தை விளித்துச் 'சருக்கரை கொண்டுவா?' எனக்கூற, "அப்பா! சருக்கரை வழங்குதற்கான வேளை இன்னும் வரவில்லை'' எனக் கூறிய இராமன் திடமனம் பூண்டு நின்று, வில்லை வளைத்து, நாண்பூட்டி அனைவரையும் நிலை குலைய வடிக்க, அவ்வளவில் அமைதி யடைந்த மனத்தனாய் நின்ற இளைய பெருமாளைப் பார்த்து உவகை கொண்டனன். உண்மையுடன் தியாகராஜ னால் கொண்டாடப்படும் இராமன் தனுவிற்குள்ள அருமை பெருமைகளை எத்தன்மையதென எடுத்தியம்புவது ?'' என்ப தாகப் பொருள்விளங்க "ராம பாண த்ராண சௌர்யம்'' (ஸாவேரி—ஆதி) எனும் கீர்த்தனத்தையும், "ஏ! ராமா !! உனது கைவில்லும், அம்புகளும் அதிகம் வியப்பைத் தருவனவா யுள்ளன. அவற்றைப் போன்ற வில்லம்புகள் வேறிருப்பதாகத் தெரியவில்லை. மற்றெவர் விடுக்கும் அம்பும் திரும்ப வருவதில்லை. நீ விடுக்கும் கணைகளோ தப்பாமல்

எதிரிகளை வீழ்த்திவிட்டுத் திரும்பவும் உன்னிடம் வந்து சேர்ந்து விடுகின்றன. இவ்விதமாய வில்லையும், அம்புகளையும் நீ இவ்வுலகில் வந்தவதரித்தபின் தேடியடைந்தாயா? அல்லது நீ அவதரித்த பொழுதே அவைகளும் உன்னுடன் தோன்றினவா? பெருவலி பெற்று விளங்கிய இராவணனே உன் கை அம்பின் எதிரில் நிற்கமாட்டாமல் பின்னிட்டானே! மேலும், நீ விடும் அம்பானது வெளிப்புறப்பட்ட மாத்திரத்தில்,ஒன்று பத்தாய், நூறாய், ஆயிரமாய், பதினாயிரமாய்க் கணக்கற்றனவாய் விளங்கும் தன்மையை நதிகளுக்கெல்லாம் தலைவனாகிய சமுத்திர ராஜன் அல்லவோ அறிவன்? கடலைக் கடந்து செல்லும் பொருட்டு அவனை விளித்து வழிவிடும் வண்ணம் நீ வேண்ட, அதற்கிணங்கிவராத அவன்மீது ஒரு அம்பை எய்தாய். அதன் வெம்மையைத் தாங்கமாட்டாத அவன்,மிகவும் பயந்தவனாய் உன்னிடமே வந்து அடைக்கலம் புகுந்து, தன் மீது விடுத்த அவ்வம்பை 'துருமகுல்லியம்' எனும் இடத்திலிருந்த கொடிய அரக்கர்களைக் கொன்றுவரும் வண்ணம் அனுப்புமாறு அவன் வேண்ட,அவ்விதமேஉன்னால் அனுப்பப்பட்ட அவ்வம்பானது, அவ்விடம் சென்றுஆங்கிருந்த அரக்கர் யாவரையும் அழித்துவிட்டுத் திரும்பவும் உன்னிடம் வந்து சேர்ந்தது அல்லவா? தவிரவும், காகாசுரன் எனப்பட்டவன் சீதாதேவிக்குக் குற்றமிழைக்க, அவன்மீது நீ ஒரு துரும்பை யெடுத்துவிட, அது அரிய 'பிரம்மாஸ்திர'மாய் அவனைத் துரத்த, அதன் எதிர் நிற்க ஆற்றலற்ற அவ்வசுரன் வெருண்டோடி, மும்மூர்த்திக ளிடத்திலும் சென்று முறையிட, 'இராமன் விடுத்த அம்பை எங்களால் தடுத்தற்கு முடியா' தென அம்மூவரும் கூறிவிடவில்லையா? ஆ! என்ன ஆச்சரியம்!! ஏ! கோதண்டபாணீ!! உனக்குப் பெருமைமிக்க இவ்

வில்லையும் அம்புகளையும் எவர் கொடுத்தனர்?" எனப் பொருள் தோன்ற "எவரிச்சிரிரா" (மத்தியமாவதி—ஆதி) என்ற கீர்த்தனத்தையும்; "வாசாமகோசரமே மனஸா!" (கைகவசி—ஆதி) என்ற கீர்த்தனத்தையும் பாடினர்.

இராகவனையும் இளவலையும் காணப் பெற்றமையாலும், அருள் நிரம்பிய அவர்களது அம்புகளினால் அடிபட்டமையாலும், பக்தரது அருள் நோக்கம் பெற்றமையாலும், அத்திருடர் யாவரும் தம்மனம் மாறியவராய்த் தாம் செய்து வந்த திருட்டுத் தொழிலைக் கைவிட்டு, அன்று முதல் நம் சுவாமிகளது திருவடித் தொண்டினைச் செய்து வரலாயினர்.

பெரியார்தம் பெருமை


"செயற்கரிய செய்வார் பெரியார்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார"

பேரறிவுருவனை அறியும் ஒரு திறத்தினை யடைந்துள்ள பெரியோர்தம்மால் செயக்கூடாதது ஒன்று உளதோ?

"போத முண்ட பிள்ளை யென்பு
பொருகண் மாறு செய்ததோ
காதல் கொண்டு சொல்லின் மன்னர்
கன்மி தப்ப வுய்த்ததோ
வாய்தி றந்து முதலை கக்க
மகனை நீய ழைத்ததோ
யாது நம்பி யரிது நன்றெ
னக்கியம்ப வேண்டுமே"

என்பதனால், பரமனிடத் தன்பு பூண்டொழுகும் பக்தர்தம் பெருமை புகல்வதற்கரிதே யெனத் தெற்றென விளங்குகின்றது.

கவிக்கரசர் எனக் காசினியோர் புகழ்ந்தேத்தும் கம்பர் பெருமான், தாம் இயற்றிய இராமாயணத்தை அரங்கேற்றக்



தஞ்சை - ஸ்ரீ கிருஷ்ண பாகவதர், ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள், கோயம்புத்தூர் - ஸ்ரீ இராகவையர்,
ஸ்ரீ மகா வைத்தியநாத ஐயர், ஸ்ரீமான் கே. வரதாச்சாரியார் பி. ஏ., பட்டணம் சுப்பிரமணிய ஐயர்.
By the kind Courtesy of Mr. V. Veeraraghava Iyengar, Manager, The "Swadesimitran" Office, Madras.

கருதித் தில்லைவாழந்தணர்களிடம் செல்ல, அதற்கவர்கள், "நாங்கள் மூவாயிரவரும் ஒருங்கு கூடியிருக்குங்கால் உமது இராமாயணத்தை எடுத்து வாரும்' எனக் கூறியனுப்பினர். அச் சமயத்தை எதிர் நோக்கி யிருந்தனர் கம்பநாடர். ஒரு நாள் அவர்களில் ஒருவரது குழந்தை பாம்பு கடித்திறந்துபோக, உயிரற்றஅவ்வுடலை யாவரும் கூடிச் சுடலைக் கெடுத்துச்செல்ல, அதுவே தருணம் என வெண்ணிய கம்பர், இடுகாடு சென்று ஆங்கிருந்த அந்தணரனைவரையும் நோக்கி "நீங்கள் சொன்ன படி வந்து விட்டேன். இதுகாலை நீங்கள் யாவரும் ஒருங்கு கூடியிருக்கின்றீர்கள். ஆதலால், எனது இராமாயணத்தைக் கேட்பீர்களாக" எனக் கூற, அதற்கு அவ்வந்தணர்கள் "இறந்துகிடக்கும் இக்குழந்தையை நீர் பிழைக்க வைப்பின் உமது இராமாயணத்தைக் கேட்கின்றோம்" என்றுரைக்க, அது கேட்டருளிய கம்பர்பெருமான் 'ஐயனருள் இருப்பின் ஆகாத தும் ஒன்றுண்டோ?' என வெண்ணி மனத்திடம் பூண்டவராய்

"ஆழியான் பள்ளி அணையே அவன்கடைந்த
ஆழி வரையின் மணித்தாம்பே — பூழியான்
பூணே புரமெரித்த பொற்சிலையில் பூட்டுகின்ற
நாணே அகல நட"

எனும் கவியைக் கூறினர். அவ்வளவில் இறந்து கிடந்த அக் குழந்தையும் உயிர்பெற்றெழுந்தது. இராமாயணமும் அவர் களிடம் அரங்கேற்றப் பெற்றது. இறைவனிடத்து உளளன்பு பூண்டுள்ள அன்பர்தம் பெருமை அளவிடற் கரியதேயாம் அல்லவோ?

கார்முகில் வண்ணப் பெருமானது வில்லம்பினால் அடி பட்டுக் குணம் மாறிய கள்வர்கள் நம் சுவாமிகளுக்குச் சீட ராய் அவர் அமர்ந்துள்ள பல்லக்கைச் சுமந்து செல்லலாயினர்.

பொழுது புலரும் தறுவாயில் காட்டின் எல்லையைக் கடந்தனர். அப்பாலும் செல்லுங்கால் ஆங்கிருந்த வோர் ஊரையடைந்து உட்புகுந்து செல்லலாயினர்.

அவ்வமயம் அவ்வூரின் தெருக்கோடியிலிருந்த கோயிலின் வாயிலில் மாந்தரனைவரும் கூடியிருத்தலைக் கண்டனர் நம் சுவாமிகள். ஆங்கு யாது விசேடமென அறிய வெண்ணினர். அவ்வளவில் தம் சீடர் ஒருவரைப் பார்த்து 'விரைவிற் சென்று விடய மென்னவென அறிந்துவா?' வெனப் பணித்தருளினர்.

அவ்விதமே சென்று விசாரித்தறிந்து வந்த சீடர், நம் சுவாமிகளைப் பார்த்து "ஐயனே! எவனோ ஓர் அந்தணன், தனது இளங் குழவியுடன் இல்லாளையும் அழைத்துக்கொண்டு திருப்பதி யாத்திரை செல்பவன், அந்திப் பொழுதில் வழிதுறை தெரியாமல் இக்காட்டிடை புகுந்து கெட்டலைந்து, ஐயனருளால் இரவு ஒரு யாமத்துக்குமேல் இவ்வூரை வந்தடைந்தனனாம். இவ்வூரில், பக்கத்தேயுள்ள வனத்து வாழும் விலங்கினங்களின் தொந்தரை மிகுதியாதலின், ஊரிலுள்ளாரனைவரும் இரவு வந்ததும் தத்தம் வீட்டுக் கதவினைச் சாத்தித் தாளிட்டுக் கொண்டு படுத்துறங்கி விட்டனராம். அதனால் அவ்வந்தணனுக்கு எவரும் கதவைத்திறந்து இருப்பதற்குச் சிறிது இடங் கொடுத் துதவினரில்லையாம். விலங்கினங்கள் போடும் கூச்சலைக் கேட்ட அவ்வந்தணன் மிகப் பயந்தவனாய்க் கோயில் சென்றடைய, அதன் வாயிற்கதவும் உட்பக்கம் தாளிடப்பட்டிருத்தலைக் கண்டு பெரிதும் வருந்தியவனாய்த் தன் மனைவியைப் பார்த்து "நான் இம்மதிலின் மீதேறி உட்பக்கம் குதித்துக் கதவைத் திறக்கின்றேன்" எனக்கூறி அம்மதிலின் மீதேறி உட்புறம் குதித்தனனாம். அவ்விதம் அவன் குதித்த விடத்தில் கிணறு ஒன்றிருந்தமையால் அதில் வீழ்ந்து அவன் உயிர்நீத்

தனனும். மதிலேறிக் குதித்த மணாளன் வெகு நேரமாகியும், கதவைத்திறந்துகொண்டு வராமை கண்ட அவ்விள மங்கை பெரிதும் வருந்தியவளாய் "ஐயோ! உள்ளே குதித்த மணாள னுக்கு ஏதேனும் ஊறுபாடு ஏற்பட்டு விட்டதோ? ஏதும் தெரியவில்லையே! என் செய்வேன்! இவ்விளங்குழவியை வைத் துக்கொண்டு இருள் சூழ்ந்த இவ்விரவை எவ்வாறு கழிப் பேன். அப்பப்ப! கரடி புலி முதலாய காட்டு மிருகங்கள் போடும் கூச்சல்கள் காதைத் துளைக்கின்றனவே! ஏ! ஈசா!! ஏழை நான் என்செய்வேன்?" எனப் பலவாறு கூறிப் புலம்பி நின்று அவ்விரவைக் கழித்தனளாம். காலைப் பொழுதானதும் ஊரிலுள்ளோர் யாவரும் எழுந்து வந்து விடயமறிந்து கோயி லின் கதவைத் திறந்து உட்சென்று பார்க்க, அவ்வந்தணன் கிணற்றில் பிணமாய் மிதக்கக் கண்டனராம். உடனே கிணற் றினின்றும் பிணத்தை வெளியே யெடுத்துப் போட்டனராம். அது கண்ட அப்பெண் தன் கணவன் மீது வீழ்ந்து 'ஒப்பியோ முறையோ' வெனக் கதறுகின்றனள்" எனக் கூறினர்.

"பெரியவர்,தம் நோய்போல் பிறர்நோய்கண்(டு) உள்ளம்
எரியின் இழு(து)ஆவர் என்க,—தெரியிழாய்!
மண்டு பிணியால் வருந்து(ம்) பிறஉறுப்பைக்
கண்டு கலுழுமே கண்"

என்ற சிவப்பிரகாச சுவாமிகளது திருவாக்கின் வண்ணம், பிறர்க்குற்ற துயர்கண்டு, அது தமக்குற்றதே போலக்கொண்டு பெரிதும் துயருறுவது பெரியார் இயல்பன்றோ?

அவ்விதம் சீடரால் சொல்லக் கேட்ட நம் சுவாமிகள் மனம் பொறுதவராய் அங்கு விரைந்து சென்றனர். ஆவி துறந்து கிடக்கும் அவ்வந்தணரது கழுத்திடை வண்டுழாய் மாலை இருத்தலைக் கண்டனர். 'ஆ! இவன் நமது இறைவனுக்

கன்பனே!' யென வெண்ணியவராய் "நாஜீவாதார" (பிலஹரி —ஆதி) எனும் கீர்த்தனத்தால் இராமபிரானைத் துதித்து, இறந்து கிடந்த அவ்வந்தணனுக்கு உயிரளித்திடுமாறு வேண்டினர். அவ்வளவில் அவ்வந்தணன் ஐயனருளால் உயிர்பெற்று உறக்கத்தினின்றும் எழுபவனே போல வெழுந்தனன். தனக்கு உயிர்ப் பிச்சை யளித்த சுவாமிகளது திருவருட்டிறம் வியந்து, திருவடி பணிந்து, அவரது ஆசியைப் பெற்றுத் தன் இல்லாளுடனும் இளங் குழவியுடனும் திருப்பதி நோக்கிச் சென்றனன். சுவாமிகளும் தமது சீடர்களுடன் புறப்பட்டுத் திருவையாறு வந்தடைந்தனர்.

## அரங்கமாநகர் செல்லல்

சின்னாட்கள் செல்லவும் நம் சுவாமிகள் ஸ்ரீரங்கம் செல்ல வெண்ணிச் சீடர் புடைசூழப் புறப்பட்டனர். 'பூலோக வைகுந்த' மெனப் புகழ்ந்து கூறப்படும் அத்தலத்தை யடைந்தனர்; ஆலயம் புகுந்தனர்; அரங்கநாயகி சமேதனாய் எழுந்தருளியுள்ள அரங்கநாதனைத் தரிசித்தனர். ஆநந்த மனத்தராயினர்; அவனடி பணிந்தனர்; "ஓ ரங்கசாயீ" (காம்போஜி—ஆதி); "கருண ஜூட வய்யா" (ஸாரங்க—ஆதி); "ராஜு வெடலே ஜூதாமுராரே கஸ்தூரி ரங்க" (தேசிகதோடி—ரூபகம்) எனும் கீர்த்தனங்களால் அவனருளை வியந்து பாடினர்.

அப்பால், அத்தலம் விட்டு நீங்கித் திருவிடைமருதூர் வந்தடைந்தனர். மாநிலத்தோரால் மிகவும் புகழ்ந்து கூறப்படும் அம்மத்தியார்ஜுனத்தில் எழுந்தருளியுள்ள மகாலிங்கேசுரரை வழிபட்டனர். அங்கிருந்தும் அப்பாலுள்ள கோவிந்தபுரத்தை யடைந்தனர். ஆங்கு பரப்பிரம்ம ஸ்வரூபமாய் விளங்கும் ஜகத்குரு ஸ்ரீ போதேந்திர சுவாமிகளை வணங்கி, ஸ்ரீதர வேங்கடேசார்யரை மிகவும் புகழ்ந்து கொண்டாடி, அவர்க்கு

வந்தனை வழிபாடுகளைச் செய்தனர். அப்பால், ஆங்கிருந்தும் புறப்பட்டுத் திருவுலாவும் திருநாகையம்பதி வந்தடைந்தனர்; திருக்கோயில் சென்றனர். ஆங்கு ஆன்ம கோடிகளை உய் விக்க வேண்டி எழுந்தருளியுள்ள நீலாயதாட்சி யம்மையை யும், காயாரோகணப் பெருமானையும் வணங்கினர். அவனருள் வியந்து அவன்மீது பல கீர்த்தனங்களைப் பாடினர். அப்பால், அங்கிருந்தும் புறப்பட்டுத் திருவையாறு வந்தடைந்தனர்.

### சுவாமிகளின் மனைவியார் சித்தியடைதல்

இவ்விதமாய் நம் சுவாமிகள் இறைவனது வழி பாட் டிலேயே தமது காலத்தைச் செலவிட்டு வருவாராயினர். சின்னாட்கள் செல்லவும் நம் சுவாமிகளது மனைவியார் இம்மண் ணுலகை நீத்துப் பேரின்பப் பெருவெள்ளம் கரை புரண்டோ டும் பேருலகு சென்றடைந்தனர்.

அவ்வுத்தமியினது பிரிவாற்றாமைக்குப் பெரிதும் வருந் திய நம் சுவாமிகள் ஐயனை நினைந்து "தொலிஜன்ம முன" (பிலஹரி—ஜம்பை); "தொலினே ஜேஸின" (சுத்த பங்காளா —ஆதி); "ஏபாபமு ஜேஸிதிரா" (அடாணா—திரிபுடை) எனும் கீர்த்தனங்களைப் பாடி மனம் வருந்தினர்.

### காகுத்தன் காட்சி யளித்தல்

இவ்விதமாய் நம் தியாகராஜ சுவாமிகள், பல்லோரது புக ழையும் பெற்றுப் பெருமையுடன் நின்று, பரமன் மீது பல கீர்த்தனங்களைப் பாடி யருளினர்; 'பிரஹ்லாத விஜயம்' 'நௌகா சரித்திரம்' என்னும் சிறந்த கிரந்தங்களை இயற்றியருளி னர்; பரமனது தரிசனத்தைப் பெரிதும் விரும்பி நின்றனர்.

ஒருநாள் இராமபிரான் நம் சுவாமிகளது வேண்டுகோளுக் கிரங்கி அவர்முன் தோன்றி "அன்பனே! இற்றைக்குப் பத் தாம் மாதம் நீ இவ்வுலக வாழ்வினைத் துறப்பாய். ஆயினும், நீ

இன்னொரு பிறவி யெடுத்த பின்பே நம்பதம் வந்து சேர்வாய்" எனத் திருவாய் மலர்ந்து மறைந்தருளினன்.

மறபிறவியை நினைந்த நம் சுவாமிகள் மிகுதியும் மனம் வருந்தியவராய் "ஜ்ஞான மொஸக ராதா" (கமனச்ரமா—ரூபகம்); "இதி ஸமயமுரா" (சாயாநாட—தேசாதி); "கிருபஜூசுடகு வேளரா ராம" (சாயாதரங்கிணி—ஆதி) எனும் கீர்த்தனங்களைப் பாடி, மீண்டும் இப்பூதலத்தில் பிறவாதிருக்க வரம் தந்தருள வேண்டுமென இராமனை இறைஞ்சினர்.

## சுவாமிகள் சந்நியாச மடைதல்

இவ்விதம் நம் சுவாமிகள் இறைவனை வேண்டி நிற்க ஒன்பது மாதங்களும், இருபது நாட்களும் சென்றன. அன்பனுக் கருள் செய்திடத் திருவுளங் கொண்ட இராகவன், மீண்டும் அவர்க்குத் தமது திவ்விய தரிசனத்தை யளித்து "அன்பனே! உனது போற்றுதலுக்கு மிகவும் உளம் மகிழ்ந்தோம். இன்றே நீ சந்நியாசம் வாங்கிக் கொள்வாயாக. இனி உனக்கு மறு பிறவி ஏற்படா தொழிக. இற்றைக்குப் பத்தாம் நாள் எனது 'ஸாயுஜ்ய பத'த்தை வந்தடைவாயாக" எனத் திருவாய் மலர்ந்தருளி மறைந்தனன்.

அவ்வளவில் ஆனந்த மனத்தராயினர் நம் சுமாமிகள்; ஐயனது அருட்டிறம் வியந்தனர்; அவன் குணம் புகழ்ந்து பாடினர்; உடனே பெரியார் பலரது முன்னிலையில் முறைப்படி சந்நியாசம் பெற்றுக்கொண்டனர்.

## சுவாமிகள் சித்தியடைதல்

ஒன்பது நாட்களும் ஓடி ஒளிந்தன. ஐயன் குறிப்பிட்ட அந்நாளும் வந்தது. அது, கலி, நாலாயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தெட்டாம் (4948) ஆண்டாய 'பராபவ' வருடம் தை மாதத்திய 'பகுளபஞ்சமி' யாகும். அன்று, என்று

மில்லாத விதமாய், மிக்க மேன்மையாய், மிகுந்த ஒளியுடன் விளங்கினர் நம் சுவாமிகள்.

'அன்றே தாம் இப்பூதலத்தில் பொய்யுடலுடன் நின்றுலவும் முடிவான நாளாகும்' எனவறிந்த நம் சுவாமிகள், தம் சீடர் பலரையும் ஒருங்கு கூட்டினர். "அன்பர்களே! இன்னும் சிறிது நேரத்தில் நான் உங்களது கூட்டத்தினின்றும் பிரிந்து செல்ல வேண்டியவனாக இருக்கின்றேன். இது போழ்து நான் உங்களுக்குக் கூறப்போகும் கட்டளைகளே கடைசியான கட்டளைகளாகும். அவற்றை நீங்கள் நிறைவேற்றி வைப்பதாலேயே உங்கள் கடமையைச் செய்தவராவீர்கள். சிறிதும் சலிப்பின்றிச் சங்கீத சாஸ்திரத்தை நீங்கள் ஜகமெங்கணும் பரப்பிவருதல் வேண்டும். அக்கலையின் அருமை பெருமைகளையும், அதை வழிபடுதலால் கிடைக்கப் பெறும் பெறற்கரிய பயனையும் யாவர்க்கும் நன்கு விளக்கிக் கூற வேண்டும். அவ்வழி நிற்கும் உங்களுக்கு ஏற்படக் கூடியதான நற்பயனையோ, அந்நோக்கம் கைகூடுதற் கில்லாமல் வந்து வழி மறித்திடும் இடையூறுகளையோ, பிறர் பொறாமை மிகுதியினால் பிதற்றும் புறங் கூற்றுக்களையோ நீங்கள் சிறிதும் பொருட் படுத்துதல் கூடாது. எது வந்துறினும் நிலை கலங்காது நின்று, நம் பெருமான் சக்கரவர்த்தித் திருமகனைத் துதியுங்கள்! எவ்வித இடையூறையும் அவன் தீர்த்தருளுவன்.

அண்ணலைத் தன் மனத்தகத்தில் நிலைபெற நிறுத்திய அனுமான் ஆழ்கடலை ஒரு கணப்பொழுதில் தாண்ட வில்லையா? அவனருள் இருக்குமேல் ஆகக்கூடாத தென்பதும் ஒன்றுளதோ?

"நாமார்க்கும் குடியல்லோம், நமனை யஞ்சோம்" என்பதாக நீங்கள் எழுச்சி யடைதல் வேண்டும். உயர் பெருமா

னிடத்து உறுதியுடன் கூடிய உள்ளன்பினை நீங்கள் கொள்ளுதல் வேண்டும். பிறர்க்கெடுத்துக் கூறுவதேபோல நடக்கையில் நீங்கள் நிற்றல் வேண்டும்.''

இன்ன பல நல்லுபதேசங்களைச் சீடரது மனத்தில் பசுமரத்தாணி போன்று பதியுமாறு விளக்கமாய் எடுத்தியம்பினர். பின் யாவரிடமும் விடைபெற்றுக்கொண்டு சமாதியில் அமர்ந்தனர். அவ்வளவில், 'பரப்பிரம்ம ஸ்வரூப'மாய் விளங்கிய நம் சுவாமிகளது கபாலத்தை (மண்டை யோட்டை)ப் பிளந்து கொண்டு அற்புத 'ஜ்யோதி'யானது கிளம்பி ஆகாய மார்க்கமாய்ச் சென்றது. அதுகண்ட யாவரும் ஆச்சரியமடைந்தனர். "ஆ! ஆ!" வென ஆர்ப்பரித்தனர். அவரது பிரிவாற்றாமைக்கு அனைவரும் வருந்தினர். "இனி நம் செவிக்கு இனிமை செறிந்த நல்லுணவை யூட்டவல்லவர் யாவரிருக்கின்றனர்?" எனக் கூறி வாடிய மனத்தராய் நின்றனர். யாவரும் மலர் மாரி பெய்தனர். கான வித்தையில் மிகத் தேர்ந்தவராய கந்தருவர் முதலாயினோரையும் தோற்கடிக்கக்கூடிய திறமை வாய்ந்துள்ள சுவாமிகளது சீடர் யாவரும் அவரது கீர்த்தனங்களை உருக்கத்துடன் பாடிப் பரவினர். அவ்விராம நாம சங்கீர்த்தனங்களைக் கேட்டுப், பட்ட மரங்களும் பால் வடிந்து பசும் தழைகளை விரித்தாடி நின்றன. அவ்வமயம் ஆண்டுக் குழுமியிருந்தார் அனைவரும் சேர்ந்து போட்ட 'ஜே கோஷம்' அண்ட கடாகத்தைப் பிளந்தது வெனலாம்.

இவ்விதம் நம் சுவாமிகள் சித்தியடைந்த விடயம் மனோ வேகத்தினும் மிகு வேகமாய் இம்மாநில மெங்கணும் பரவலாயிற்று. அவ்விடயம் கேட்ட யாவரும் 'ஆ! இதுவும் உண்மையாய் இருக்கமுடியுமோ? கனவிலும் நினைத்தற் கில்லாத விடயமாக அல்லவோ விருக்கின்றது?' எனக்கூறி ஏக்கம்

பிடித்த மனத்தராய்ச் செயலற்றவராயினர். பல விடங்களி னின்றும் பலர் விரைந்து வந்து குழுமுவாராயினர்.

## சுவாமிகளைச் சமாதியில் சேர்த்தல்

அவ்வமயம் அவ்விடத்துக் கூடியிருந்த அன்பர் அனைவரும் சேர்ந்து, சுவாமிகளுக்குச் சந்நியாச முறைப்படிச் செய்ய வேண்டிய வினைத்தையும் சிறப்புறச் செய்து முடித்தனர். அவர் சுழற்றி யெறிந்த பொய்யுடலை அழகு பெற வலங்கரித்தனர். 'சற்குரு சுவாமிக்கு ஜே!' எனும் கோஷமானது வானத்தைப் பிளக்க, அவரை முறைப்படி எடுத்துச் சென்று காவேரி யாற்றின் கரையினை யடைந்தனர். நல்லிடமாகிய அவ்விடத்தில் சுவாமிகளுக்குச் சமாதி ஏற்படுத்தி வைத்தனர். அபிஷேகம் முதலியன வெகு சிறப்புடன் நடைபெற்றன. அச்சமாதியின் மீது 'பிருந்தாவனம்' (துளஸீ செடிகளை) வைத்துப் பயிராக்கினர். அச்சமாதியைப் பல் விதமாய் அலங்கரித்து 'மஹோத்ஸவம்' கொண்டாடினர்.

## முடிவுரை

மாபாதகன்—மிகக் கொடியன்—பிறன்மனை விழைவோன்—பிறர் ஆக்கம் கண்டு பொறாமை கொள்வோன் இன்ன பல வகையானும் உலகினரால் உயிருள்ளளவும் தூற்றப் படுவோனை ஒருவன் இறந்துபடின், அவனது குற்றங்களை யெல்லாம் மறந்து, "ஐயோ! பாவம் போயினன்!!" என, மனமிரக்கங் கொண்டு கூறப்படுவது இவ்வுலக வியற்கை. அவ்வித மிருக்க, அறிவு—நிறை—ஓர்ப்பு—கடைப்பிடி—மெய்யுரை—இனியவை கூறல்—பயன்படச் சொல்லல்—அருள் நோக்கம்—ஆசை யறுத்தல்—அருந்தவப் பற்று—ஐயனிடத் தன்பு—அருட்கவிபாடும் திறன்—அமைதி ஆய அருங் குண, அறவழி பலவும் ஒன்றுகூடி ஒருருவாய்த் திரண்டு

வந்து தோன்றியதோ வென்ன நின்று, நல்லோர் யாவராலும் புகழ்ந்து கொண்டாடப் பெற்ற நம் சுவாமிகளை யிழக்க எவர் தான் மனங்கொள்வர்? காண வந்தோர் கூடியிருந்தோர் யாவரும் 'தாயைப் பிரிந்த இளங்கன்று'போல் கண்கலங்கினர் எனக் கூறுவது மிகையாகாது.

பெருமைமிக்க நம் தியாகராஜ சுவாமிகளது சமாதி இது போழ்தும் மிகச் சிறப்புடன் விளங்கா நிற்கின்றது. சில வருடங்களுக்கு முன்னர், சுவாமிகளது சீடரும், இராமனது அன்பருமாய பக்தகோடிகளால், சுவாமிகளது சமாதியின் மீது அழகியதொரு கோயிலும் கட்டுவிக்கப் பெற்றுளது. சுவாமிகளுக்கு உற்சவமும் நித்தியபூஜையும் வெகுசிறப்புடன் செய்து வரப்படுகின்றன.

இவ்விதம் உலகினர் யாவராலும் உண்மையில் புகழ்ந்து போற்றப் பெறுபவரும்; கள்ளமற்ற மக்களது உள்ளத்தைக் கொள்ளைகொண்டவரும்; குற்றமே நிறைந்த இக்கலியில், காண்டற்கரிய அரும்பொருளாம் பரம்பொருளைக் கண்ணாரக் கண்டு களிப்பெய்தியவரும்; 'நாதோபாஸ'னையே இக்கலியில் நிமலனைக் காண்டற்கும், அவனது அருள் நிறைந்த திருவடி நீழலையடையப் பெறுதற்குமான தொரு நல்வழியாமென யாவர்க்கும் நன்கெடுத்துக் காட்டியவரும்; இணையில்லா அவ்வுயர் வழியினையே தாமும் பின்பற்றி நின்று, அதன் பயனாய், என்றும் அழிவுறாத இன்பவீட்டினை யடையப் பெற்றவரும்; மண்ணிடை விட்டகன்றும் நம் மனத்திடை விட்டகலாமல், ஒலி வடிவாய் நின்று இராமநாம அமுதமென்னும் 'கானரஸ' மாய தெவிட்டாத வின்பத்தை நமக்கு இன்றும் ஊட்டியருளும் உயர்பெரியாரும்; கருணைத்தடங்கட லெனத் தக்கவரும்: ஆகிய நம் தியாகராஜ சுவாமிகளது 'பாலும், தெளிதேனும்,

பாகும், பருப்பும்' ஆய இந்நான்கும் ஒன்று சேரக்கலந்து ஊட்டுவதேபோன்ற இன்சுவை பெற்றிலங்கும் கீர்த்தனங்கள், நம் நாட்டு மக்கள் பலருக்கு, இம்மையில் இனிமை செறிந்த தொருபிழைக்கும் வழியினையும்; மறுமையில், பேரின்ப வூற்றெடுத்து நாளும் பெருகியோடா நிற்கும் பேரூரை யடைதற்கானதொரு நல்லவழி யினையும் சுட்டிக் காட்டா நிற்கின்றன. இவ்விடயம் யாவரும் அறிந்த தோருண்மையே யாகும்.

பொய்யுடல் நீத்துப் புகழ் உடல் பெற்று, அன்றும், இன்றும், என்றும், 'குன்றின் மீதேற்றிய தீப' மென்னப் புகழாகின்ற ஒளி பெற்றிலங்கும் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளை, ஸ்ரீ வால்மீகி மாமுனிவரது திருவவதாரமென மொழிவர் மேலோர். நம் சுவாமிகளது கீர்த்தனங்களால் தெலுங்கு மொழிக்கே ஒரு சிறப்பு ஏற்பட்டுள்ளதெனக் கூறுவது மிகையாகாது. செஞ்சீர் பெற்றிலங்கும் நம் சுவாமிகளது கீர்த்தனங்களைத் தெலுங்கு தேயத்தவர்—தென்னாட்டவர் மாத்திரமேயல்லாமல், மற்றெந்நாட்டவரும், —எம்மதத்தவரும்—யாவரும் மிக்க விருப்புடன் பாடி வருகின்றனரெனில், அப்பெரியாரது கீர்த்தனங்களின் அருமை—பெருமைகளை யாவரே அளவிட்டுக்கூற வல்லுநராவர்? தவிரவும், தெலுங்கு மொழிக்குச் சிறிதளவும் மதிப்புக் கொடாதிருந்து வந்த நம் தண்டமிழ் நாட்டவர், சுவாமிகளது கீர்த்தனங்களில் அமைந்துள்ள சொல்நயம்—பொருள்நயம்—அருள் திறம்ஆகிய இவைகளை ஓர்ந்தும், அவற்றின் சிறந்த அமைப்பினைக் கண்டும், அவற்றைக் கற்றற்கு அவாமிக்குடையராயினர். அதன் பயனாய்த் தெலுங்கு மொழிக்கும் ஒரு பெருமையைக் கொடுக்கலாயினர்.

தேனினுமினிய தண்டமிழ் மொழியில் தேவாரம்—திருவாசகம்—திருவாய் மொழிகள் முதலிய துதிப் பாடல்கள் எத்துணை சிறப்புடைத்தோ, அதுபோலவே தெலுங்கு மொழியில் நம் சுவாமிகளது கீர்த்தனங்கள் பெரிதும் புகழ்ந்து போற்றுதற்குரியன வென்பது பேரறிஞர் பலரது உண்மைக் கருத்தாகும்.

ஒரு சிலர், நம் சுவாமிகளது கீர்த்தனங்களில் இலக்கண வழுக்கள் காணப்படுகின்றன வெனக் கூறினும், அருள் வாக்கினின்றும் எழுந்தவை இலக்கணப் பிழையுடன் இருப்பினும் குற்றமுடைனவாகா; பெருமை மிக்குடையனவே,போற்றுதற் குரியனவே என்பது பெரியார் பலரது துணிபாகும். அவ்விதம் இலக்கண நெறி பிறழ்ந்திருப்பினும், அக்கீர்த்தனங்களைக் கேட்டு மனமுவந்தே ஐயன் தனது அரிய காட்சியினையளித்து அழியாப் பதவியினையும் அருளினன் என்பது அறியத்தக்கது. ஆதலால் அவரது கீர்த்தனங்களில் குற்றங் கண்டு பிடித்தற்கு முற்படுவது அறிவுடையார் செயலாகாது.

நம் சுவாமிகளால் பாடப்பெற்ற கீர்த்தனங்கள் இவ்வளவென அளவிட்டுக் கூறுதற்கு இயலாததா யிருக்கின்றன. பெரியாரிற் பலர் 'பதினாயிரம்' எனவும், மற்றும் பலர் 'இருபத்து நாலாயிரம்' எனவும் கூறுவர். நம் சுவாமிகள் தம் பதினெட்டாம் வயதில் ஆசாரியனிட மிருந்தும் அரிய மந்திரமாம் 'இராம தாரக மந்திர' உபதேசம் பெற்றுத் தமது முப்பத்தெட்டாம் வயதில் தொண்ணூற்றாறு கோடியும் உருப்போட்டு முடித்து, 'இராமார்ப்பணம்' செய்து விட்டு, அப்பாலிருந்த தமது ஆயுட்கால மாகிய நாற்பத்தைந்து வருடங்களையும் இறைவனைக் குறித்துக் கீர்த்தனங்கள் பாடுவதிலேயே செலவிட்டு வரலாயினர். பகவானைக் குறித்து நாள்

ஒன்றுக்கு ஒரு கீர்த்தனமேனும் பாடி முடிக்காமல் உணவருந்துதல் வழக்கமில்லை எனப் பெரியார் கூறுவர். அவ்விதமாயின், அவரால் பாடப்பெற்ற கீர்த்தனங்கள் பதினுயிரத்திற்கு மேலாகவே இருத்தல் வேண்டும் அல்லவோ? மேலும் அவர் இராமபிரானுக்கு உற்சவங்கள் செய்யுங்காலும் மற்றும் பல சமயங்களிலும் அவ்வவ்வமயத்திற்குப் பொருத்தமுள்ளதாகப் பல கீர்த்தனங்களைப் பாடியுள்ளனர் என்பது அவரது அரிய சரிதை வாயிலாய் அறியக் கிடக்கின்றது. ஆதலால், பெரியார் பலர் கூறும் வகையான், அவரால் பாடப்பெற்ற கீர்த்தனங்கள் இருபத்து நாலாயிரம் என்பதும் ஒருவாறு ஒப்பத் தக்கதாகவே இருக்கின்றது. ஆயினும், இதுகாலை நாம் புத்தகங்களில் காண்பது ஏறக்குறைய எழுநூற்றுக்கும் குறைவான கீர்த்தனங்களே.

வேதங்கள் நான்கு, அவற்றின் அங்கங்கள் ஆறு, அறங்கள் முப்பத்திரண்டு, கலைகள் அறுபத்து நான்கு, தத்துவங்கள் தொண்ணூற்றாறு ஆகிய இவைகளை மக்களாய்ப் பிறந்த யாவரும் கற்கவேண்டியது கடன் என முன்னோர் மொழிந்துள்ளனர்.

அக்கர விலக்கணம், இலிகிதம், கணிதம், வேதம், புராணம், வியாகரணம், நன்னீதி, சோதிட—தரும—யோக—மந்திர—சகுண—சிற்ப—வைத்திய—உருவ சாத்திரங்கள், இதிகாஸம், காவியம், அலங்காரம், மதுரபாடனம், நாடகம், நிருத்தம், சத்தப்பிரம்மம் (நாதப்பிரம்மம்), வீணை, வேணு, மிருதங்கம், தாளம், அத்திர—அசுவ—இரத்தின—பூமி பரீட்சை (ஆராய்ச்சி)கள், சங்கிராம விலக்கணம், மல்யுத்தம், ஆகருடணம், உச்சாடனம், வித்துவேடணம், மதனசாத்திரம், மோகனம், வசீகரணம், இரத—காந்தருவ—பைபீல—கவுத்திக—

தாது—வாதங்கள், காருடம், நட்டம், முட்டி, ஆகாயப் பிர வேசம், ஆகாய கமனம், பரகாயப் பிரவேசம், அதிருசியம், இந் திர சாலம், மகேந்திரசாலம், அக்கினி—சல—வாயு—திட்டி—வாக்கு—சுக்கில—கன்ன கட்கத் தம்பங்கள், அவத்தைப் பிரயோகம், ஆய கலைஞானம் அறுபத்து நான்கினையும் கற்றுத் தேர்ந்த ஒருவன் கடவுள் தன்மை பொருந்தியவனாவன் என்பர்.

கீதம்—வாத்தியம்—நிருத்தம். ஆகிய மூன்றும் சேர்ந்ததே சங்கீதமென மேலோர் கூறுவர். மதுரபாடனம் முதலாக, தாளம் இறுதியாக உள்ளவை சங்கீதத்தைச் சார்ந்தவை. இதற்கு இசைநூல்—கான சாஸ்திரம்—காந்தருவ வேதம் எனப் பெயர் கூறுவர் பேரறிஞர். அவ்விதமாய சங்கீதத்திற்குள்ள அருமை—பெருமை—வலிமை—தகைமையினை அளவிட்டுக் கூறல் அரிதினும் அரிதெனக் கூறுதல் மிகையாகாது. அது, கல்லினும் கடிய மனத்தையும் உருக்கி—இளக்கி—கரைத்து விட வல்லது. கவலையைப் போக்கி உவகையை யளிக்கக் கூடி யது. எத்தகைய இன்னலை—துன்பத்தை — தாங்கொணாத் துயரையும் மறக்கச் செய்யும் ஒரு மாயப் பொடி யெனவும் அதைக் கூறலாம். இன்னோரன்ன பெருமை—பெருவலி பெற் றிலங்கும் சங்கீதமானது இயமன் கையிற் சிக்கிய உயிரையும் மீட்டு வருமெனில் வேறு ஒரு சான்றும் வேண்டற்பாலதோ?

பல்லாயிரக் கணக்கான இராகங்களால் சங்கீதமானது அலங்கரிக்கப் பெற்றொளிர்கின்றதென ஆன்றோர் கழறுவர்; இன்னின்ன இராகங்கள் இன்னின்ன குணங்களைத்—தன்மை யினைப் பெற்றுள்ளனவெனவும் புகல்வர். ஒவ்வோரிராகத்தை யும் இலக்கணமுறை பிறழாமல் பாடின், கேட்போர் மனத் திடை ஒவ்வொரு வகையான உணர்ச்சியினைக் கிளப்ப வல்ல தென அறியக் கிடக்கின்றது.

ஒரு காலத்து நம் சுவாமிகள் தமது குருவாகிய வேங்கட ரமண தாஸருடன் புதுக்கோட்டை சென்றனர். வித்துவான்களிடத்து வெகுவாக அன்பு கொண்டு ஆதரித்து வந்த அந்நாட்டிறைவன், அதுகாலே சங்கீத வித்துவான்களைக்கூட்டி, சங்கீதத்தில் அவரவர்க்குள்ள திறமையைப் பரீட்சித்து வந்தனன். அப்போட்டியில் தேறுபவரை யறிய ஒரு ஏற்பாட்டைச் செய்திருந்தனன். அதாவது, அவ்வவையின் நடுவே விளக்கொன்று வைக்கப் பெற்றிருந்தது. அவரவர்க்குள்ள சங்கீதத்தின் திறமையினுல் அவ்விளக்குத் தானகவே—தீக் குச்சியின் துணையில்லாமலே எரியும்படி செய்தல் வேண்டும் என்பதேயாம். அப்போட்டியில் கலந்து கொண்ட வித்துவான்கள் பலரும் தம்மாலியன்ற வரையில் பாடிப் பார்த்தனர். அவ்விளக்கு எரிவதாக வில்லை.

இவ்விதம் யாவராலும் கைவிடப்பெற்ற அப்பரீட்சையில் தேறும் வண்ணம் நம்சுவாமிகளை யனுப்பினர் வேங்கடரமண தாஸர். "என் ஆசாரியனது ஆசியும், இறைவனது அருளுமிருக்குமேல் எதைத்தான் செய்ய முடியாது?" எனவெண்ணி மனத்திடம் பூண்ட நம் சுவாமிகள், தாம் வழிபடும் நாதப்பிரம்மத்தைத் தம் மனத்தி லிருத்தினர். இலக்கண வழுவேற்படாமல் 'ஜ்யோதி ஸ்வரூபிணி' எனும் இராகத்தை ஆலாபனம் செய்யலாயினர். அவ்வளவில் அவ்விளக்கானது பேரொளி கொண்டு எரியத் தொடங்கியது. இராகத்தின் சஞ்சாரத்திற்கேற்ப அவ்விளக்கின் சுடரும் அதிகரித்தும், குறைந்தும் காணப்பெற்றது எனப் பெரியோர் கூறுவர். சங்கீதத்தின் பெருமைதான் என்னே!

நம் சுவாமிகள், கற்றாரைவிடக் கல்லாதாரிடத்தேதான் மிகுதியான அன்பு பூண்டிருந்தனர். வலி மிக்குடையோரைக்

காத்தலை விட வலியற்றோரைக் காத்தலே நனி சிறந்ததாம் அன்றோ?

"பாமர மக்களது பசையற்ற கடினமனத்திடை, உபதேசங்கள் எனும் நன்னீர்ப் பெருக்கினைப் பாய்ச்சிப், பரமனது அருளாகின்ற பெறற்கரிய பயனை அடைதற்காகும் பக்தியெனப்படும் பேரின்பப் பெருவிதையை விதைத்தற்குத் தகுதி பெற்றதாகப் பண்படுத்தி வந்தனர் நம் சுவாமிகள்" என்பர் ஆன்றோர்.

நம் சுவாமிகள் தம் சீடர் யாவரையும் சிறிதும் வஞ்சனையின்றித் தம்மால் இயன்றவளவு தேர்ச்சிபெறுவிக்கச் செய்தல் வேண்டுமெனத் தம்மனத்திற் கருதியவராயிருந்துவந்தனராம். தாம் சங்கீத சாஸ்திரத்தில் அடைந்துள்ள திறமை முழுவதையும் சிறிதும் மறைத்திடாமல் தம் சீடர் யாவர்க்கும் உபதேசித் தருளி யிருந்தனராம். இன்னின்ன இராகத்தை, இன்னின்ன வகையாக இன்னின்ன ஸ்வரங்களில் இன்னின்ன விதமாய்ப் பிடித்துப் பாடவேண்டுமெனவும் மிக விளக்கமாய்ப் போதித்து வந்தனராம்.

"தம்மைக் குருவாக வந்தடைந்த அறிவுள்ள சீடர் யாவரிடத்தும், தாம் அறிந்த விடயங்களை முழுதும் போதியாமல் ஒளிப்பவர் சுவர்க் கோழியாகப் பிறந்திடுவர்" எனும் அறநூற் பொருளைத் தம் சீடர்க்கு அடிக்கடி எடுத்தியம்புவராம்.

இவ்விதமாய்ச் சங்கீத உலகத்தைக் கேவலம் இசையளவில் நிறுத்தாமல், ஐயனிடத்தன்புப் பெருக்கை எழுப்பும் அரிய கீர்த்தனங்களாலும், 'ஸ்வர ஸாஹித்ய'ங்களாலும் பரிமளிக்கச் செய்தவரும்; சங்கீத சாஸ்திரத்திற்குப் புத்துயிரளித்த புண்ணிய புருடரும்; பெருமை மிக்க பக்த சீலரும்; பெரியாரிற் பெரியாருமாகிய தியாகராஜ சுவாமிகளது திருக்

கோயிலுக்குச் சென்று, வலம் வருவதாலும், அவரது திருவுரு வினைக் கண்ணாரக் காண்பதாலும், அவரால் இயற்றப் பெற் றுள்ள அமிழ்தினுமினிய அருள்நிறைந்த கீர்த்தனங்களை அன் பெழ நின்று நாவாரப் பாடுவதாலும், பிறர் பாட ஒரு மனம் பூண்டு நின்று செவியாரக் கேட்பதாலும், அன்னார் தம் அரிய சரிதையை விரும்பிப் படிப்பதாலும், பிறர் படிக்க விருப்புடன் கேட்பதாலும், கார்மேக வண்ணத் திருமேனியனுய கோதண்ட ராமனது திருவருளினைப்பெறும் கிடைத்தற்கரிய ஒரு பெரும் பாக்கியத்தை யடைந்து, என்றுமழியா அவனது இன்ப வீட் டையும் அடைதல் கூடும். ஆதலால், அன்னாரையும், அன் னாரது அரிய கீர்த்தனங்களையும் போற்றி வருதலை ஒரு கட மையாக நாம் கொள்வோமாக.

“ த்யாக ராஜ க்ருதம் புண்யாம்
கதாம் ஸாது மநோஹராம் |
யே ச்ருண்வந்தி நராலோகே
தேஷாம் ராம: ப்ரஸீததி ||

“சேர்ந்து சிரத்தையினைச், சோரா(து) அசூயையினை,
ஆர்ந்(து)இதனைக் கேட்கு(ம்)நரன் ஆனவனும்—தீர்ந்து,துயர்
அற்றே, அறிவெய்தும், அன்புடையோர் தம் கூட்டம்
பெற்றே மகிழும் பெருத்து ”

“தோன்றில் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று”

**“பொங்கும் மங்களம் எங்கும் தங்குக”**

**ஸ்ரீதியாகராஜ சுவாமிகள் திருவடிகளே துணை**

**சுபம்.**

# "சுகுணவதி"

## அல்லது

# "மனம் போல மாங்கலியம்"

## சில முக்கிய அபிப்பிராயங்கள்.

"சுதேசமித்திரன்"—சென்னை. (12-5—31.)

"சுகுணவதி" ஸ்ரீமான். மாங்கை. சா. கிருஷ்ணய்யரை நமது நேயர்கள் அறிவார்கள். அழகிய தமிழில் அடிக்கடி மித்திரனுக்கு அவர் பல கட்டுரைகள் எழுதியிருக்கிறார். இப்பொழுது சுகுண வதி அல்லது "மனம் போல மாங்கலியம்" என்ற பெயருடன் ஒரு நாவலை எழுதி வெளியிட்டிருக்கிறார். அது படிக்கப் படிக்க ரஸமாக இருப்பதுடன் பல நீதிகளைக் கற்பிக்கிறது. தமிழ் இலக் கியத்தில் அவருக்குள்ள பரிச்சயம் சமயோசிதமாக ஆங்காங்கு உப யோகப் பட்டிருக்கிறது. இடையிடையே சிரிப்பை விளைவிக்கும் விநோதங்கள் படிப்போரைக் களிப்பிக்கும். ஸ்ரீமான். எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடுவின் முன்னுரை, ஸ்ரீமான். வி. ஆர். ஸ்ரீநிவா ஸய்யங்காரின் மதிப்புரை, திருச்சி தமிழ் வித்துவான். வரதராஜை யங்காரின் சிறப்புப்பாயிரம், பி. எஸ். ஹைஸ்கூல் தமிழ் ஆசிரியர் ஸ்ரீமான். துரைசாமி அய்யரின் வாழ்த்து முதலியவைகளை இந் நூல் பெற்றிருப்பதுடன், அதனுடைய யோக்கியதையைக் கொண் டே நின்று நிலவு மென்று நம்புகிறோம்.

"ஹிந்து நேசன்"—சென்னை (16-5-31.)

தமிழ்ப் பாஷையில் பலபேர் பலவிதமான நாவல் என்னும் கற்பனைக் கதைகளை எழுதிவரும் இக்காலத்தில், தெற்றெனப் புலப்படும் நீதிகளைப் போதிக்கும் கதைகள் மிக்க அரியதாய் இருக் கின்றன. அன்றியும் அநேகர் தாம் எழுதும் கற்பனைக் கதை களுள் வாசக நேர்மையையும் பாஷையின் வனப்பையும் சிறிதே னும் கருதுவதில்லை. அப்படிப்பட்ட குறைகளுக்கு இடங்கொடா மல் நேரும் கூருமான நீதி போதனங்களைக் கற்றோர்க்கும் மற் றோர்க்கும் அணிந்துரைக்கும் செந்தமிழ் நடையில் ஆடவரும் மகளிரும் அன்போடேற்று அருளுடன் ஓதுதற்குரிய உத்தம நூலாக இது துலங்குகின்றது. இதனை இயற்றிய ஐயர் அவர்கள்

இந்நூலில் அமைத்திருக்கும் கதகர்களின் தன்மையை வாசகர்களே நன்கு அறியும் பொருட்டு, மெய்க்காதலன் மேன்மை எத்தன்மையதென்பதை வெகு அழகாகக் காட்டியிருக்கின்றார். மற்றும் தீயோரின் குணங்களைப் பற்றியும், நற்சகவாசத்தின் நலத்தைப் பற்றியும், செல்வச் செருக்கினால் விளையும் தீதினைப்பற்றியும் வெகு அழகாக இதனில் புனைந்திருப்பதைப் பார்க்கும் எவரும் இன்புறாதிருக்க மாட்டார்கள்; எனவே, கதையின் ஆரம்பமுதல் முடிவு வரையில் இன்சுவை கனிந்து இன்பம் திகழ்கின்றது.

* * * * * * * படிக்கப் படிக்க இன்பமூட்டும் இக்கற்பனைக் கதையின் தோரணையானது நல்லறிவு புகட்டும் தன்மையதாயிருக்கின்றதாதலின் நமது இராஜதானிக் கல்வி இலாகா அதிகாரிகள் மனமுவந்து இதனை மாணவர் மாணவிகளுக்குரிய 'நான் டிடயில்ட் ஸ்டடி'(Non-detailed Study) எனும் பகுதிக்கு உபயோகிக்க உத்தரவு பிறப்பிப்பது சாலவும் பொருத்தமாகும என்போம்."

"தமிழ் நாடு"—சென்னை (6-7-31.)

சுகுணவதி என்ற பெயருடன் கூடிய அழகிய கதைப்புத்தகமொன்று வரப் பெற்றோம். இதன்கண் நீதிக் கருத்துக்களே பெரும்பாலும் மிளிர்வதுடன், உலகியலில் நாடோறும் சர்வ சாதாரணமாக நடைபெறும் சம்பவங்களின் போக்கை யொட்டி அனுபவச்சுவை தோற்றப் பல பொது தர்மங்கள் நன்கு விளக்கிக் காட்டப் பெற்றிருக்கின்றன. உதாரணமாக, நல்லோர் எத்தகைய தீயவர் கூட்டத்தில் சேரினும் அன்னவரையும் உத்தமராக்கி விடுவரென்பதையும், தீயவழியில் தேடிய பொருள் பின்னர் நாசத்தையே அடையும் என்பதையும், அகதிக்குத் தெய்வமே துணை என்பதையும், இன்னோரன்ன நீதிகள் மிக்க தெளிவாக விளக்கப் பெற்றிருக்கின்றன. ஸ்ரீ. மாந்தை. சா. கிருஷ்ணய்யரே இதன் ஆசிரியராவர். இக்கதை முழுதும் கும்பகோணத்திலேயே நடைபெறுவதாகக் கொண்டு, அதன் முற்கால தற்கால சிறப்பையும் நன்கு வருணித்திருக்கின்றார். இத்துடன் மகாமகக் குளக் காட்சியும், ஸ்ரீ சாரங்கபாணி கோயிலும் கொண்ட அழகிய ஆப்டோன் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நூலின் எழுத்தும் நடையும் மிக்க தெளிவாகவும் எளிதாகவும் இருக்கின்றன. பல தமிழாசிரியர்களது மதிப்புரைகளுடனும் ஸ்ரீ. என். ஜி. இராமாநுஜலு நாயுடுவின் முகவுரையுடனும் திகழ்கிறது."

"தமிழர் நேசன்"—கோலாலம்பூர். (24—6—31)

இதன் ஆசிரியர் சுதேசமித்திரன், நவசக்தி முதலிய வர்த்தமானப்பத்திரிகைகளுக்கும், ராமகிருஷ்ணவிஜயம், விவேகபோதினி சிந்தாமணி போன்ற மாத சஞ்சிகைகளுக்கும், சில்லாண்டுகளாக விஷயதானம் செய்து பத்திரிகை உலகில் பழக்கப்பட்டவர். இவருடைய சுலபமும் எளிதுமான வசனநடை குற்றமற்றதா யிருக்கிறது. "நகமும் சதையும்" "உபமானம்," "வடிமடை திறந்தாற் போன்று மடமடவென மொழிதல்," "புட்டத்தில் புறங்காலிடிக்க விரைந்தோடலானேன்" முதலிய அடுக்குகளும் காணப்படுகின்றன. * * * இக்கதையில் காடுதிருத்தி நாடாக்கிக் குணசீலபுரத்தைக் கதாநாயகர் அமைத்த வரலாறு மிக அழகாய் இருக்கிறது. * * * * கடைசி அத்தியாயத்தில் விடியற்கால வர்ணனை வெகு அழகாகவும் இயற்கையாகவும் இருக்கின்றது. * * இறுதி வாக்கியங்கள் அழகாக அமைந்திருக்கின்றன. * * தமிழ்நடை வெகு சுத்தமாகவும் நயமாகவும் இருக்கிறது.

"அமிர்த குண போதினி"—சென்னை. (வால்-6-நெ. 63)

"சுகுணவதி"—பல பெரியோர்களின் நல்லபிப்பிராயங்களுடன் கூடிய இக்கதையைத் சிறுவர் சிறுமியர்கள் அனைவரும் சந்தோஷத்தோடும் வாசித்து இன்புறுவர். அவர்களுக்கென்றே இது ஆக்கப்பட்டுள்ளது. சிறுவர்களின் மனத்தில் சிக்கலான கற்பனைகளடங்கிய கதைகள் எளிதிற் படுவதில்லை. அவர்களின் சக்திக்கேற்றபடி கிரகிக்குந் தன்மையில் கதையின் போக்கு செல்வதுடன், நடையின் உயர்வும் அழகிய பதங்களின் ஜோடினையும் மிகு விருப்பத்தையூட்டும். படங்களின் அழகிய தோற்றமும் சிறுவர்க்கு நல்விருந்தாகும். பாடசாலைப் பாடபுத்தகமாக்குதற்கு இது ஏற்ற கதையாகும்."

CUDDAPAH,
31—7—31.

I have perused with much interest and pleasure Mr. M. S. Krishna Iyer's Tamil novel, SUGUNAVATHI. It is written in a clear and limpid style which is entirely free from the two fatal faults in style insipibity and pedantry. It has also attempted to take the common facts of life and invest them with a new meaning and charm.

It is thus an attempt to break new ground in the field of vernacular fiction which now abounds in unreal sex-problem stories, ridiculous and absard detective stories which are a worthless hybridised literary form, and absolute, unreal and dead romantic novels. I wise the author every success in his enthusiastic work.

(Sd.) K. S. RAMASWAMI SASTRI
*District and Sessions Judge, Cuddapah.*

"லோகோபகாரி" (6-8-31).

"ஸ்ரீமான் மாந்தை சா. கிருஷ்ணய்யர் இயற்றிய சுகுணவதி அல்லது மனம்போல மாங்கலியம் என்ற நாவல் வரப்பெற்றோம். இது நன்னெறி போதிக்கும் ஓர் நற்கதை யாகும். எளிய நடையில் எழுதப் பெற்றிருக்கிறது. சிறியோர்கட்கும் பெறியோர்கட்கும் நல்வழி புகட்டத்தக்க பற்பல நீதிகள் அடங்கி இருக்கின்றன. 170 பக்கம். நல்ல காகிதத்தில் அழகாக அச்சிடப் பெற்றிருக்கிறது. படங்களும் அடங்கி யிருக்கின்றன."

"பால விநோதினி" (31 st June '31)

இது மக்களுக்கு நல்ல நீதிகளையும் வாழ்க்கைக்குரிய துறைகளையும் எடுத்துக் காட்டும் இளிய தமிழ் நாவல். திடீரென்று பல ஆச்சரிய சம்பவங்களைக்காட்டி மயங்கவைக்கும் வழியில் அமையாது, படிப்பவர் எளிதில் அறிந்து உற்சாகத்தோடு ஒரு சிறு பாகமும் விடாமல் படிக்கத்தக்கபடி கதைப்போக்கு அமைந்திருக்கிறது. பல அறிஞர்களுடைய நல்ல அபிப்பிராயங்களுடன் கூடியதாய் இருக்கிறது. இதனை எழுதிய தமிழறிஞர் மாந்தை சா. கிருஷ்ணய்யர் அவர்கள். ஐயரவர்கள் இதுபோன்ற நூல் பல எழுதி வெளியிட இறைவன் கிருபை பெருகக் கடவது."

'விவேக போதினி' (பிரஜோற்பத்தி ஹு ஆடிமீ)

"சில தினசரிப் பத்திரிகைகளிலும், பல வாரப்பத்திரிகைகளிலும் சிறப்பாக நமது போதினியிலும் சில ஆண்டுகளாக இனிய சிறு

கதைகளும், மற்றும் அநேக அரிய கட்டுரைகளும் எழுதிவருவதன் மூலமாய் மாந்தை—ஸ்ரீமான் சா. கிருஷ்ணய்யர் அவர்கள் தமிழ் மக்கள் நன்மதிப்பைப் பெற்றிருக்கின்றார்.

இப்போது இவர் எழுதி வெளியிட்டிருக்கும் 'சுகுணவதி' என்னும் நவீனம், அவர் முதல் முயற்சியாயினும், பின்னும் அரிய நவீனங்களை வெளியிடுவாரென்பதையும், அவற்றைத் தமிழுலகம் நன்கு மதிப்பதில் சந்தேகமிராதென்பதையும் நிரூபிக்கின்றது. கேவலம் பொருளீட்டுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு இவர் இந்நூலை வெளியிட்டவரல்லர் என்பதை நாம் அறிவோம். ஆகையால், தமிழன்பர்கள் இந்நூலையும் இவர் வெளியிட விருக்கும் மற்றைய நூல்களையும் வாங்கி வாசித்து நற்பயனடைவாராக.

இப்புத்தகத்தின் வாயிலாகக் கடவுள் பக்தி, உண்மைக்காதல், நற்குணத்தின் பெருமை, தீயகுணத்தின் தாழ்வு, கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்னும் பல நீதிகள் இனிய நடையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. முத்து முத்தான எழுத்துக்களால், பெதர்வெயிட் என்னும் விலையுயர்ந்த காகிதத்தில் அச்சிடப்பட்டிருப்பதும் அழகிய போட்டோ படங்கள் சேர்க்கப்பட்டிருப்பதும் புத்தகத்தை இன்னும் மேம்படுத்துகின்றன. எவரும் புத்தகத்தைப் படிக்க ஆரம்பிப்பின், முடிவுகாணும்வரை கீழே வைக்க விரும்பார் என்று திட்டமாய்க் கூறுவோம்."

---

## இதன் விலை ரூபா ஒன்று.

கிடைக்கு மிடங்கள்:—

ஸ்ரீ கிருஷ்ண பப்ளிஷிங் ஹவுஸ், மயிலாப்பூர்.

சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

சுதேசமித்திரன் புத்தகசாலைகள் உள்ள எல்லா ரயில்வே ஸ்டேஷன்களிலும் கிடைக்கும்.

The B. N. Press, Educational Printers, Madras,—1932.

1151

*Copies can be had of :*

**Sri Krishna Publishing House,**
**Mylapore, Madras.**

**The Swadesamitran Office, Madras.**
**and Railway Station Book Stalls.**

**P. T. Pani & Co.,**
**565, Pycrofts Road, Triplicane.**

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE:

கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்-630 307